545

[Regd.] No. 2569

3 DEC 1931

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 2. | ஹிஜ்ரி 1350 ரஜப் 1931 டிசம்பர் ௴ | இதழ் 12

உள்ளடக்கம்   பக்கம்

1. ஸூரத்துல் இக்ரவ் ... 529
2. நாயக வாக்கியம் ... 532
3. சமூகப் புனருத்தாரணம் ... 533
4. நம்பிராட்டிமார்கள் ... 534
5. இஸ்லாமிய உலகம் ... 538
6. பாபர் சக்ரவர்த்தி ... 542
7. காப்பி அடிப்பதிலும் துவேஷமா ? ... 546
8. மௌலானாவின் நிரூபம் ... 554
9. இதுதான் மார்க்கசட்டப்படி விடை அளிப்பதோ? 557
10. ஹிபாஜத்துல் இஸ்லால் இரண்டாம் வால்யூம் ... 558
11. பொன் மொழிகள் ... 559
12. ஓர் அதிர்ஷ்டம் ... 560
13. ரசூலுல்லாஹ்வை பின்பற்றல் ... 561
14. சுகாதாரம்-புகைக்குடி ... 563
15. நஞ்சிரார்கட்கு நன்மதி ... 565
16. 20-வது நூற்றாண்டின் ஒளியில் கிறிஸ்தவ இருள் 567
17. தாவூதிய்யா கோஷ்டியினர் விடைபகர ... 569
18. மிஃராஜ் ஷரீப் ... 572
19. ஆசிரியர்குறிப்பு ... 575
20. சிலோன் நேயர்கட்கு ... 576

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4 0 0
தனிப் பிரதி	...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

SCANNED

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 2	ஹிஜ்ரி 1350 ரஜப் மீ 1931 ௵ டிசம்பர் மீ	இதழ் 12

3 DEC 1931

ஸூறாத்துல் இக்ரவ்.

(சென்ற மாதத்தொடர்)

இதன் ஆறுவது வாக்கியத்தின் ஆரம்பத்தில் "கல்லா" (காரியம் அவ்வாரன்று) என கூறப்பட்டிருக்கிறது. முதலாவது எவ்வாக்கியத்தில் இவ்வார்த்தை உபயோகிக்கப்பட்டிருகின்றதோ அவை "மக்கீ" யாகுமென்று தெரிந்துகொள்ளவேண்டும். மதீனாவில் வெளியானவைகளில் இவ்வார்த்தை அறவே உபயோகிக்கப்பட்டிராது. ஏனெனில் இஃது கோபம், கொடூரம் இவைகள் மீது அறிவிப்பனவாகும். மதீனாவில் நாயகம் (ஸல்.) அவர்கட்கு வழிப்பட்டு நடப்பவர்களே மிகுதமாகயிருந்தனர்; அவர்களது நிர்ணயங்களெல்லாம் ஒழுங்கானதாகவேயிருந்து; ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களினின்று தவறுதல் ஏற்படின் அதை உடனே நிவர்த்தி செய்து விடுபவர்களாக இருந்ததுடன் உபதேசங்களை ரொம்ப தாழ்மையாகக் கேட்டு அவைகளை அனுஷ்டிப்பவர்களாகவு மிருந்தார்கள். ஆதலின் அவர்களுக்கிடையே எவ்வித அகங்காரம், பொறுமை முதலிய துர்குணங்கள் இல்லாதிருந்தது. மக்கா வாசிளிகலனேகர் ஆண்டவனது கட்டளைக்கு மாறு செய்பவர்களாகவும் அவனது பகைவர்களாகவுமிருந்தார்கள். அவர்கட்கு ஏதாகிலும் எச்சரிக்கை செய்ய நேரிடுங்கால் இவ்வாருள்ள வாக்கியங்கள் உபயோகிக்கும்படி நேர்ந்தது. இரண்டாவது குர்ஆன் ஷரீபின் முற்பகுதியில் இவ்வார்த்தை அறவே கிடையாது. பிற்பகுதியில் ஆதிலும் பிந்திய அத்தியாங்களில் தான் அவை மிகுதமாகக்காணப்படுகின்றது. ஏனெனில் ஆரம்பமாக சமாசாரங்களை தெரியப்படுத்துவதும் நேர்வழி காண்பிப்பதும் சாதாரண விதமாகயிருக்கவேண்டும். எது பொழுது ஒரு மனிதன் குர்ஆன் ஷரீபின் பகுதியை ஓதி அதன் கருத்துக்களை நல்லவிதமாகத் தெரிந்து அதன்படி அனுஷ்டானம் புரியவில்லையோ அவன் கோபமானவும் கடுடூரமானவுமான வார்த்தைகளைக் கொண்டு கண்டிக்கப்படுவதற்கு பாத்தியஸ்தனாகஆய்விடுகின்றான். ஆகையால்தான் குர்ஆன் ஷரீபின் கடாசி அத்தியாயங்களில் இவ்வார்த்தையை உபயோகிப்பது ஆவசியமாயிற்று. இதற்காகத் தான் ஏராகினும் கெடுதியான ஒரு காரியம் செய்வானாகில் ஆரம்பமாக அவனுக்கு நல்லு

பதேசம் செய்கின்றனர்; அவ்வுபதேசத்தை சிரமேற்றாங்கி கெடுதியை விட்டு தவிழ்ந்து நடப்பானுகில் அவன் ஜெயம்பெற்றவனுய் விடுகின்றான். அவ்வாறின்றி அவனுக்கு அவ் வுபதேசம் யாதொரு பிரயோஜனமுமளிக் காது போமாயின் தெண்டனை கொடுக்கப்படு வதற்கு பாத்தியஸ்தனுய் ஆய்விடுகின்றான். மானிடன் ஏழையாகவும் தேவையுள்ளவனுக வும் மிடிமைத்தனமுள்ளவனுகவும் ஆய்விடு வதற்குக்காரணம் ஆண்டவனது கிருபை யில் லாமைதான் என நினைத்துக் கொண்டிருப்ப தால் "காரியம் அவன் எண்ணுகிறப் போலன்று; அவனது எண்ணம் தவறுகும் அதற்குள்ள காரணம் வேறுயிருக்கிறது" என்பதை அறிவிப்பான் வேண்டி "கல்லா" எனும் பதத்தை உபயோகித்துக் காண்பிக் கின்றான்.

மானிடன் ஆண்டவனுக்கு மாறுசெய்து அக்கிரமம் புரிவதற்கு காரணம் அவன் தன்னை ஐஸ்வரியனுக காண்பதாகுமென இவ் வாக்கியத்தில் கூறப்பட்டிருப்பதால் சிலருக்கு ஒரு சந்தேகம் உண்டாகலாம். அதாவது:— மாபெரும் சஹாபாக்களாகிய ஹஸ்ரத் அப் துர் றஹ்மான் பின் அவ்ப், அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உதுமான்(ரலி.)போலொத்த கீர்த்தி வாய்ந்தோர்கள் ஏன் இவ்வலையில் சிக்குண்டு போகவில்லை; ஹஸ்ரத் சுலைமான் (அலை.) அவர்களுக்கு அளவற்ற-மட்டிலடங்காத ஐஸ் வரியம் கொடுக்கப்பட்டிருந்தும் இன்னோ ரெல்லாம் மார்க்கபக்தர்களாக எவ்வாறு விள ங்கினர்" என்பதாகும். இதற்கு கீழ்வருமாறு விடைபகர்வதுகொண்டு அச்சந்தேகம் நிவர்த் தியாய்விடும். அஃதாவது "இவ்வாக்கியத்தில் ஐஸ்வரியம்தான் மானிடன்வழிகெடுவதற்கு காரணமென்று கூறப்படவில்லை; ஆனுல் அவன் தனக்குக் கிடைத்துள்ள ஐஸ்வரியத் தின் காரணமாக பிரரளவில் தேவையற்றவ னுக தான் ஆய்விட்டதாக எண்ணிக்கொள்வ துடன், ஆண்டவன் இன்னோனுக்கு அளித் துள்ள ஐஸ்வரியமானது ஆண்டவனின் கிருபையால்கிடைத்ததல்லவென்பதாகவும்; தன் சொந்த முயற்சியின் பயனுய்த்தான் கிடைத்தனவென்றும் எண்ணிக்கொள்வது தான் இன்னோன் அக்கிரமம் புரிவதற்கு காரணமாய் விடுகின்றது. ஹஸ்ரத் சுலைமான் (அலை.) அவர்களும் ஏனைய சஹாபாக்களும் பெரும் ஐஸ்வரியவான்களாகயிருந்தும் இவ் வாருள்ள கெட்ட எண்ணங்களை விட்டு அவர் கள் தூய்மையாக இருந்ததோடில்லாமல் அம் மகான்களின் நடவடிக்கையானது எவ்வாறு சிறப்புற்றிலங்கியதென கவனிக்குங்கால் வேறு யாரும் அவ்வாறு நடந்துகொள்ள வில்லை என்பதை நன்கு தெரிந்துகொள்ள லாம்" என்பதாகும்.

இதன் ஒன்பது பத்தாவது வாக்கியங்க ளில் ஆண்டவனின் அடியான் தான் நாடிய பொழுது தன் நாயனை வணங்குவதைவிட்டு தடுத்துக்கொண்டிருப்பவனை பார்த்தீரா? என வினவப்பட்டிருக்கிறது.இன்னோன் அபூ ஜஹ்லாகுமென்று கூறப்படுகிறது. அதாவது அன்னோன் எத்தனையோமுறை நாயகம் (ஸல்.)அவர்கள் மஸ்ஜிதஹராமில் தொழுகை நிறைவேற்றுவதைப் பார்த்து அதைதடுத்து வந்ததுடன் "இனி ஒருமுறை நெற்றி பூமி யில் வைக்கப்படுவதைப் பார்ப்பேனுகில் கழுத்தைத் துண்டித்து விடுவேன்" என்றும் சொல்லிக்கொண்டிருந்தான். இவ்வாறு அவன் அதிக்கிரமமான வார்த்தை யாடிக் கொண்டிருப்பதை கேள்விவுற்ற நாயகம் (ஸல்.) அவர்கள் அவன் விஷயமாய் இறக்கி வைக்கப்பட்ட வாக்கியங்களை ஜனங்களுக்கு ஓதிக்காண்பித்தார்கள். இச்செய்தி அன் னோனுக்கெட்டியவுடன் அம்மூதேவி கோபம் மேலிட்டவனுய் நாயகம் (ஸல்) அவர்கள் சமீ பஞ்சென்று மரியாதைக் குறைவான வார் தைபேச ஆரம்பித்து "யாருக்கு பயம் காண் பிக்கின்றீர்? நான் நாடுவேனுகில் இப்பெ ரும் மைதானத்தை குதிரைவீரர், கால் நடை சிப்பாய் முதலியவர்களைக்கொண்டு நிரப்பி விடுவேன்; ஆனுல் உம்மையும் உம்மைத் துயர்ந்தோர்களையும் எதிர்ப்பதற்கு காலை மாலை நேரங்களில் என்னுடன் கூடியிருப்ப வர்களே போதுமானவர்களாகும். அவர்களை அழைப்பேனுகில் உம்முடைய இரகசியமெல் லாம் நன்கு தெரிந்துவிடும்" எனக்கூறினுன். அன்னோனுக்கு விடைபிறுத்து அவனது அகம்பாவத்தை அடக்குவதற்காக "அவன் நாடினுல் காலைமாலை சதாநேரமும் அவனுட னிருப்பவர்களை அழைத்து தம் மரணத்தி னின்று தப்புவிப்பதற்கும்; தன் உயிரை கைப்பற்றுகிறவருடன் எதிர்ப்பதற்கும் வேண்டிய முயற்சி எடுத்துப் பார்க்கட்டும்; நாமும் அவர்களை எதிர்ப்பதற்காக ஜபானி

யாக்களென்னும் மலக்குகளை அழைக்கின்றோம்'' என ஆண்டவன் கூறுகின்றான். கடாசியாக அந்த மூதேவியின் கதி அதோகதியாகத்தான் முடிந்தது. அஃதாவது "பத்ர்'' யுத்தத்தில் அவன் கொல்லப்பட்டுப் போனவுடன் நாயகம்(ஸல்.) அவர்களின் கட்டளைப் பிரகாரம் சஹாபாக்கள் அம்மூதேவியின் காதில் துளையிட்டு அதில் கயற்றை மாட்டி அவன் கொல்லப்பட்ட இடத்திலிருந்து அகுசையான பாளடைந்த ஓர் கிணறுவரை இழுத்துவந்து அவனது முன்னெற்றி ரோமத்தைப் பிடித்திழுத்து அக்கிணற்றிற் போட்டுவிட்டார்கள். அவன் உயிர் ஜடலத்தைவிட்டுப் பிரிந்தவுடன் நரகத்திற்காக ஏற்படுத்திவைக்கப்பட்டிருக்கும் மலக்குகள் அவனுக்கு தக்க வேதனை கொடுக்க ஆரம்பித்தார்கள். இவ்வாறு அவன் கஷ்டப்படும் நேரத்தில் சதா அவன் சன்னிதானத்தில் வீற்றிருந்தோரில் எவரும் அவனுக்கு உதவிபுரிந்து அவன் கஷ்டத்தை நிவர்த்திசெய்யமுடியாதுபோயிற்று. அம்மூதேவி தன்னால் ஏண்டமட்டும் நாயகம் (ஸல்.) அவர்கள் தொழுதுகொள்வதை விட்டு விலக்கிக் கொண்டிருந்தானெனினும் "சஜ்தா'' சிரவணக்கம் புரிவதில்தான் அவனுக்குமுழு ஆக்ரோஷமும் ஏற்பட்டிருந்தது. ஏனெனில் அவன் மிதமிஞ்சிய அகப்பெருமை கொண்டிருந்ததால் ஒரு மனிதன் தலை சாய்த்து வணங்குவதைப் பொறுத்தக் கேடாக எண்ணிக்கொண்டிருந்தான். இவ்வாருள்ள அவனது எண்ணத்தை அகற்றவும் அவனை அவமானப்படுத்தவும் இதன் 19-வது வாக்கியத்தில் உன் நெற்றியைத் தாழ்த்தி அதை எனக்காக தாழ்மையோடு பூமியின் மீது வைத்து நன்றி பாராட்டுவீராக'' என நாயகம் (ஸல்.) அவர்களுக்கு ஆண்டவன் கட்டளை பிறப்பித்துள்ளான். தவிர அவ்வாறு சிரவணக்கணம் புரிவது ஆண்டவரின் சன்னிதானத்தில் முடுகுதுலாவற்குக் காரணமாகயிருக்கின்றது. ஆதலினாற்தான் அதை நிறைவேற்றும்படி ஆண்டவன் கட்டளைபிறப்பித்து அவ்வாறு செய்வதுகொண்டு நாயகம் (ஸல்.) அவர்கட்கு ஆண்டவனது சன்னிதானத்தில் பெரும்பதவி கிடைப்பதுடன் அவர்களின் பகைவனுக்குத் தானே தாழ்மை ஏற்பட்டுவிடும் என்பதற்காக அவ்வாறுகூறியுள்ளான். இந்த வாக்கியமானது ஸஜ்தாவின் வாக்கியமாகும்; இதை ஓதுவது கொண்டு ஓதியவர் கேட்டவர் யாவர்மீதும் சஜ்தா கடமையாகின்றது.

"எந்தநேரத்தில் முஹம்மதாகிறவர் (ஸல்.) கஃபத்துல்லாஹ்வின் முன்நின்று சஜ்தா செய்கின்றாரோ உடனே எனக்கறிவியுங்கள்; அதுபொழுது நான் அங்குவந்து அவருடைய பிடரியின்மீது கால்வைத்து அழுத்தி கழுத்தை முறித்துவிடுகிறேன்'' என அபூஜஹ்ல் கூறினான். இதற்குப்பின் ஒருநாள் நாயகம் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லாஹ் ஷரீபின்முன் நின்று தொழுதுகொண்டிருந்தார்கள். இதைப்பார்த்து அந்த மூதேவியிடம் தெரிவித்தனர். அவன் தான் கூறிக்கொண்டிருந்ததற்கேற்ப அங்குவந்து நாயகம் (ஸல்.) அவர்கள் திருசமுகஞ் சென்று மரியாதைக் குறைவாக நடந்துகொள்வதற்கு ஆரம்பித்து முன்சென்றான். உடனே தன் இருகைகளையும் முகத்தின் முன்வைத்து மறைத்துக்கொண்டு பின்னோக்கிவந்தான். அதுபொழுது பயங்கரமான ஓர் வஸ்த்துவைப் பார்த்து பயந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு எத்தனிப்பவன்போல் காணப்பட்டான். பின்னும் இவ்வாறு இருமுறை முன்சென்றும் பயந்து பின்னாலேயே வந்துவிட்டான். இச்சம்பவத்தைப் பார்ப்பதற்காக ஆங்கு கூடியிருந்தவர்கள் யாவரும் நிகழ்வுற்ற சம்பவங்களைப்பார்த்து ஆச்சரியமுற்றவர்களாய் அவனிடம் வினவினர். அதற்கு அன்னோன் "எனக்கும் முஹம்மதுக்கும் (ஸல்.) இடையில் நெருப்பினால் நிறப்பப்பெற்ற ஒரு கிடங்கு தென்படுகின்றது. அதற்குச் சமீபத்தில் மலக்குகள் வீற்றிருக்கின்றனர். அதில் ஒரு பெருமாண்டமான பாம்பிருந்துகொண்டு என்பக்கல் விரைந்து செல்வதற்கு எத்தனிக்கின்றது. அதனால் எனக்கு பெரும் பயம் ஏற்பட்டு நான் அங்கு தாமிப்பதற்கு இயலாதிருக்கின்றது. இன்னும் சற்று அங்கு தங்கியிருப்பேனாகில் அங்குள்ள தீயில் எறிந்துபோயிருப்பேன் அல்லது அந்தப் பாம்பானது என்னை விழுங்கிவிடும். தவிர அந்த மனிதன் பெரும் சூனியக்காரனாகயிருக்கின்றான் என அபூஜஹ்ல் கூறியதாக ஹதீதுஷரீபில் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருப்பது காணலாம். இச்செய்தியை நாயகம் (ஸல்.) அவர்கள் கேட்டு "அந்த மூதேவி என்சமீபம் வந்திருப்பானாகில் அவனை மலக்குகள் துண்டந்துண்டமாக ஆக்கியிருப்பார்கள்;

அவன் உயிருடன் ஒருக்காலும் திரும்பமாட்டான்'' எனக்கூறினார்கள்.

இவ்வத்தியாயத்தின் முந்திய ஐந்து வாக்கியங்கள் ஆரம்பமாக குர்ஆன்ஷரீப் இறக்கி வைக்கப்பட்ட நேரத்தில் இறங்கியதாகும். மீதமுள்ள பதினுங்கு வாக்கியங்களும் சில நாளைக்குப்பின் அபூஜஹ்ல் விஷயமாக இறங்கியதாகும். என்றாலும் ஆண்டவன் கட்டளைப் பிரகாரம் இவைகள் முதலில் இறக்கப்பட்ட ஐந்து வாக்கியங்களுடன் சேர்க்கப்பட்டுப் போயிற்று. அல்லாஹ் அஃலம்.

நாயக வாக்கியம்.

இரு நற்குணங்க ளிருக்கின்றன; அவை இரண்டைப் பார்க்கினும் மேலான-நல்ல யாதொரு வஸ்துவுங் கிடையாது. அவை (1) அல்லாஹ்வின்மீது ஈமான் (உறுதி) கொள்வதும் (2) முஸ்லிம்கட்கு பிரயோசன மளிப்பதுமாகும். (ஆண்டவன்மீது ஈமான் கொள்வதென்பதில் நாயகம் (ஸல்.) அவர்கட்கு வழிப்பட்டு நடப்பதும், ஆண்டவனது கட்டளையை சிரமேற்றாங்கி நடப்பதும் சேர்ந்திருக்கின்றன.)

இரு கெட்டகாரியங்க ளிருக்கின்றன; அவை இரண்டைப் பார்க்கினும் வேறு யாதொரு கெட்டவஸ்துவுங் கிடையாது: அவை (1) ஆண்டவனுக்கு இணைவைப்பதும் (2) இதர முஸ்லிம் சகோதிரர்கட்கு நோவினை கொடுப்பதுமாகும்.

இவை ஒரு ஹதீதின் இரண்டு துண்டுகளாகும். இதில் எல்லாவற்றைப்பார்க்கினும் முக்கியமானவிஷயம் அல்லாஹ்வின் மீது ஈமான் (உறுதி) கொண்டு அவனுக்கு இணைவைப்பதைவிட்டு தப்புகிறதா யிருக்குமென்றும்; அதற்குப்பின் முஸ்லிம் சகோதிரர்கட்கு பிரயோசனமுண்டாகுமாறு உதவி புரிந்து அவர்கட்கு கெடுதி விளைவிப்பதை விட்டுப் பின்னடைவதாகுமென்றும் கூறப்பட்டிருப்பதை நன்கு தெரிந்துகொள்ளலாம். ஆதலின் முஸ்லிம் சகோதிரர்கட்கு நலன்புரிவது மாபெருங் காரியமென நன்கு புலனுகின்றது. இதற்காகத்தான் "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதிரனுகும்; ஆதலின் அவனுக்கு அநியாயஞ் செய்யாமலிருப்பதும்; அவன்கஷ்டத்தில் சிக்குண்டுழலாமலிருக்கும்படி செய்வதும் மற்றோர் முஸ்லிமின் கடமையாகு''மென நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆதலின் எவனொருவன் தம் முஸ்லிம் சகோதிரனின் நாட்டங்களை நிறைவேற்றி வைக்கின்றானே அவனின் நாட்டங்களை ஆண்டவன் நிறைவேற்றிவைக்க பொறுப்பேற்றுக்கொள்கின்றான். எவன் ஒரு முஸ்லிமின் துக்கங்களை நீக்கிவைக்கின்றானே ஆண்டவன் அவனின் துக்கத்தை மறுமைநாளில் நீக்கி விடுவான்.

மேலே கூறப்பெற்ற நாயக வாக்கியத்தில் ஒரு முஸ்லிமுக்கு மற்றவன்மீது ஏற்பட்டுள்ள கடமை இன்னதென்பதையும், ஒரு முஸ்லிம்மீது மற்றானுக்கு எவ்வளவு பொறுப்பேற்பட்டிருக்கிறதென்பதையும் விளக்கிக் காண்பிப்பதற்காக முதலாவது ஒரு முஸ்லிம் மற்றோர் முஸ்லிமின் சகோதிரனுகுமென்றும்; அவன் தன் சகோதிரனுடன் எவ்வாறு ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளவேண்டியது அத்தியா அவசியமாகுமோ அத்தன்மைபோல் தன் முஸ்லிம் சகோதிரனுடனும் நடந்துகொள்ள வேண்டியது இன்னானின்மீது ஏற்பட்டுள்ள கடமை என்பதாகவும்; தன் சகோதிரனுக்கு ஏதாகிலும் சங்கடம் நேரிட்டுவிடின் அதை நிவர்த்தி செய்வதற்கு எவ்வாறு முயற்சிக்கின்றானே அத்தன்மைபோல் தன் முஸ்லிம் சகோதிரர்கட்கு ஏற்படும் கஷ்டசங்கடத்தை நிவர்த்திசெய்வதற்கு முற்படல் அத்தியா அவசியமெனவும் கூறப்பட்டிருப்பது காணலாம்.

இத்தூய்மை வாய்ந்த நாயக வாக்கியத்தைக் கேட்டபின் எந்த முஸ்லிமும் தன் முஸ்லிம் சகோதிரனுக்கு நன்மை புரியாமல் ஒருக்காலுமிருக்க மாட்டானென்பது திண்ணம்.

حفاظة الإسلام مدراس

சமூகப் புனருத்தாரணம்.

தற்கால முஸ்லிம் சமூகம் கல்வி, செல்வம், பொருளாதார நிலை முதலிய சகல துறைகளிலும் வெகு தூரம் பின்னடைந்து கிடக்கிறதென்னும் உண்மையை நம் சமூகத்தலைவர்களன்றி சாமான்யரும் நன்குணர்ந்திருப்பதின் காரணமாக பெரியார்கள் அதைச் சீர்திருத்தி ஒழுங்குபடுத்த முற்பட்டு அவ்வேலையில் ஈடுபட்டு அல்லும்பகலும் ஓயாது உழைத்து வருகின்றனரென்பது வெள்ளிடை. இது விஷயமாய் தற்சமயம் நம் முஸ்லிம் சமூகத்தினிடையே ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியின் காரணமாக பற்பல மகா நாடுகள் நடத்துவதற்கு செய்யப்பட்டு வரும் பிரயத்தனங்களையும், சிற்சில இடங்களில் மகா நாடுகள் நடைபெற்று வருவதையுங் காணலாம். இதை நாம் வரவேற்பதுடன் அம்மகா நாடுகளை நடத்தும் பெரியார்களும் சமூக முன்னேற்ற சேவையில் ஈடுபட்டுழைக்கும் தலைவர்களும் நம் சமூகத்தின் தற்கால நிலைமையை உத்தேசித்து அதை நிவர்த்திப்பதற்கு தக்க பரிகாரந் தேடுவதில் இன்னும் அதிக கவனமும் ஊக்கமும் செலுத்தவேண்டியது அத்தியாவசியமெனவும் கருதுகின்றோம்.

வட இந்தியாவென்ன ! நம் தென்னிந்தியாவில் மட்டும் முஸ்லிம் சமூகத்தினரால் நிறுவப் பெற்றுள்ள சங்கங்கள் சுமார் 500-க்கு மேலிருக்கலாம். இவைகளின் ஆதரணையைக் கொண்டு நம் நாட்டில் சமூகப் புனருத்தாரணச் சேவை மிக நேர்த்தியான முறையில் செய்வது சாத்தியமெனினும் இவைகளுக்கிடையில் ஐக்யத்தை உண்டுபண்ண ஓர் தலைமை ஸ்தாபனம் இல்லாக்குறையின் காரணத்தினாலேயே நம் சங்கங்களின் மூலம் எவ்வளவு நலன் ஏற்படக்கூடுமோ அவ்வளவும் ஏற்படாமல் இருப்பதைக் காண்கின்றோம். இதற்காக நம் தென்னாட்டிற்கென்று மாகாண சங்கமொன்று ஏற்பட்டு அத்துடன் ஜில்லா தாலூக்கா கிராம சங்கங்களை இணைத்து சமூகப்புனருத்தாரண சேவையிலீடுபடுவதற்கு முயற்சித்தல் பலன் தரத்தக்கனவாகும். ஆங்காங்கு தற்போது காணப்படும் நம் முஸ்லிம் சங்கங்கள் பல்வேறு நோக்கங்களைக்கொண்டு ஏற்படுத்தப் பெற்றிருப்பினும் பொது விஷயமான சமூகப் புனருத்தாரண சேவையிலீடுபட்டுழைக்க அச்சங்கங்களுக்கு ஆட்சேபனை இராதென்றே நினைக்கின்றோம். ஆனால் இவைகளை நல்ல முறையில் அமைத்து வேலைசெய்வதற்கு முதலாவது நம்மில் ஒற்றுமை அத்தியாவசியமாகும். ஏனெனில் ஒற்றுமையோடு வாழா எத் தேசத்தினரும் எச் சமூகத்தினரும் காரியசித்தி அடைய முடியாதென்பது திண்ணம். எனவே மானிட வர்க்கத்தினர் தாங்கள் கோரி நிற்கும் காரியம் சித்திபெறுதற்கு ஒற்றுமை மிகமிக அவசியமாகும். ஒற்றுமை நிலவி நிற்கும் தேசங்களின் மக்கள், ஜாதியினர் க்ஷேமமுற்று தினே தினே முன்னேறிச்சென்றுகொண்டிருக்கும் காக்ஷிகளையும் அவர்கள் பெற்றுய்யும் நாகரீகத்தினையும் வேற்று காணப்படும் தேசத்தினர், சமூகத்தினர் படும் பாடுகளையும் அவர்கள் மற்றோர்களால் இகழப்படும் காக்ஷிகளையும் நாம் கண்ணாரக்கண்டு வருகின்றோம்.

ஆதலின் நாம் சமூகப்புனருத்தாரணஞ் செய்ய விருப்பங்கொண்டவர்களாயிருப்போமாகில் முதலில் நமக்கிடையே காணப்படும் கக்ஷிப்பிரிவினைகளை அகற்றி நம்மை மற்றவர்களுடன் சேர்ந்து வாழும்படியான தன்மையில் பழக்கித் தயாரித்துக்கொண்டு அதன் பின் நாம் கோரி நிற்கும் காரியத்திலீடுபடுவோமாகில் கூடிய சீக்கிரம் காரியசித்தி பெறலாமென்பதி லய்யமில்லை.

நம் பிராட்டிமார்கள்

(சென்ற மாதத்தொடர்)

(4) ஹஸ்ரத் ஹப்ஸா நாயகி (ரலி.)

ஹப்ஸா நாயகி அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களுடைய அருமைப் புதல்வியாவர். நாயகியின் தாயாரின் பெயர் ஜைனப் பிந்து மத்ஊன் என்பதாகும். நபித்துவத்திற்கு ஐந்து வருடங்கள் முன் அதாவது குறைஷிகள் கஃபதுல்லாவை புதுப்பித்துக் கட்டிக்கொண்டிருந்த வருடந்தான் ஹப்ஸா நாயகி பிறந்தார்கள். இவர்களது முதல் கல்யாணம் கனீஸ்பின் ஹூதாபா என்பவருடன் ஆகி இருந்தது. இன்ன வருடனே தான் ஹப்ஸா நாயகி ஹிஜ்ரத்சென்றார்கள். கனீஸ் அவர்கள் பத்ரு யுத்தத்தில் காயப்பட்டு அப்படியே வீடு திரும்பி வந்து அதே காயத்தினால் ஷஹீதாகி விட்டார்கள். கனீஸின் ஞாபகார்த்தமாக ஹப்ஸா நாயகியின் வயிற்றினின்று குழந்தையொன்றும் ஜனிக்கவில்லை.

ஹஸ்ரத் ஹப்ஸா விதவையாகிவிட்ட பின்னர், இவருக்கு மருமணஞ் செய்து வைக்க வேண்டுமென்று ஹஸ்ரத் உமர் (ரலி.) கவலை கொண்டார்கள். அதுகாலை ஹஸ்ரத் ருகிய்யா மரணித்து விட்டார்கள். எனவே ஹப்ஸா நாயகியை மணந்துக்கொள்ளுமாறு ருகிய்யாவின் கணவரான ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்களிடம் உமர் (ரலி.) அவர்கள் கூறினார்கள். அதற்கு உதுமான் (ரலி.) அவர்கள் "யான் இது விஷயமாய் யோசித்துப் பின் தெரிவிக்கின்றேன்" என கூறிவிட்டார்கள். அதன் பின் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி.) அவர்களிடம் சென்று தாம் கொண்டிருக்கும் விருப்பத்தை வெளியிட்டார்கள். அவர்களும் இதைக் கேட்டு மௌனமாய் இருந்து விட்டனர். இந்த உதாசினத்தைக் கண்ட ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களுக்குச் சிறிது வருத்தம் ஏற்பட்டது.

அதன்பின் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் ஹப்ஸா நாயகியை தாமே மணந்துக் கொள்ள விருப்பமிருப்பதைத் தெரிவித்தார்கள். அதன்படியே நிகாஹ்வும் நிறைவேறிற்று. இதன் பின் ஒரு முறை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி.) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களைச் சந்தித்துக் கூறியதாவது:—

"ஹப்ஸாவின் விவாகத்தைப் பற்றி தாங்கள் முன்னர் என்னிடம் தெரிவித்தபோது யான் மௌனமாய் இருந்துவிட்டேனல்லவா? அஃது தங்களுக்கு அதிருப்தியாய் இருந்திருக்கலாம். ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் ஹப்ஸா (ரலி.) விஷயமாய் தங்கள் விருப்பத்தை என்னிடம் வெளியிட்டிருந்தார்கள். இந்த இரகசியத்தை முதலிலேயே வெளியிட்டு விடக்கூடாதென்றுதான் யான் தங்களுக்கு யாதொரு பதிலும் கூறாமல் மௌனமாய் இருந்து விட்டேன். அப்படி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹப்ஸா நாயகியை மணந்துக் கொள்ளாமலிருந்து விடுவதானால் அதற்கு யான் முன்வரத் தயாராகவே இருந்தேன்" என்று சமாதானம் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹப்ஸா நாயகி ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களுடைய புத்திரியாயிருந்தமையால் இவரது சுபாவத்தில் சிறிது துணிச்சலான தன்மை இருந்து வந்தது. நிற்க, ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களுக்கு நிகழ்ந்த சம்பவ

மொன்று புகாரிஷரீபில் பின்வருமாறு காணப்படுகிறது. அவர்கள் கூறியதாவது:—நாம் அறியாமைக் காலத்தில் பெண்களை ஒருபொருளாக மதிக்காமலிருந்து வந்தோம். ஒரு நாளன்று யான் ஒரு விவகாரத்தைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன்; அதுசமயம் என்மனைவி குறுக்கிட்டு எனக்கு ஆலோசனை கூறினள். "இந்த விவகாரத்தில் தலையிட்டுப் பேச உனக்கென்ன சம்பந்தமுண்டு" என கண்டித்தேன். அதற்கு என் மனைவி "தாங்கள் என் பேச்சை சற்றும் அங்கீகரிப்பது கிடையாது. ஆனால் தங்கள்குமாரத்தி ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களுக்கு சரியான பதில் சொல்லிக்கொண்டிருப்பது தங்களுக்குத் தெரியாதா?" என்றனர். உடனே யான் அவ்விடத்தைவிட்டு எழுந்து ஹப்ஸாவிடம் சென்று 'குமாரத்தி! நீ ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் சொல்லிக் கொண்டிருப்பதாகவும்; அதனால் அவர்கள் தினமும் கவலையுடையவர்களா யிருப்பதாகவும் கேள்விப்படுகின்றேனே! அஃதென்ன?' என்று கேட்டேன். அதற்கு ஹப்ஸா, ஆம் நாங்கள் அப்படி பேசிக்கொள்வதுண்டு' என்று விடையிறுத்தனர். அதற்குயான் 'இனி ஜாக்ரதை! ஆண்டவனுடைய தண்டனையைப்பற்றி யான் உனக்கு அச்சுறுத்துகின்றேன். யாருடைய அழகு நாயகம் (ஸல்.) அவர்களை வசீகரித்து விட்டதோ அவருடைய (ஆயிஷா நாயகியுடைய) போட்டியில் நீ பிரவேசிக்கக்கூடாது' என்று கண்டித்தேன்" என்பதாகும்.

அவர்கள் ஹிஜ்ரி 45-ம் ஆண்டில் அமீர் முஆவியாவின் ஆட்சிக்காலத்தில் காலமாயினர். அதுபொழுது மதினாவின் கவர்னராக இருந்த மர்வான் பின் ஹகம் என்பவரால் ஜனாஜா தொழுகை நிறைவேற்றப்பெற்று பனூஹஜமீ வீட்டிலிருந்து முகைராபின் ஷஅபாவின் வீடு வரை தோளில் தாங்கிச் சென்றார். அங்கிருந்து கப்ர் வரை ஹஸ்ரத் அபூ ஹுரைரா(ரலி) தோள்கொடுத்துப்போய் அம்மாதின் சகோதரர் அப்துல்லாஹ், ஆசிம், சாலிம், ஹம்ஜா, அப்துல்லாஹ் பின் உமரின் புத்திரர்கள் இவர்கள் எல்லோரும் கப்ரில் வைத்தார்கள்.

(5) ஹஸ்ரத் ஜைனப்—உம்முல் மஸாகீன் (ரலி.)

இந்நாயகி ஏழை மிஸ்கீன்களை மிக தயாள சிந்தையோடு ஆதரித்து வந்ததால் இன்னோருக்கு "உம்முல் மஸாகீன்" ஏழைகளின் தாயாரென்னும் காரணப்பெயருண்டு. இவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களது விவாகத்தில் வருமுன் அப்துல்லாஹ்பின் ஜஹஷை மணம் புரிந்திருந்தார்கள். அவர் "உஹத்" யுத்தத்தில் மரணமடைந்து போகவே, நாயக (ஸல்.) அவர்கள் அம்மாதை விவாகம் புரிந்துக் கொண்டார்கள். அதற்கு பின் 2, 3 மாதம் தான் நாயகம் (ஸல்.) அவர்களுடன் இருந்தனர். இதற்குப்பின் மரணமடைந்துவிட்டார்கள். நாயகம் (ஸல்.) அவர்களின் ஜீவியத்தில் ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்கட்குப்பின் இன்னோர் மட்டுந்தான் காலமானார். நாயகம் (ஸல்.) அவர்கள் அம்மாதின் ஜனாஸா தொழுகையை நடத்திவைத்தார்கள்; பிறகு ஜன்னத்துல் பகீஉவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அதுபொழுது அவர்கள் வயது 30 ஆயிருந்தது.

(6.) ஹஸ்ரத் உம்முஸல்மா (ரலி.)

இவர்களின் பெயர் 'ஹிந்து' என்பதாகும். உம்முஸல்மா என்பது காரணப் பெயராகும். அவர்களது பிதாவின் பெயர் 'ஸுஹைல்,' மாதாவின்பெயர் 'ஆத்திகா,' என்பதாகும். இன்னோரை ஆரம்பத்தில் அப்துல்லாஹ்பின் அப்துல் அஸத் என்பவர் மணந்திருந்தார். அம்மாது கணவருடன் இஸ்லாம் மதத்தை தழுவி இருந்ததுடன் அவருடனேயே ஆரம்பத்தில் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்றார். பிறகு அங்கிருந்து மக்காவந்து மதினாஷரீபுக்கு ஹிஜ்ரத் சென்றனர். ஹிஜ்ரத் சென்று வந்ததில் இவர்கள்தான் முந்திய மாதாகும் என்னும் சிறப்பு இவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. அம்மாதின் முந்திய புருடராகிய அபூஸல்மா அவர்கள் பத்ரு, உஹத் முதலிய யுத்தங்களில் கலந்திருந்திருந்தார். உஹத் போரில் சற்று காயமடைந்து அக்காயம் சொஸ்தமாகாமல் மரணமடைந்து விட்டார். அதுபொழுது உம்முஸல்மா (ரலி.) கர்பவதியாக இருந்தார்கள். பிரசவித்தபின் சில காலஞ்சென்று நாயகம் (ஸல்.) அம்மாதை விவாகம் புரிந்துகொண்டார்கள். நாயகம் (ஸல்.) அவர்களின் மனைவிமார்களிலெல்லாம் கடைசியாக மரணமடைந்தவர் இவர் தான் என்று கூறப்படுகிறது. அம்மாதுவின் முன்னறிவிப்பின்படி சயீத்பின் ஜைத் அவர்கள் ஜனாஸாதொழுகையைநிறைவேற்றினார்கள். அதுபொழுது அம்

மாதின் வயது 84 ஆயிருந்தது. நாயகம் (ஸல்.) அவர்களின் மனைவிமார்களில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்கட்குப்பின் புத்திக் கூர்மையிலும் சாதுர்யத்திலும் இவர்தான் சிறந்தவரென கூறப்படுகிறது.

(7) ஹஸ்ரத் ஜைனப் (ரலி.)

எம்பிரான் (ஸல்.) அவர்கள் மனைவிமார்களில் ஆயிஷா நாயகி அவர்கட்கு சமமானவர்களென கூறப்பட்டு வந்தவர்களில் இவருமொருவராவர். நாயகம் (ஸல்.) அவர்கள் அம்மாதின்மீது அதிக அன்பு வைத்திருந்தார்கள். அவர்கள் தங்கள் மனைவிமார்களைப்பார்த்து 'உங்களில் யாருடைய கை நீளமாக இருக்கின்றதோ அவர்தான் என் மரணத்திற்குப்பின் என்னை முதன் முதல் சந்திப்பர்' எனக் கூறினார்கள். இவ்வாக்கியத்திற்கு ஜைனப் (ரலி.) அவர்கள் பாத்தியஸ்தரா யிருந்ததால் நாயகம் (ஸல்.) அவர்கள் காலமான உடன் மற்ற மனைவியர்களைவிட முதன் முதல் இன்னோர் மரணமடைந்தனர். அதுபொழுது அவர்கட்கு வயது 53 ஆயிருந்தது.

(8) ஹஸ்ரத் ஜுவைரிய்யா (ரலி.)

இம்மாது பனூ முஸ்தலக் கூட்டத்தாரின் தலைவரான ஹாரிதுபின் லராரின் புதல்வியாகும். இவரை முஸாபிஉ பின் ஸப்வான் ஆரம்பத்தில் விவாகஞ் செய்திருந்தார். அன்னோர் மரீஸீஉ யுத்தத்தில் மரணமடைந்து விட்டார். இந்த யுத்தத்தில் அனேக அடிமை அடியாள்கள் முஸ்லிம்களுக்கு கிடைத்தனர். அவர்களில் ஜுவைரிய்யாவு மொருவராவர். அந்த யுத்தத்தில் கிடைத்தவைகள் யாவும் பங்கிடப்படும்பொழுது அம்மாது "தாபித்துபின் கைஸ்" அவர்கள்பங்கில் வந்தார்கள். எஜமான் சம்மதித்தால் ஏதாகிலும் ஒரு தொகை கொடுத்து விடுதலை பெற்றுவிடலாமென்னும் சட்டமிருந்ததால் அதன்படி ஒன்பது (அவ்கியா) எடை தங்கம்கொடுத்து விடுதலையடைந்துவிடலாமென்று பேசி முடித்துக்கொண்டு அதைக்கொடுக்க முடியாமல் நாயகம் (ஸல்.) அவர்களிடஞ்சென்று "யான் ஹாரிதின் மகளாகிய ஜுவைரிய்யாவாகும். இதுசமயம் என்மீது ஏற்பட்டிருக்கும் கஷ்டம் தங்களுக்குத்தெரிந்ததே. யான் தாபித்துபின்கைஸ் என்பவரின் பாகத்தில் வந்திருக்கிறேன். அவரிடமிருந்து ஒன்பது அவகியா எடை தங்கம் கொடுத்து விடுதலை பெறுவதற்கு ஒப்பந்தம் செய்திருக்கின்றேன். என்னிடம் அதற்கு வழி இல்லை. ஆதலால் தங்களைநம்பி இங்கு வந்திருக்கின்றேன்" எனக் கூறினர். இதுகேட்டு நாயநாயகம் (ஸல்.) அவர்கள் தாபித் பின்கைஸ் அவர்களை அழைத்து விஷயத்தை அறிவித்தார்கள். அவரும் சம்மதிக்கவே விவாகம் நடைபெற்று முடிந்தது. இச் செய்தி பரவி விடவே பனூ முஸ்தலிக் கூட்டத்தாருடன் நாயகம் (ஸல்.) அவர்களின் சம்பந்தம் ஏற்பட்டு விட்டதால் சிறைபிடித்ததில் தங்கள் தங்கள் பங்கில் கிடைத்துள்ள பனூ முஸ்தலக் அடியான் அடியாள்கள் யாவரையும் உரிமை விட்டு விட்டார்கள். அவ்வாறு உரிமை விடப்பட்டவர்களின் தொகை 700வரையாகுமென்று கூறப்படுகிறது. அம்மாது ஹிஜ்ரி 50-ம் வருஷம் மரணமடைந்தார்கள் ஜன்னத்துல் பகீஉவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அதுபொழுது அவர்களின் வயது 65 ஆயிருந்தது.

(9) ஹஸ்ரத் உம்மு ஹபீபா (ரலி.)

இம்மாதின் பெயர் 'ரமளாவாகும். உம்மு ஹபீபா வென்பது காரணப்பேராகும். இன்னோர் நபிப்பட்டம் கிடைப்பதற்கு 17 வருடங்களுக்கு முன் பிறந்தார். அவர் உபைதுல்லாஹ்பின் ஜஹஷை மணம் முடித்திருந்தார். அதற்குப்பின் அவ்விருவரும் இஸ்லாத்தைத் தழுவி ஹபஷா தேசத்தின் பக்கல் ஹிஜ்ரத் சென்றார்கள். ஆங்கு சென்றவுடன் உபைதுல்லாபின் ஜஹஷ் மதமாறி விட்டார். ஆனால் உம்மு ஹபீபா இஸ்லாத்திலேயே தரிபாடாய் இருந்ததால் இருவரின் மதமும் வேறுபட்டு விட்டதால் உபைதுல்லா இம்மாதை விட்டுப் பிரிந்துவிட்டார். அம்மாது முஸ்லிம்களின் தாய்மார்களில் ஒருவராக ஆய்விட வேண்டுமென்கிற சிறப்பு ஏற்பட்டிருந்தது போலும். நாயகம் (ஸல்.) அவர்கள் அம்ரு இப்னு உமைய்யா அவர்களை நஜ்ஜாஷீ ராஜனிடம் பெண்பேசி வரும்படி அனுப்பி வைத்தார்கள். இவர் சென்று அச் செய்தியை அறிவித்தவுடன் அவர் தன் வேலைக்காரி மூலம் உம்மு ஹபீபா அவர்கட்கு அறிவிக்கவே, அம்மாது சம்மதித்து காலித் பின் ஸயீத உமவீ அவர்களைத் தன் வக்கீ

லாக ஏற்படுத்தினர். மாலையில் நஜ்ஜாஷி யானவர் ஐஅபர் பின் அபீதாலிப் அவர்களையும் மற்றும் ஆங்குள்ள முஸ்லிம்களையும் ஒரு இடத்திற் கழைத்து தாமே நிக்காஹ்வின் குத்பா ஓதினர். அவ்வைபவம் முடிந்தவுடன் எல்லோரும் புறப்பட்டுச் செல்ல ஆய்த்த மானர்கள். ஆனல் வலீமாவின் தஅவத்தானது நபிமார்களின் சுன்னத்தாகுமாதலின் எல்லோரும் உணவருந்திவிட்டுத்தான் செல்லவேண்டும்மென நஜ்ஜாஷிமன்னர் கூறியதின் பேரில் யாவரும் உணவருந்திவிட்டுச் சென்றுர்கள். அதற்குப்பின் நஜ்ஜாஷி மன்னர் ஷர்ஹபீல் பின் ஹஸனுவுடன் அம்மாதை நாயகம் (ஸல்.) அவர்களது திருசமுகம் அனுப்பிவைத்தார். அம்மாது வெகுநாளிருந்து ஹிஜ்ரி 44-ல் மரணமுற்று மதீனவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

(10) ஹஸ்ரத் மைமூன (ரலி.)

இம்மாதின் பிதாவின் பெயர் 'ஹாரிது;' தாயாரின் பெயர் 'ஹிந்து'வாகும். இன்னேரை ஆரம்பத்தில் மஸ்ஊது பின் அம்ருப்னு உமைரதகபீ விவாகஞ்செய்திருந்தார். அவர் விவாக ரத்து செய்தவுடன் அபூரஹ்ம் பின் அப்துல் உஜ்ஜா விவாகஞ் செய்துக்கொண்டார். அவர் மரணமடைந்தபின் நாயகம் (ஸல்.) அவர்கள் மணம் புரிந்துகொண்டார்கள். அம்மாதின் விவாகம் 'சரப்' என்னுமிடத்தில்தான் நடைபெற்றது. அங்குதான் அவரின் மரணமும் ஏற்பட்டது. ஹஸ்ரத் அப்துல்லாஹ்பின் அப்பாஸ் (ரலி.) அவர்கள் ஜனஸா தொழுகையை நிறைவேற்றி நல்லடக்கம் செய்தார்கள்.

(11) ஹஸ்ரத் ஸபிய்யா (ரலி.)

'ஸபிய்யா' என்பது அம்மாதின் பெயரல்ல. யுத்தங்களில் கிடைத்தவைகளை பங்கிடும்பொழுது தலைவர்கள், ராஜாக்கள் இவர்களின் பாகங்களில் அவைகளிலுள்ள முக்கிய வஸ்துக்கள் கிடைப்பது வழக்கம். அவ்வாறு கிடைக்கும் வஸ்துக்களுக்குத்தான் அரபியில் "ஸபிய்யா" என்று கூறுவது. அது போன்று இம்மாதும் கைபர் யுத்தத்தில் நாயகம் (ஸல்.) அவர்களின் திருமனைவியராய் ஆய்விட்டதால் அம்மாதும் ஸபிய்யா என்று அழைக்கப்பட்டார். அவர் பெயர் ஜைனபாகும். அவரின் தந்தை ஹூயைபின் அக்தபாகும் தாயார் பெயர் லர்ராவாகும். அவ்விருவரும் வங்கிஷபதியாவர். தந்தை "பனூநுலீர்" கூட்டத்தாரின் தலைவராகும். தாயார் "குரைளா," கூட்டத்தலைவரின் புத்திரியாகும். ஹஸ்ரத் ஸபிய்யாவை ஆரம்பத்தில் சலாம் பின் முஷ்கம் விவாகம் புரிந்திருந்தார். அவர் விவாகரத்து செய்தபின் கனனுவின் விவாகத்தில் வந்தார். அவர் கைபர் யுத்தத்தில் கொல்லப்பட்டுப் போகவே, இம்மாது சிறைபிடிக்கப்பட்டார். அது பொழுது "தெஹிய்யகல்பீ" அவர்கள் ஒரு அடிமைப்பெண் தமக்கு வேண்டுமென்று கேட்டார். அவரையே தெரிந்தெடுத்துக் கொள்ளுமாறு நாயகம் (ஸல்) கட்டளை பிறப்பித்தார்கள். அவர் ஸபிய்யா அவர்களை தெரிந்துக்கொண்டார். ஆனல் ஒரு ஸஹாபி நாயகம் (ஸல்.) அவர்கள் சமூகஞ் சென்று பனூநுளீர், பனூகுரைளா கூட்டத்தின் தலைவியை தஹிய்யாவுக்களித்து விடுவது சரியல்ல. அவர்கள் தங்களுக்கே இருக்கவேண்டுமெனவிண்ணப்பித்துக்கொண்டார். தஹிய்யா அவர்களுக்கு வேறு ஒரு பெண்ணைக் கொடுத்துவிட்டு இன்னேரை விடுதலை செய்து, நாயகம் (ஸல்.) அவர்கள் மணம் புரிந்து கொண்டார்கள். அதற்குப்பின் கைபரிலிருந்து திரும்பி வரும்போது "ஸஹ்பா" என்னுமிடத்தில் தங்கி ஜனங்களிடமிருந்த ஸாமான்களை வாங்கி சேகரித்து "வலீமா" விருந்தளித்தார்கள். அம்மாதின்மீது நாயகம் (ஸல்.) அவர்கள், மிகப் பிரீதிகொண்டிருந்தார்கள். அவர்கள் ஹிஜ்ரி 50-ம் வருடம் மரணமடைந்து ஜன்னத்துல் பகீஉவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

பிழை திருத்தம் :

சென்றமாத இதழின் 493-ம் பக்கத்தில் இரண்டாவது காலத்தின் 12-ம் வரியில் கதீஜாநாயகி என்றிருப்பதை ஆயிஷாநாயகி என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

இஸ்லாமிய உலகம்

(சென்ற மாதத் தொடர்)

ஐரோப்பிய முஸ்லிம்கள்

ஐரோப்பிய நாட்டில், வெல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த கார்டப் என்னும் நகரில் முஸ்லிம்கள் ஏராளமாயிருக்கின்றனர். இவர்களின் தொகை 10-ஆயிரமாகும். இன்னேரில் பெரும்பான்மையினர் அராபியர்கள். மேலும், மலேயா, இந்தியா ஆகியவற்றின் முஸ்லிம்களும் அங்கு அதிகமாகவே காணப்படுகின்றனர். இன்னேரின் மனைவி மக்கள் எல்லோரும் இஸ்லாமிய சன்மார்க்கத்தின் படியே நடந்துவருகின்றனர். இவர்கள் ஐக்கியமாக வாழுகின்றனர்.

தெற்கு ஷெல்டு என்னுமிடத்தில் அராபியர், கலப்பு மலாயியர், இமாலய துருக்கியர், எகிப்தியர் ஆகியோர் வசிக்கின்றனர். இவர்களின் தலைவர்-ஸர்தாரின் பெயர் 'ஹஸன் முஹம்மத்' என்பதாகும். மேற்குதிசை இஸ்லாமிய சங்கத்தின் கிளை ஸ்தாபனத்தினர் இங்கு மத்ரஸா, மஸ்ஜித் ஆகியவைகளை நிர்மாணிப்பதற்காக நிலம் வாங்கியுள்ளனர். இவ்விடத்தில் அநேகமாய் முஸ்லிம்களின் கூட்டங்கள் நடைபெறும். இவ்விடத்திய முஸ்லிம்கள் வியாபாரஞ் செய்கின்றனர்.

ஹில், ஸண்டர்லாண்டு, வடக்கு ஷெல்டர், நியூகாஸல், லிவர்பூல், முதலிய இடங்களிலும் அதிகமான முஸ்லிம்கள் இருக்கின்றனர்.

லண்டனின் கிழக்குப் பகுதியில் 300-முஸ்லிம் குடும்பத்தினர் பிரத்தியேகமாய் வாழ்ந்துவருகின்றனர். இங்கு அநேக பொது விடுதிகளிருக்கின்றன. துறைமுகத்தில் வந்திறங்கும் ஆயிரக்கணக்கான கப்பலோட்டிகள் இங்கு வந்து தங்குகின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் ஏராளமான முஸ்லிம்கள் வசிக்கின்றனர். நியூயார்க், பீலாவன்பியா, டெப்ஸ் பர்கு, ஷிக்காகோ, டெடிராய்ட், பால்டெய்மோர், போஸ்டன் முதலிய நீண்ட தூரப்பகுதிகளிலெல்லாம் முஸ்லிம்கள் அதிகம் காணப்படுகின்றனர்.

அமெரிக்காவின் பிரபல மோட்டார் உற்பத்திச் சாலையான மிஸ்டர் போர்டுடைய தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் வேலை செய்துவருகின்றார்கள். மெக்ஸிகோவில் 4000 முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். இன்னேரில் பெரும்பாலோர் அராபியர்கள். இவர்கள் பலமான இஸ்லாமிய சங்கமொன்று ஏற்படுத்திக்கொண்டுள்ளனர்.

தென் அமெரிக்கா

இதைச் சேர்ந்த கியோபெக்கில் 3-ஆயிரம் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். பராஜீலின் முஸ்லிம்களுடைய தொகை அவர்களுடைய ஆரம்ப ஜனக்கணிதத் தொகையைவிட தற்போது இரட்டிப்பாக—அதாவது 50-ஆயிரமாகி யிருக்கின்றது. மென்போலா என்னும் சமஸ்தானத்திலும் முஸ்லிம்கள் பெருந்தொகையினராயிருந்து வருகின்றனர்.

ராவு என்னுமிடத்தினின்று 4-முஸ்லிம் பத்திரிகைகளும், ஸென்ருலோ என்னுமிடத்தினின்று 6-பத்திரிகைகளும் வெளியாகின்றன. அர்ஜிண்டாயின் ராஜ்ஜியத்தினின்று 6-அராபியப் பத்திரிகைகள் வெளியாகின்றன. இங்கு 10-ஆயிரம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இவர்களில் அநேகம் பேர் பெய்ராகுவே, யுரோகுவே என்னுமிடங்களில் போய் வசிக்கின்றனர். கொலம்பியா, டெனின்ஸ்விலா ஆகிய இடங்களில் சொற்ப தொகை முஸ்லிம்களுள்ளனர். இன்னேர் அந்துலுஸ் அராபிய வம்சத்தைச் சேர்ந்தோராவர். இவர்கள் ஓராயிரத்துக்குக் குறைவாகயில்லை.

காயிருவின் முஸ்லிம்கள்

டச்சுகாயிரு என்னுமிடத்திலுள்ள மொத்த ஜனத்தொகை 107828 ஆகும். இங்குள்ள முஸ்லிம்களின் தொகை மூன்றில் ஒரு

பங்காகும். சென்ற நாட்களில் இங்கு இஸ்லாம் மார்க்கம் மிகத்தீவிரமாகப் பரவிற்று. ஜாவா முஸ்லிம்களுக்கும், இங்குள்ள முஸ்லிம்களுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு.

பிரான்ஸ் காயினவில் சுமார் 275-முஸ்லிம்களும், பிரிட்டிஷ்காயினவில் 18-ஆயிரம் முஸ்லிம்களும் இருக்கின்றனர். இவ்விடங்களில், மேற்கு திசை இஸ்லாமிய அஸோஸியேஷன் சங்கத்தினரின் பிரசாரத்தினல் இஸ்லாம் பரவிற்று.

டிறைனிடாட் தீவில் 18-ஆயிரம் முஸ்லிம்கள் இருக்கின்றனர். ஆப்ரிக்காவின் காட்டுமிராண்டி ஜனங்களுங்கூட சிறுகச் சிறுக விவேகமடைந்து இஸ்லாத்தைத் தழுவிவருகின்ருர்கள். எனவே ஜாமீகா என்னுமிடத்தில் 5-ஆயிரம் முஸ்லிம்களிருக்கின்றனர்.

—(மதீன)

பிஜி முஸ்லிம்கள்

பிஜி என்பது சுமார் 256 சிறு தீவுகள் அடங்கியுள்ள ஒரு பிரதேசமாகும். இவைகளுள் 80 தீவுகளில் ஜனங்கள் வாழ்ந்து வருகின்றனர். இத் தீவின் மொத்த விஸ்தீரணம் 7080 சதுரமைல். இங்கு வதியும் மக்களின் எண்ணிக்கை ஒரு லக்ஷத்து 57 ஆயிரத்திற்கு மேலிருக்கலாம். இப்பகுதியில் காணப்படும் ஜாதியாருடைய ஜனத்தொகையின் விவரம்:—

ஐரோப்பியர்கள்	3878
பிஜியர்கள்	84,475
இந்தியர்கள்	60,634

இத்தீவுகளில் ஸோவா, நாசூரி, லுட்டாக்கா, லியூகா என்ற நான்கு பிரதான நகரங்கள் உண்டு. இவைகளுள் 'ஸோவா' என்பது அரசாங்கத்தின் தலைநகரமாகும். இங்குள்ள ஜனத்தொகை 13 ஆயிரம் என மதிக்கப்படுகிறது. இத்தீவு மிக்க விலை உயர்ந்த பொருட்கள் விளையக்கூடிய செழிப்பான ஸ்தலமாகும்.

இன்றைக்கு 50 வருஷத்திற்கு முன் இந்தியர்கள் இத்தீவுகளில் வந்து குடியேறினர்கள். அவர்களின் தற்போதைய ஜனத்தொகை 60 ஆயிரத்திற் கதிகமாகும். அவர்களில் மூன்றில் ஒரு பாகம் பிஜியில் பிறந்தவர்கள். அவர்கள் அடிமையைப்போலவே வாழ்ந்து வருகின்ருர்கள். வட ஆப்பிரிக்காவிலுள்ள ஜனங்களின் நிலைமையைப்போன்றே இவர்களின் நிலைமையும் சுதந்தரமில்லா ஜீவியமாய் இருக்கின்றது. இங்குள்ள வியாபாரம் விசேஷமாய் சீனர்கள் கைவசமே இருந்து வருகிறது.

முஸ்லிம்களின் தொகை பதினயிரத்திற்கும் எண்ணயிரத்திற்கும் மத்தியில் இருக்குமென்று மதிக்கலாம். இன்னோர் அநேகமாய் இந்தியர்களேயாவர். இதர வகுப்பினரைவிட இவர்கள் மிக பிற்போக்குடையவர்களாய் காணப்படுகின்றனர். பிஜி தீவுகளின் பற்பல பாகங்களிலும் இவர்கள் பரவி இருப்பதால் இவர்களுக்கு கல்வி புகட்டி சீர்திருத்தம் செய்து பரிபாலிப்பதற்கு போதிய வசதி இல்லாதிருக்கிறது. தற்சமயம் இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஹிந்து முஸ்லிம் வகுப்புச் சண்டையின் காரணமாக இங்குள்ள இந்துக்கள் முஸ்லிம்களிடத்து துவேஷமுடையவர்களாய் இருக்கின்ருர்கள். ஹிந்து சமுதாயத்தைச் சேர்ந்த ஹிந்துமகா சபையினரும் சுத்தி சபையாரும் ஆங்குள்ள முஸ்லிம்களின் மத அனுஷ்டானங்களுக்கு பலவழியிலும் தீங்கிழைத்துக்கொண்டிருக்கின்றனர். ஆரிய சமாஜத்தையும் கிறிஸ்தவ மிஷனரியையுஞ் சேர்ந்த அநேக பிரசாரர்கள் முஸ்லிம்களின் வீழ்சிக்கு அளவில்லா வேலை செய்து வருகின்றனர். ஒரு இஸ்லாமிய சங்கமாவது இதுவரை ஆங்கு ஏற்படவில்லை. முஸ்லிம் பத்திரிகைகளும் கிடையா. ஆரம்பக் கல்வி போதிக்கின்ற இரண்டு பள்ளிக்கூடங்களிருக்கின்றது. பெண் பாடசாலையில் கிறிஸ்தவப் பெண்களே உபாத்தியாயினிகளாக நேமிக்கப் படுகின்றனர். முஸ்லிமல்லாதாரின் பாடசாலைகள் போதுமான அளவு நிறுவப்பட்டிருக்கின்றன. இப்பாடசாலைகள் நாளுக்கு நாள் ஒழுங்காக வேலை செய்து மிக உன்னத நிலைமைக்கு வந்திருக்கின்றன. உருது பாஷையினை நீக்கி ஹிந்திப் பாஷையிலேயே கல்விபோதிக்கப்படுகிறது. ஒரு தடவை முஸ்லிம் கோஷ்டியினர் கவர்னரிடஞ் சென்று ஹிந்துக்கள் செய்யும் அட்டூழியங்களைப் பற்றி முறையிட்டனர். அதற்கு கவர்னர் துரை, அவர்களின் குறைகளை நிவர்த்திப்பதற்கு தக்க முயற்சி எடுத்துக் கொள்வதாக வாக்களித்துள்ளார். இந்தியாவிலுள்ள முஸ்லிம் சங்கங்களின் நிர்வாகிகள் வெளியூரிலுள்ள

சகோதர முஸ்லிம்கள்மீது கவனஞ்செலுத்து வார்களாக.

ஜாவா முஸ்லிம்கள்

மிக விலையேறிய பொருட்கள் விளையக் கூடிய இடங்களுள் ஜாவாவும் ஒன்ருகும். இங்கு முஸ்லிம்கள் நூற்றுக்கு தொண்ணூற் றைந்து வீதம் காணப்படுகின்றனர். ஒவ் வொருவருஷமும் ஆயிரக்கணக்கான முஸ்லிம் கள் ஹஜ்ஜு யாத்திரைக்குச் செல்கின்றனர். இத் தீவு மிக உயர்ந்த லோகவர்க்கம் நிறை ந்த ஸ்தலமாகும். என்ருலும் இங்குள்ள சுதேசிகள் விறகு வெட்டுவதும் கூலிவேலை செய்வதுந் தவிர வேறு தொழில் செய்யாதவ ராய் இருக்கின்றனர். இங்குள்ள லோக வர்க் கத்தினை வெட்டி எடுப்பதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் ஹா லண்டு தேசத்தினருக்குச் சொந்தமானவைக ளாகும். வியாபாரத் தொழில் அநேகமாக சீனர்கள் கைவசமே இருந்து வருகிறது. "ஹளரமௌத்" என்ற ஊரிலுள்ள அற பிகள் ஜாவாவின் ஒவ்வொரு பகுதியிலுங் காணப்படுகின்றனர். இவர்கள் மற்ற முஸ் லிம்களுக்கு எவ்வகையிலும் உதவாதவர்க ளாய் இருக்கின்ருர்கள். பனிய ஜாதியாரை விட இவர்கள் மிகக் கெட்டவர்கள். இவர்கள் பிறருக்கு தீமை செய்து அவப்பேர் சம்பா தித்துள்ளனர்.

கிறிஸ்தவ மிஷனரியானது அத்தேச முழு வதிலும் பாடசாலைகளும் தர்மச் சாலைகளும் ஏற்படுத்தினதோடு நில்லாமல், அளவற்ற பிர சாரர்களை எப்பக்கமும் அனுப்பி வேலை செய்து வருகின்றது. இதன் காரணமாக அநேக முஸ்லிம்கள் மதமாறியும் இருக்கின் ருர்கள். ஆனல் முஸ்லிம் உலமாக்கள் தத் தமக்குள் பகைமை வைத்து கட்சிப் பிரிவினை கள் ஏற்படுத்துவதில் மட்டும் மிக ஊக்கம் காட்டி வருகின்றனர்.

ஷருகத்தே இஸ்லாமியா, முஹம்மதிய்யா என இரு இஸ்லாமிய சங்கங்கள் உண்டு. ஒன்று தேசிய விஷயமாகவும் மற்றது மத விஷயமாகவும் உழைக்கின்றது. இவ் விரு சபைகளும் தமக்குள் பொருமையையும் விரோதத்தையும் வளர்த்துக்கொண்டே இரு க்கின்றன.

நற்காலத்திற் கறிகுறியாக 1927-ல் ஒரு இந்தியப் பெரியார் — மௌலவீ அப்துல் அலீம் ஸாஹிப் சித்தீகி (மீரட்டுவாசி) அவர் கள் இங்கு வந்திருந்தார்கள். இந்தியாவி லுள்ள கலாசாலைகளில் படித்துத் தேறியவ ரென்றும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களில் இஸ்லாமியப் பிரசாரஞ்செய்யப் போயிருந்ததாகவும் எங்களிடத்தில் கூறினர். யாங்கள் அவரை மிக உள்ளன்போடு வர வேற்று நன்றி செலுத்தினேம். அவர் கிறி ஸ்தவ மார்க்கத்தை தக்க முறையில் தாக் குவதோடு நம் சமுகத்தினரில் சிலர் வழி கெட்டு அஹ்மதீ-காதியானிக் கொள்கைகளை அனுஷ்டித்து இங்குள்ள முஸ்லிம்களை வழி கெடுத்து வருவதை அகற்றுவதில் தக்க முயற்சி எடுத்துக்கொண்டது மிக மிக குறிப் பிடத் தக்கதாகும்.

ஜர்மனி

இங்கு திரு நபி பிறந்த தினம் இவ்வரு ஷம் சென்ற ஜுலை மாதம் 28-ந் தேதி பர்லினிலுள்ள முஸ்லிம் சொஸைட்டியின் ஆதரணையில் பர்லின் மஸ்ஜிதில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வமயம் உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து ஆங்கு சென்று ஜர்மனின் பற்பல பாகங்களிலும் வதியும் முஸ்லிம்கள் யாவரும் விஜயஞ் செய் திருந்தனர். இந்தியா, சைன, துர்கிஸ்தான் ஈரான், வட அமெரிக்கா, ஜர்மனி, துர்க்கி ஆகிய தேசங்களிலுள்ள முஸ்லிம்களும் முஸ் லிமல்லாதார்களும் ஆங்கு காணப்பட்டார் கள். ஏற்கனவே அப்கனிஸ்தானத்தின் சபீராகயிருந்த ஸர்தார் அப்துல் ஹாதிகான் சாஹிப் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க ஏற்பாடாயிருந்தது. சில அசந்தர்ப் பத்தினிமித்தம் அவர் வரக்கூடாமைக்கு வருந்தி எழுதிய லிகிதமும் புஷ்பங்களால் நிறப்பப்பட்ட ஒரு கூடையும் ஆங்கு கூடி யிருப்பவர்களிடம் தம்முடைய மன்னிப் பைத் தெரிவித்துக்கொள்வதற்காக அனுப்பி இருந்தார். அதற்காக சபையினர்களாலும் சங்கத்தார்களாலும் அவருக்கு வந்தன மளிக்கப்பட்டது.

ஆங்கு பிரபல்யமாய் விளங்குகின்ற புதிய முஸ்லிம் டாக்டர் ஹமீத் மற்கஸ் சாஹிப், பி. எச். டி. அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார் தலைவர் அவர்கள் திருநபியின் திவ்விய சரித்திரத்தைப்பற்றி மனம் கவரத்தக்கவிதமாய் மிக தெளி

வான முறையில் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன்பின் மஸ்ஜிதின் இமாம் எஸ். எம். அப்துல்லா சாஹிப் அவர்கள் அரியதோர் பிரசங்கம் செய்தார். துர்க்கிதேசத்து இமாம் சாஹிப் குர்ஆன் ஷரீபிலுள்ள சில ஆயத்துக்களை ஓதி சபையை மகிழ்வித்ததும் கூட்டம் இனிது கலைந்தது.

நியூயார்க்கில் புதிய பள்ளிவாசல்.

மிஸ்டர் காலித் ஷெல்டிரேக் என்பார் அகில உலக முஸ்லிம்களுக்கு தெரிவிக்கும்படி இரு நிருபங்கள் வரைந்தனுப்பியிருக்கின்றார். அதிலொன்றில் பின்வருமாறு கூறுகின்றார்:

"அமெரிக்காவி லுள்ள முஹம்மடன் சொசைட்டியானது 24000-டாலர் விலை கொடுத்து ஒரு கட்டிடத்தைவாங்கி பள்ளிவாசலுக்கு இனாமளித்திருக்கின்றது. கடந்த பெருநாள் தொழுகையை இங்குள்ள முஸ்லிம்கள் அதே பள்ளியில் நிறைவேற்றினார்கள். இன்னும் 5000-டாலர் செலவுசெய்தால் ஒரு மஸ்ஜிதுக்கு இருக்கவேண்டிய எல்லா அம்ஸங்களாலும் அஃது சிறந்து விளங்குமென்று உத்தேசிக்கப்படுகின்றது. இம்மஸ்ஜிதில் இரு அமெரிக்கர் இஸ்லாத்தை தழுவினர். அமெரிக்காவிலிருந்து ஒரு முஸ்லிம் மிஷனரி பிரேஜில் (வட அமெரிக்கா) சென்றிருக்கிறது. ஆங்கு 50-ஆயிரம் முஸ்லிம்கள் வாசஞ் செய்கின்றனர். நாங்கள் இவ்விரு தேசங்களுடனும் சம்பந்தம் வைத்துக்கொள்ள விரும்பங் கொண்டிருக்கின்றோம். சௌத் ஷீல்டு என்ற இடத்தில் ஆகாகான் அவர்களுடைய மஸ்ஜிதின் நிருமாணவேலை ஆரம்பிக்கப்பட்டு நிலம் செப்பனிடப்பட்டு இருக்கிறது."

ஹங்கேரி முஸ்லிம்களின் எழுச்சி

ஹங்கேரியில் இஸ்லாம் 150 வருஷங்கள் வரை பரவி வந்தது. அதன்பின் கிறிஸ்தவ மதம் ஆதிக்கம் பெற்று அதிகார பதவிக்கு வந்துவிடவே இஸ்லாமிய மத ஒழுக்கம் ஆசாரங்கள் சம்பந்தமான சுதந்திரத்தைப் பறித்து விட்டது. அப்பால் ஹங்கேரியின் இராஜதானியாகிய போட்டா நகரிலிருந்து இஸ்லாம் மதத்திற்கு புத்துணர்ச்சி உண்டாகி 250 வருஷங்களுக்குப்பின் இஸ்லாமிய நாகரீகம் அங்கு 'அல்லாஹு அக்பர்' என்ற சப்தத்துடன் உயரக்கிளம்பிற்று. அவ்வாறு ஆங்கு புத்துணர்ச்சி ஏற்படுவதற்கு இருகாரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. முதலாவது 1916-ம் வருஷத்தில் ஹங்கேரி அரசாங்கம் ஒரு சட்டத்தைப் பிறப்பித்து முஸ்லிம்களின் சுதந்திரத்தை அங்கீகரித்ததினால் முஸ்லிம்களின் நல்வாழ்வுக்கு அடிப்படை போடப்பட்டது. இரண்டாவதாக ஹஸ்ரத் "குரோபாபா" ரஹ்மதுல்லாஹ் அவர்களின் பங்களாவில் ஹங்கேரி முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒரு பெரும் கான்பரன்ஸ் நடத்தியதாகும். அந்த கான்பரன்ஸில் ஹிஜாஜ், இருக், எகிப்து, காகேஷியா, அல்பானியா முதலிய தேசத்திய முஸ்லிம்களும் அங்கத்தினராக விஜயஞ்செய்திருந்தார்கள் என கல்கத்தா ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை கூறுகின்றது. பிதா, மாதா, பரிசுத்த ஆவி என்ற மூன்று கொள்கையின்மீது அதிதீவிர உணர்ச்சியுள்ள கிறிஸ்தவர்களின் உறைவிடமாகிய ஹங்கேரியின் தலைநகரில் 250 வருஷங்களுக்குப் பின் இப்போது இஸ்லாமிய முஅத்தினால் அல்லாஹு அக்பர் என்ற புனித சப்தம் எழும்புவது ஓர் மகத்தான சம்பவமல்லவா? இதிலிருந்து ஒரு காலத்தில் இஸ்லாம் மதமானது மேனாட்டில் இலகுவாகப்பரவி இழந்துபோன தனது சிறப்பு, சக்தி, பெருமை, அதிகாரம் முதலிய யாவற்றினையும் அடையப்பெற ஹேதுவு உண்டாயிருக்கிறதென்பதை யூகிக்கவேண்டியிருக்கிறது.

மெடகாஸ்கார் முஸ்லிம்கள்

அமீர் ஷகீப் அர்சலான் அவர்கள் தம் அருமையான வியாசமொன்றில் மெடகாஸ்கார் தீவின் நிலைமையினைப்பற்றி எழுதி இருக்கின்றார். அதாவது:—"மெடகாஸ்கார் விசேஷமாய் முஸ்லிம்கள் நிறைந்துள்ள ஒரு தீவாகும். இங்குள்ள குடிகளை ஐரோப்பியர் பலவந்தமாக ஆட்சி புரிகின்றனர். இவர்களில் மதப்பற்று சமூகஒற்றுமை மார்க்க ஞானம் கிடையாது. இவைகளில்லாத முஸ்லிம்கள் ஆங்குகாணப்படுகின்றனர். இவ்வாறிருப்பினும் முஸ்லிம்கள் எண்ணிக்கையில் குறையாமலே இருந்து வருகின்றனர். இவர்களே அத்தீவில் ஆதிகாலமாகவுள்ளவர்கள். இன்னோரின் நிலைமையைப்பற்றி "ஹாலிருல் ஆலமெ இஸ்லாமீ' என்னும் நூலில் மிக

விரிவாக 25-பக்கம் எழுதப்பட்டிருக்கின்றது. பிரான்சிலுள்ள மோசியோ பிருன் என்பவரும் இவ்விஷயமாக ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அவர் மெடகாஸ்காரில் பிறஞ்சு அன்னிய நாட்டு மந்திரியுடன் சில காலம் தங்கி இருந்தார். அவர் தம்முடைய புத்தகத்தில் எழுதி இருப்பதாவது "மெடகாஸ்காரிருள்ள முஸ்லிம்களுள் பெரும்பாலார் அறப் நாட்டிலிருந்தும் பக்கத்து தீவுகளிலிருந்தும் வந்தவர்களாகும். அப்படி வந்தவர்கள் அங்குள்ளவரோடு கலந்துறவாடி தங்களுடைய மதநம்பிக்கைகளை அவர்களின் மனதில் பதியச்செய்தார்கள்."

இச்சம்பவத்தின் பொழுதுதான் 'அத்ணு மோற்ணு' என்ற வர்க்கத்தினரும் இஸ்லாம் மதத்தை தழுவிக்கொண்டனர். இவ்வகுப்பினர் இன்றுவரை முஸ்லிம்களாகவே இருந்துவருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் மெடகாஸ்காரின் வடபகுதியில் வாழ்கின்றனர். இப்பகுதியினருக்கு "மானியான்" என்ற இடமே மத்தியஸ்தலமாக இருக்கிறது இஃது இதே பேருடைய ஓர் நதியின் கரையிலுள்ள ஒரு நகரமாகும். இக்கூட்டத்தாரின் அரசியல் நிலைமையும் மத அனுஷ்டானமும் திருப்திகரமாய் இல்லை. ஏனெனில் இவர்களை விட 'அனுர்கார்" என்னும் வகுப்பினரே அரசியல் துறையில் மிக செல்வாக்குள்ளவராய் காணப்படுகின்றனர். அரச பரம்பரையும் இக்கூட்டத்தாரிடையேதான் இருந்து வருகிறது. 'அத்ணுமோற்ணு' என்ற கூட்டத்தார் அரபி இலக்கியத்தை அனுசரித்து வருவதால் அவர்களின் சரித்திர வரலாறைப்பற்றிய விவரம் நன்கு தெரியவருகிறது. இதர கூட்டித்தாரின் சரித்திர வரலாறு அவ்வளவு துலக்கமாக இல்லை. 'அத்ணுமோற்ணு' வகுப்பினர் ஆதிகாலத்தில் மிகத்தாழ்ந்த ஸ்திதியில் இருந்தனரென்றும் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு அவர்களின் நிலைமை மிகுந்த சீர்திருத்தம் அடைந்தது என்றும் மோசியோ பிருன் என்பவர் எழுதியுள்ளார்.

பாபர் சக்ரவர்த்தி.

இந்திய சரித்திரத்தில் கீர்த்திவாய்ந்த மொகலாய மன்னர்களில் பாபர் முதன்மையானவர். இம்மன்னரை "கிரேட்டு மொகல்" (பெரிய மொகல் சக்ரவர்த்தி) என்று சரித்திராசிரியர்கள் அழைக்கின்றனர். இவர் தாயார் மொகல் ஜாதியைச் சேர்ந்தவர். தந்தை துர்க்கி தேசத்தவராய் இருந்தார். துர்க்கி தேசத்தவர்கள் இந்தியாவின் வடமேற்கிலுள்ள மங்கோலியாவிற்குச் சென்று அங்குள்ள ஸ்திரீகளை விவாகஞ்செய்து ஆங்குள்ள நடைவுடை பாஷையினையும் அனுசரித்ததால் அவர்களும் மங்கோலியர் என்னும் பேராலேயே அழைக்கப்பட்டார்கள். இப்படிப்பட்டவர்களில் அமீர் தைமூரும் ஒருவர்.

இந்த அமீர் தைமூரின் வம்ச பரம்பரையில் பாபர் மங்கோலியாவில் ஹிஜ்ரி 899 றமலான் மாதத்தில் பிறந்தார். இவரது சொந்தப் பெயர் "ஜஹீருத்தீன்" என்பர். பாபர் மிக்க கெம்பீரமும் ஆண்மையுஞ் செறிந்த வீரபுருஷராய் விளங்கியதால் அக்காலத்திலுள்ள தலைவர்களும் பெரியார்களும் அவரை ஆண்சிங்கம் என்று அர்த்தம் தொனிக்கும் "பாபர்" என்ற காரணப் பெயர் கொண்டு அழைத்தார்கள். ஒரே சமயத்தில் இரு பருத்த மனிதர்களை தமது கக்கத்தில் ஏந்திக்கொண்டு உயர்ந்த மலைப் பாங்குகளில் விரைவாக ஓடக்கூடிய அத்துணைப் பலமுள்ளவராய் இருந்தார். வழியில் குறுக்கிடுகின்ற எந்த ஆற்றினையும் இலகுவாக நீந்திச்செல்வதில் மிகத்தேர்ந்தவர். போர்புரிவதில் மிக ஆவலும் பழக்கமும் உடையவர். அவர் இவ்விதம் சிறந்த வீரராய் இருந்ததுடன் உதாரகுணமுள்ள புண்ணிய புருஷராகவும் விளங்கினர். பாபர் சுன்னி ஹனபி மதுஹபுடையவராக யிருந்தும் மார்க்க சட்டங்களைக் கற்றுணர்ந்து அதன்படி நடப்பதில் பிரியமுள்ளவர். தமது விருத்தாந்தங்களைப்பற்றி தம் கைப்படவே நூற்கள் எழுதி இருக்கின்றார்.

அமீர் தைமூரின் ஆட்சியின் கீழிருந்த நாடுகளில் ஒரு சிலதே பாபருக்கு கிடைத்தது. பாபரின் பாட்டனர் "அபூசயீத்" என்

பவருக்கு பதினொரு குழந்தைகள் இருந்தார்கள். இப்பதினொருவருக்கும் அமீர் தைமூரின் நாடுகள் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. பாபரின் தந்தை அபூஸயீதின் நாலாவது மகன். இவருக்கு மிகவளமுள்ள சில தேசங்களும் சில நாடுகளும் உரிமையாகக் கிடைத்திருந்தன. பாபருக்கு தமது தாயாரின் பாத்தியதையிலிருந்து இவர் பன்னிரு வயதாயிருக்கும்போது "பர்கானு" என்றநாட்டின் அதிகாரம் கிடைத்தது.

அவரது ஆரம்ப வாழ்கை மிக்க வியப்புடையது. அவர் பட்டத்திற்கு வந்த மூன்ருவது வருஷத்தில் அமீர் தைமூரின் தலைநகராயிருந்த "சமர்கந்தை" ஜயிப்பதற்கு முனைந்து நின்றார். முதலில் இக்காரியம் அவருக்கு கைகூடாமல் போயினும் பிறகு அவர் அதில் ஜெயம்பெற்றார். சமர்கந்தை பிடிப்பதற்காக சென்றிருந்தகாலத்தில் அவருடைய முக்கிய அதிகாரிகளில் ஒருவராகிய "அஹ்மத் தம்பூல்" என்பவர் பாபரின் இளைய சகோதரனாகிய 'ஜஹான்கீர்' என்பவரைப்போல் நடித்து பர்கானுவை கைப்பற்றிக் கொண்டார். அதன்மேல் பாபர் உடனே திரும்பிவந்து தமது அரசைக் கள்ளத்தனமாகக் கவர்ந்தவர்களை துரத்துவதற்கு வேண்டியமட்டும் பிரயத்தனம்செய்தார். ஆனல் அவரின் படைகளில் அநேகர் அவருக்கு உதவிசெய்யாமல் எதிரிகளோடு சேர்ந்துக்கொண்டதால் அக்காரியத்தில் தோல்வி அடையும்படி நேர்ந்தது. இதன் மத்தியில் அவரால் புதிதாக ஜெயிக்கப்பட்ட "சமர்கந்தும்" அஜ்பகோன் வகுப்பினரின் சர்தாராயிருந்த "ஷைபானீகான்" என்பவர் கையில் போய்விட்டது.

அப்பால் இளவரசராகிய பாபரின் நிலைமை மிகமோசமாயிற்று. அவருக்கு நாடுகளில்லை, சேனைகள் இல்லை, இருக்க வீடுகளில்லை. எந்த இடத்திற்குப் போவதென்ற ஆலோசனையிலிருந்தார். தாதார் தேசத்திற்குவெகு தூரத்திற்கப்பால் பாலை வனங்களிலுள்ள பெரும்பாலான மொகல் ஜாதியாரை ஆண்டுக்கொண்டிருந்த தமது மாமனாகிய "அஹ்மத்கான்" இடத்திற்கு போகநினைத்தார். ஒன்றும் சரிவரவில்லை. கடைசியாக சமர்கந்து நாட்டின் வடமேற்கு மூலையிலுள்ள பெரிய மலைகளைக் கடந்து அப்பாலுள்ள வெளியில் சென்றுவிடத் தீர்மானித்தார்.

இரு மலைகளினிடையிலிருந்த "காம்றாத்" என்ற பாதையிற்சென்று அங்கிருந்து கரடு முரடாக மலையடிவாரங்களில் சென்றுக்கொண்டிருந்த ஓர் ஆற்றங்கரையோரமாக உள்ள பாதையிற் வெகு கஷ்டப்பப்பட்டு நடந்து சென்றார். அவரைத் தொடர்ந்து சென்ற தோழர்களில் அநேகர் அந்த அபாயமான யாத்திரையால் ஏற்பட்ட கஷ்டங்களையும் துன்பத்தினையும் தாங்கக் கூடாமல் வருத்தமுற்று, பாபருக்கு அரசராய் இருக்க நல்லகாலம் வரவில்லை என்று அவருடன் மேல் செல்லாமல் திரும்பிவிட்டார்கள். ஆனல் சில உண்மையும் விசுவாசமும் உள்ள தோழர்கள் அவரைவிட்டுப் பிரியாமல் அவருடனேயே மேடும் பள்ளமுமான வழிகளில் நடந்து சென்றார்கள். ரஸ்தாவில் நடக்கமுடியாமல் அவதிப்பட்ட அநேக ஒட்டகங்களையும் குதிரைகளையும் ஆங்காங்கே விட்டுச்சென்றார்கள். கடைசியாக எல்லோரும் "சேர்தர்க்" என்னும் மலையடிவாரம் வந்து சேர்ந்தார்கள். இந்த இடத்தைப்பற்றி "என்னுடைய ஜீவியநாளில் இப்படிப்பட்ட நெருக்கமும், இருட்டும், கரடுமுரடுமான பாதையில் நடந்தது கிடையாது" என்று பாபர் தாம் எழுதிய நூலில் கூறியுள்ளார். என்றாலும் அவர்கள் எல்லோரும் ஒருமனப்பட்டு அபாயகரமான பாதைகளில் ஏற்படும் தொல்லைகளையும் கஷ்டங்களையும் கவனியாமல் இரவுபகலாக நடந்து மலைகள், பள்ளத்தாக்குகள் காடுகளையுந்தாண்டி "கான்" என்ற இடத்திலெல்கையில் வந்து சேர்ந்தார்கள். சமர்கந்திலிருந்து திரும்பிய அநேக அதிகாரிகள் அந்த இடத்திலிருப்பதை அறிந்தார். ஆனல் அங்குள்ள மலைகளின் அமைப்பு அவ்விடத்திற்குப் போதுமான அரண்போல் காணப்படாமையின், அங்கிருந்து அப்புறம் செல்லவேண்டியதாயிற்று. சமர்கந்தின் சமீபமுள்ள "கபஷ்தூத்" என்னும் ஊரைநோக்கி உற்சாகத்துடன் சென்றார்கள். அவ்வூர் காலியாக்கப்பட்டிருப்பதை அறிந்து சமர்கந்து நகரினுள் பிரவேசிக்கும் ஒரு ஆற்றின் பாலத்தின் வழியாக "ரிபாத்காஜா" என்ற ஊரை திடீரெனத் தாக்குமாறு தம் கூட்டத்தவருள் சிலரை அனுப்பிவைத்தார். அவர்கள் சென்று முற்றுகை செய்யுஞ் சமயத்தில் கோட்டைக்குள்ளிருந்தவர்கட்கு தெரிந்து

விட்டதால் வீணே திரும்ப வேண்டியதாயிற்று.

பாபர் அச்சமயத்தில் "யர்யிலாக்" என்னுமிடத்தை நோக்கிப் போயிருந்தார். அவ்விடத்தில் பாபருக்குத் தெரிந்த அநேக அமீர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் பாபருக்கு நல்வரவுகூறி சமர்கந்தை திரும்பக் கைப்பற்றுவதற்கு வாக்களித்து முன்வந்தார்கள். என்றாலும் அவரின் சேனையின் பலம் அச்சந்தர்ப்பத்திற்குப் போதுமானதாகக் காணப்படவில்லை. வேறு எந்தப் பெரியவீரனும் அப்படிப்பட்ட கஷ்டமான நிலைமையினைக் கண்டு திரும்பிப் போவதைத் தவிர வேறு மார்க்கத்தைக் கண்டுபிடிக்க மாட்டான். சமர்கந்தில் ஷைபானிகானின் சேனைகள் பல இடங்களிலும் பரவியிருந்ததால் சண்டைசெய்வதற்கு தயாராயில்லை. "கஜாதீதார்" என்ற இடத்திற்கு சமீபம் ஷைபானீகான் 8000-சிப்பாய்களைக் காவல் வைத்திருந்தார். ஆராயிரத்திற்கு குறைவில்லாத சிப்பாய்கள் சமர்கந்தை காவல்புரிந்து கொண்டிருந்தனர். பாபரை விட்டுப் பிரிந்த இரண்டுமூன்று சர்தார்களும் ஷைபானீகானுடன் சேர்ந்து இரண்டாயிரம் சேனைகளுக்குத் தலைவராய்ச் சமர்கந்து நகரத்தின் பக்கத்தில் தங்கி இருந்தனர். பாபர் எவ்வளவு முயற்சிசெய்தும் இருநூற்றிநாற்பது காலாட் படைகளுக்குமேல் ஒன்றும் சேர்க்கமுடியவில்லை. ஒரு சமயம் பாபர், இழந்துபோன சிம்மாஸனத்தை திரும்பவும் அடைவதற்குள்ள மனோதைரியமும் வீரமும் தவிர வேறு அவருக்கு யாதொன்றுமில்லை என எண்ணினர். தம்முடைய முழு வீரத்தனத்தால் சமர்கந்தில் திடீரெனத் தாவி விழுந்து பகைவருடன்போர் செய்யின் வெற்றிகிடைக்குமென்று திடமாக நம்பினர். அன்றியும் சமர்கந்திலுள்ள பிரஜைகளுக்கு புதிய அரசராகிய ஷைபானீகானிடத்தில் இதுவரை கட்டுப்பாடான நம்பிக்கை ஏற்பட்டிராதென்றும் தாம் அங்கு போவதாயிருந்தால் அங்குள்ளவர்கள் தங்கள் தேசத்தவரின் அரச பரம்பரையிலுள்ள வீரபுருஷர், கொடுங்கோல் மன்னனின் ஆட்சியிலிருந்து தங்களை மீட்கவந்தாரென்று தம்மை அன்புடன் வரவேற்றுதம் கட்சியில் சேர்வார்கள் என்றும், இன்னும் அங்குள்ள அரசியல் நிலையற்றதாயிருந்ததென்றுங் கருதி உடனே அதற்கு முயற்சித்தார்.

பாபர் இவ்விதமான யோசனையின் மீது நம்பிக்கை வைத்து தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து நடுப்பகலில் புறப்பட்டு நடு இரவில் "யூறத்கான்" என்னும் நகரம் வந்து சேர்ந்தார். உள்ளே பிரவேசிக்கலாமென்றிருக்குஞ் சமயத்தில் கோட்டையைக் காவல் புரிந்தவர்கள் உஷாராய் இருப்பதையறிந்து எதிர்ப்பதில் பிரயோசனமிராது என நினைத்து மறுபக்கமாகத் திரும்பி "யர்யிலாக்" என்னும் நகரை விடிவதற்குள் கைப்பற்றிக் கொண்டார். இங்கு சிற்சில சில்லரைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அவைகளைப்பற்றி பாபர் தம் கைப்பட மிக விரிவாக எழுதியுள்ளார். அவற்றிலிருந்து பாபர் எப்படிப்பட்ட அபாயகரமான சம்பவங்களில் அகப்பட்டிருந்தாரென நாம் அறிந்துக்கொள்ளலாம். ஒரு சமயம் பாபர் "அஸ்பந்திக்" என்ற கோட்டைக்குள்ளிருக்கையில் அவரும் அவரைச் சேர்ந்த சில அமீர்களும் ஓரிடத்திலுட்கார்ந்து, பல விஷயங்களைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். பாபர் அவர்களிடத்தில் "நமக்கு எப்போது நல்ல காலம் வரும்? சமர்கந்து நம் கையில் என்று கிடைக்கும்? என வினவினர். ஒரு சிலர் "அடுத்த வேனற்காலத்தில்" என்றும், சிலர் "ஒரு மாதத்திற்ககம்" என்றும், சிலர் "இருபது நாளைக்ககம்" என்றும், ஒருவர் "பதினைந்து தினத்திற்குள்" என்றும் பதில் கூறினர்கள்.

பிறகு யர்யிலாகிற்குத் திரும்பி வந்து நாட்களை வீணை கடத்தாமல் ஒரு நாள்புறப்பட்டுச் சென்று இரவில் சமர்கந்து நகரை சுற்றிப்போகிற "மைகர்க்" என்னும் ஆற்றிலுள்ள பாலத்தின் சமீபம் வந்து தங்கினர். தம் கூட்டத்தவருள் எண்பது சிறந்த வீரர்களைப் பொறுக்கி எடுத்து, சமர்கந்து நகரின் காவற் சுவரைக் காக்கின்ற சிபாய்களை முற்றுகையிட்டு அங்கிருந்து உள்ளே போக மார்க்கமிருப்பின் "பாபெ பைரோஸ்" என்னுமிடத்தில் போய் அதைக் காக்கின்ற சிபாய்களை திடீரெனத் தாக்கி அதைக் கைப்பற்றிக் கொள்ளும்படியும் அதில் வெற்றியுற்றால் தமக்குத் தெரிவிக்குமாறும் ஏற்பாடு செய்து அனுப்பினர்.

இவ்வித ஏற்பாட்டின்படி நடக்கவே அவர்கள் அக்காரியத்தில் வெற்றியடைந்தார்கள். அவர்கள் ஒருங்கே நகர காவற்சுவரினுள்ளே சென்று நகரபாதுகாவல் படையினுள்

நுழைந்து அவர்களைக் கொன்று மாய்த்தார்கள். பிறகு கோட்டைவாசலிலுள்ள பூட்டையும் பக்கத்திலுள்ள ஆயுதச்சாலையினையும் அப்பால் தாக்கி உடைத்து வாசலைத் திறந்தார்கள். அதேசமயத்தில் பாபரும் அவ்விடம் வந்துசேர்ந்து நகரத்தினுள்ளே பிரவேசித்தார். ஆழ்ந்த நித்திரையிலிருந்த ஜனங்கள் எல்லோரும் கூச்சலைக்கேட்டு பயந்தவர்களாய் விழித்தெழுந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்கள். பாபர் வந்துவிட்டாரென்ற செய்தியை அறிந்த ஜனங்களெல்லோரும் மிக்க குதூகலமாகி "பாபர் நீடூழி வாழ்க" என்ற ஆரவாரத்தோடு ஒவ்வொருவராக முன்வந்து பாபரின் சேனையில் கலந்துக்கொண்டார்கள். பிறகு எல்லோருமாகச் சேர்ந்து நாலாபக்கங்களிலும் அஜ்பகோன்களை கல்லாலும் தடியாலும் அடித்து சுமார் 500 ஜனங்களை வீழ்த்தினர்கள். இதன் பிறகு சமர்கந்திலுள்ள அமீர்களும் வியாபாரிகளும் காணிக்கை ஸாமான்களுடன் இளவரசருக்கு நல்வரவு கூறவந்தார்கள். பாபர் அங்கிருந்து "அலக்பேக்" என்ற மதுரசாவிற்குச் சென்ருர். தம்மைக் காணவந்த அனைவரையும் அமைதி செய்தார். இந்நிலைமையில் அஜ்பகோன்கள் நகரின் வெவ்வேறு பாகத்திலிருந்தும் வெளியே துரத்தப்பட்டிருந்தபோதிலும் ஒரு சிலர் கோட்டையினுள்ள "பாபெ ஆஹன்" என்ற இடத்தில் முற்றுகை செய்திருப்பதாக பாபருக்கு செய்தி எட்டியது. உடனே பதினைந்து குதிரைப் படையுடன் பாபர் அந்த இடத்திற்கு வந்து சேர்வதற்குள் அவரின் கூட்டத்தார் அஜ்பகோன்களை நகரின் வெளியே துரத்தி விட்டார்கள்.

விடியற்காலை ஷைபானீகான் தம்முடைய ஆட்கள் பாபெஆஹன்மீது காவல்புரிந்துக் கொண்டிருப்பர் என்ற எண்ணத்துடன் சைன்யங்களோடு வராமல் 50, குதிரைப் படைகளைமட்டும் கூட்டிவரும்போது ஆட்கள் திரும்பி வருவதைக்கண்டு ஒன்றுஞ் செய்ய வகையறியாமல் தாமும் திரும்பி விட்டார். பாபருக்கு இது ஒரு அதிர்ஷ்டகாலமாய் இருந்தது. ஏனெனில் அவருடைய சேனையின் எண்ணிக்கை ஒரு பிடி மண்ணிற்கே சமமாயிருந்தது. பாபர் இச்சந்தர்பத்தில் தம்முடைய புத்தி சாதுர்யத்தாலும் மனேதைரியத்தாலுமே அவ்விதம் செயற்கரிய காரியம் செய்து வெற்றிபெற்ருர். இச்சமயத்தில் அவர் 18, வயது பிராயமுடையவராய் இருந்தார்.

சமர்கந்து ஷைபானீகான் கையிலிருந்து பறிபோயினும் "புகாரு" என்ற தேசமும் அதைச்சுற்றியுள்ள இடங்களும் அவர் ஆள் கையின் கீழே இருந்தது. இங்குள்ள சேனைகளின் தொகையும் வெளியிடங்களிலும் காடுகளிலுமுள்ள ஜனங்களின் எண்ணிக்கையும் மழைக்காலத்தில் மிக பெருக்குடையதாயிற்று. ஆகவே வேனல் காலம் வந்தபோது ஒரு பெருஞ் சேனையைத் திரட்டி பாபருடன் யுத்தஞ் செய்வதற்கு புறப்பட்டார். புகாருவிலிருந்து சமர்கந்திற்கு செல்கின்ற ரஸ்தாவில் இருகட்சியருக்கும் சண்டை மூண்டது. இந்த யுத்தம் பாபருக்கு பெரிய தோல்வியைக் கொடுத்தது. அவரின் வீரர்களில் அநேகர் யுத்தகளத்தில் மாண்டுபோயினர். பாபரும் பன்னிரு குதிரை சவாரிகளும் தப்பிப்போவதற்கு மார்க்கம் கிடைத்தது. அவர்கள் தங்கள் ஆடுமாடுகள் தளவாடங்கள் முதலியவைகளோடு ஆற்றில் குதித்து கஷ்டத்துடன் நீந்தி அக்கரை சேர்ந்தனர். என்ருலும் குதிரைகளும் மற்றும் சாமான்களும் யாத்திரைக்குத் தடையாயிருந்ததால் அவற்றை விட்டு பாதசாரியாய் அலைந்து திரிந்தார்கள்.

முடிவில் பாபரும் ஒரு சில தோழரும் தமது பந்துக்களில் ஒருவரின் ஆட்சிக்குள்ளிருந்த "யூருத்பர்" என்னுமிடத்தில் வந்து சேர்ந்தனர். அம்மன்னர் பாபரின்மீது அனுதாபங்கொண்டு தமது "தஹ்காத்" என்ற ஊரில் மழைக்காலம் கழிகிறவரை தங்கி இருக்க ஏற்பாடு செய்தார். இவ்வூர் ஓர் மலையடிவாரத்திலுள்ள மிக்க வளமுள்ள இடமாக இருந்தது. அங்குள்ள ஜனங்கள் பார்ஸீ பாஷை பேசுகின்ற "ஸாஹித்" ஜாதியாராய் இருந்தார்கள். குதிரைகளும் ஆடுகளும் அவர்களுக்கு அளவில்லாமல் இருந்தன. பாபர் அங்குள்ள இடையர்கள் வீட்டில் சில நாட்களைப் போக்கினர். பாபர் இன்னும் இளம் பிராயமுள்ள ஜவானுயும் இயற்கை வனப்பின் மீது பிரியமுள்ளவராயும் இருந்ததால் அவர் அனுபவித்த துன்பமெல்லாம் மனதினின்று மாறிப்போவதற்கு அது ஒரு நல்ல இடமாயிருந்தது. சமீபத்திலும் தூலையிலுமுள்ள மலைகளிலும் கரடுமுரடான பாதைகளிலும்

கூரிய கற்கள் நிறைந்துள்ள இடங்களிலும் வெறுங் காலுடன் சுற்றித் திரிவார். அதனால் அவர் கால்கள் உறுதியாயின. பாபர் அடிக்கடி ஒரு வயது சென்ற கிழவர் வீட்டிலேயே தங்கி இருப்பது வழக்கம். இக் கிழவரின் உறவினருள் ஒருவர் அமீர் தைமூரின் இந்துஸ்தான் படை எழுச்சியில் கலந்திருந்தவராவர். ஹிந்துஸ்தானைப்பற்றிய அநேக செய்திகள் அவருக்கு நன்றாக ஞாபகமிருந்தது. பாபரிடத்தில் அவர் அடிக்கடி அதிசயிக்கத்தக்க கதை சொல்லி உற்சாகப்படுத்துவார். இக் காரணத்தால் கொஞ்சங் காலத்திற்குப் பிறகு பாபருக்கு ஹிந்துஸ்தான் போக ஆசையுண்டாயிற்று.

பிறகு தஹ்காத்திலிருந்து பிரிந்து இரண்டு வருஷம் வறுமையிலும் கஷ்டத்திலும் கழித்தார். சில காலம் மலையிலும் அதிக காலம் தமது சிற்றப்பன் மஹ்மூத் கானின் சேனையிலும் இருந்தார். முடிவில் சிற்றப்பனின் உதவியால் இரண்டாந் தடவை பற்கானவை எதிர்த்து வெற்றி பெற்றார். பாபரின் இளைய சகோதிரராகிய ஜஹான்கீரும் அவருடன் சேர்ந்துக்கொண்டார். பற்கானவை இழந்த தம்பூல் என்பவர் அஜபகோன்களின் உதவியைநாடினர். பிறகு பாபருக்கும் தம்பூலுக்கும் கொடிய யுத்தம் நிகழ்ந்தது. அதில் பாபருக்கு என்றுமில்லாத தோல்வி நேரிட்டது. அவர் படையிலுள்ள ஒவ்வொருவரும் எதிரிகள் கையில் சிக்கிப்போயினர். சிற்றப்பனின் மொகலாய சைன்யங்களும் ஷைபானீகானால் தோற்கடிக்கப்பட்டன. இப்போது பாபரின் நிலைமை ஒரு கைதியைப்போலாயிற்று. அதனால் அவர் தாய் நாட்டின்மீதுள்ள நம்பிக்கையை அறவே இழந்து, தூரதேசமாகிய ஹிந்துஸ்தானத்தில் தமது அதிர்ஷ்டத்தைப் பார்த்துக்கொள்ள ஆவல்கொண்டார்.

(தொடரும்)

காப்பி அடிப்பதிலும் துவேஷமா?

சென்ற 29-10-31-ல் வெளிவந்துள்ள "இந்தியா" வாரப்பதிப்பில் கீழே குறிப்பிடப்படும் கதை ஒன்று வரையப்பட்டிருக்கிறது.

மாயாவினோத பரதேசி

"சாரதா! உன் தமைக்குக்கு உடம்பு சௌகர்யமில்லை என்று தந்தி வந்திருக்கிறது. ஆகையால் உன் தாயாரும் நானும் இப்பொழுதே புறப்படவேண்டும்."

"நான் தங்களுடன் வர கூடாதா?"

"நாங்கள் இப்பொழுது உன்னை எப்படி அழைத்துப்போகலாம். சுவாமிகள் நம் வீட்டில் தங்கியிருக்கிறார்களே! அவரை யார் கவனிப்பது?"

"இராத்திரிச் சாப்பாட்டை சுவாமிகளின் அருகாமையில் கொண்டு வந்து வைத்து விட்டுபோவோம். காலையில் வந்து விடலாகாதா?"

"அது மரியாதையல்ல! அவருக்கு வேண்டிய சிஸ்ருஷைகளை நாம் யாராவது உடனிருந்து கவனிக்க வேண்டாமா?"

"தந்தையே! சிறு பெண்ணாகிய என்னை ஒரு சாமியாருடன் தனிமையாக விட்டுச் செல்வது அபவாதத்திற் கிடமாகுமென்பதைச் சற்று ஆலோசித்துப் பாருங்கள். யாராவது இதைப்பற்றிக் கேள்விப்பட்டால் கேலிக்கிடமல்லவா?"

"சே! எவ்வளவு முட்டாள்தனமாய்ப் பேசுகிறாய். சுவாமி நித்தியாநந்தர் என்றால் அழுத பிள்ளையும் வாய் மூடாதா?" இவ்வுலக பந்தமனைத்தையும் அடியோடு துறந்த அம் மகாநுபாவரைப் பற்றி........அபசாரம்! அபசாரம்! பேசாதே! வாயை மூடிக்கொள். சுவாமிகள் காதில் விழுந்தால் அவர் சொல்லாமல் நம் வீட்டை விட்டப்பால் சென்று விடுவார்"

சாரதா மேற்கொண்டு எவ்வித பதிலும் சொல்ல முடியாமல் தயங்கி நின்றாள்.

சந்திரசேகரரும் அவர் மனைவி காந்தாரி யம்மையும் தில்லையிலிருந்து திரிபூவனத்திற்குப் புறப்பட்டு விட்டார்கள். சாரதா—கின்னஞ் சிறுமியாகிய சாரதா தனிமையில் விடப் பட்டாள்.

* * * * *

மாலை நேரம் மிக்க மனோகரமான வேளை. இளந்தென்றல் ஜில்லென அப்போது புதிதாய் வெடித்துப் பூத்துக்கொண்டிருந்த பாரிஜாத மலர்களின் நறுமணந் தாங்கி கமகமவென வீசிற்று. சுவாமி நித்தியாநந்தர் சாரதா வீட்டின் பின் புறத்திலுள்ள பாரிஜாத மரத்தடியில் உட்கார்ந்து தம் கையிலிருந்த ஜெப மாலையை உருட்டி கண்களை மூடிக்கொண்டு நித்தியாநந்த பூதியை அநுபவிப்பவராகக் காணப்பட்டார். அன்று மாலை சுவாமிகள் கண் விழித்துப் பார்க்கவேயில்லையாதலால் அவரைத் தரிசிக்க வந்தவர்களெல்லாம் காத்திருந்து பார்த்து சுவாமிகளின் சேவை கிட்டாததினால் மனமுடைந்து தத்தம் வீட்டிற்குத் திரும்பினர்.

மாலை ஐந்து மணிக்கெல்லாம் சுவாமிகள் பாலும் பழமும் சாப்பிடுவது வழக்கம். அன்று ஆறு மணி வரையில் சுவாமிகள் நிஷ்டை கலையாதிருந்ததால் சாரதா ஒரு வெள்ளித் தட்டில் பால், பழம் இவைகளை எடுத்துக்கொண்டு போய் நிஷ்டையிலிருந்த நித்தியாநந்தரின் எதிரில் வைத்து வணக்கி நின்றாள்.

சற்று நேரத்தில் சுவாமிகளின் கண்கள் திறக்கப்பட்டன. தன்னை வணங்கி நிற்கும் பேரழகின் சேவையைக் கண்டு அவர் பேருவகை பூத்ததற் கத்தாட்சியாக அவர் முகத்தில் என்றுங் கண்டிராத ஒரு புன்னகை எழுந்தது. அவர் நயனங்கள் குனிந்து கீழ் நோக்கி நிற்கும் சாரதாவின் கருவிழிகளைச் சந்திக்க முயற்சித்தன.

"சம்போ! சங்கர! மகாதேவா!" என்று கூறிக்கொண்டே நித்தியாநந்தர் தமது தண்டைகையும் ஜெபமாலையையும் தரையில் ஒரு புறமாய் வைத்துவிட்டு "பெண்மணீ! சுபமஸ்து! உனக்கு மங்களம் உண்டாகட்டும். இவைகளைக் கொண்டுபோய் வீட்டிற்குள் வைத்து விட்டு ஒரு சொம்பில் ஜலம் கொண்டுவா. நான் கை கால்களைச் சுத்தி செய்துகொண்டு அப்பால் வந்து இவைகளைச் சாப்பிடுகிறேன் என்று கூறினர்.

சாரதா உடனே வீட்டிற்குள் சென்று ஒரு சொம்பில் ஜலம் கொண்டுவரும்போது சுவாமிகள் எதிர்நோக்கிச் சென்று அதைத் தம் கையில் வாங்கினர். அப்படி வாங்கும்போது சுவாமிகளின் கை விரல் தன் கையுடன் வேண்டுமென்றே சம்பந்தப்படுத்தப்பட்டு—மெதுவாய் அமுக்கப்பட்டதாகவும் சாரதா அறிந்து சிறிது திகில்கொண்டாள்.

சுவாமிகள் கை கால்களைச் சுத்திசெய்து கொண்டு வீட்டிற்குள் வந்து பாலும் பழமும் புசித்துவிட்டு ஒரு சாய்வு நாற்காலியில் சாவதானமாய்ச் சாய்ந்தார். சாரதா ஒரு புறமாகத் தலைகுனிந்த வண்ணமாக பக்தி சிரத்தையுடன் நின்றாள்.

"சாரதா! நீ சிறு பெண்ணாயிற்றே. இரவு இந்த வீட்டில் தனிமையாக எங்கே படுத்துக் கொள்ளப்போகின்றாய். பேய் பிசாசுகள் தீண்டிவிட்டால் என்ன செய்கிறது? ஆதலால் இவ்விடத்திலேயே இரு. நான் உனக்குத் துணையாக இருக்கிறேன். பாதகமில்லை" என்று கூறி சாமியார் சாரதாவின் முகத்தை உற்று உற்றுப் பார்த்தார்.

சாரதா எவ்வித பதிலும் சொல்லாமல் மௌனமாய் நின்றாள்.

"ஏன் தயங்குகின்றாய்? உன் மனதில் என்னவிதமான குழப்பமுண்டாயிருக்கின்றது. கூறுவாயாக" என்று சாமியார் மறுபடியும் வினவினர்.

"ஒன்றுமில்லை. தங்களைப்போன்ற ஒரு மகானுடைய சன்னிதானத்தில் ஒரு இரவு கழிப்பதற்கு எனக்கு எவ்வித தயக்கமுமில்லை. ஆயினும் பாதகமில்லை. நான் என் அறையில் போய்ப்படுத்துக்கொள்கிறேன். தங்களுக்கு வேறு ஏதாவது தேவையுண்டோ?"

"ஓ! என்னுடைய தேவைகள் அநந்தம். மகானுபவராவது-சிகானுபவராவது! எல்லாம் உலகை மயக்க மாயாவினோதத் தோற்றமே! மகானுபாவனென்னப்பட்ட என் சரீரத்திலுள்ள இரத்தத்திற்கும் என்னைவந்து வணங்குகின்ற இதராளுடைய சரீரத்திலுள்ள இரத்தத்திற்கும் ஏதாவது வித்தியாசமிருக்கின்றதா? அல்லது எனக்கு ஏதாவது அதிசயமாகக் கொம்பு முளைத்திருக்கிறதா? சில சாமியார்களாவது அநாகரீகமாய் பிர

மாதமான ஜடாமுடியுடனும் நீண்ட தாடி மீசைகளுடனும் மனித மிருகங்களாகத் தோற்றுவார்கள். அத்தகைய அசந்தர்ப்ப மொன்று மில்லாமல் நான் கிளீனாய் (Clean) இருக்கிறேன் பார்'' என்று சாமியார் கட கடவென்று மணிப்பிரவளமாகச் சொல்மாரி பொழிய ஆரம்பித்துவிட்டார். இத்தகைய வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் சாரதா திடுக்கிட்டாளாயினும் அதைக் காட்டிக்கொள்ளாமல் கூடுமானவரையில் அமைதியா யிருக்க முயற்சித்தாள்.

"சுவாமி! தாங்கள் என்னுடன் பரிகாசம் செய்யலாமா?''

"சிறுபெண்ணே! நான் ஒன்றும் பரிகாசம் செய்யவில்லை. இன்று நாமிருவரும் தனித்திருக்கும்படி நேரிட்டது முன் ஏற்பாட்டினாலேயே''

இத்தகைய கடூரமான வார்த்தைகளை சாரதா எங்ஙனம் சகித்துக்கொண்டிருப்பாள். "சுவாமி! தாங்கள் இவ்வளவு கெட்டவரென்பதை உலகம் அறியாமல் தங்களைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றதே? எல்லோரும் பரிசுத்த வாழ்விலிருக்க வேண்டுமென்று தாங்கள் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதாகவும், மடம் கட்டுவதாகவும், ஆலயத் திருப்பணி செய்வதாகவும் ஏராளமாய்ப் பணம் பறிக்கிறீர்கள்''

"பயித்தியக்காரப்பெண்ணே! நான் அவ்வளவு பணரக்காரனா யிருப்பதால்தான் உன் தகப்பனாருக்கு இதுவரையில் பதினாயிரக் கணக்காய் கடன் கொடுத்திருக்கிறேன். இனாமாகவும் வேண்டியதும் கொடுத்திருக்கிறேன். பிற்காலத்தில் உன்னை என் இஷ்டம்போல் நடத்திக்கொள்ளலாமென்றே உனக்கு ஒரு பேடியான கணவனைத்தேடி விவாகம்செய்து வைக்கும்படிச் செய்தேன். இவை எல்லாம் முன் ஏற்பாடாக நடந்தவை. ஆனால் பைத்தியக்காரப்பெண்ணே! உன் தமக்கையைப் போல் நீ ஒரு புத்திசாலியல்ல''

"ஓ! அப்படியானால்—அடேய் பாவி! என் தமக்கையை ஏற்கனவே கெடுத்துவிட்டிருக்கின்றாயா?''

"அவளை நான் எந்த விதத்தில் கெடுத்து விட்டேனே? அவளுக்கு ஏராளமான நகைகள் செய்து கொடுத்திருக்கிறேன். பெண்ணே! நான் சட்டசபைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், பிரதிநிதியா யிருப்பதால் அரசாங்கத்தில் எனக்கு மிகச் செல்வாக்குண்டென்பதை நீயறிவாய். உன் தமக்கை புருஷன் தற்போது வகித்திருக்கும் உத்தியோகம் யாரால் கிடைத்தது? ஆகவே நீ புத்திசாலித்தனமா யிருந்தால் எவ்வளவோ பெருமையடையலாம். அவளைவிட நீ என்ன அழகில் குறைந்தவளா?

"நீ நாசமாய்ப்போக. உன் பணமும் நகைகளும் யாருக்கு வேண்டும். சண்டாளப் பயலே'' என்று கோபமாய்க் கூறிக் கொண்டே சாரதா தன் அரைக்குள் சென்று கதவைத் தாளிட்டு விடலாமெனச் சரேலென்று அப்பால் செல்ல, சுவாமியாரும் எழுந்து அவளைப் பின்பற்றி அறைக்குள் புகுந்தார்.

இருவருக்கும் பிரமாதமான சச்சரவு நிகழ்ந்தது. அன்றாடம் பாலும் பழமும் புசித்துக் கொழுத்திருக்கும் ஒரு சரியான ஆசாமியுடன் பைங்கொடிபோன்ற இளம் பெண் என்ன செய்யமுடியும்? கடைசியாக சாரதா சோர்வுற்று சாமியாரின் கை வசப் பட்டுவிட்டாள்.

சாரதா அறிவாளியாதலால் அன்று தனக்கு நேரிட்ட கதியையும், தன் பிற்கால வாழ்வையும்பற்றி அந்த அபாயகரமான நேரத்திலும் சற்று ஆழ்ந்து யோசித்தாள். தனது தகப்பனார் சாமியாரிடம் ஏராளமாய்க் கடன்பட்டிருப்பதையும் அவரது ஜீவாதார உரிமைகளனைத்தும் சாமியாரிடம் சிக்கிக்கொண்டிருப்பதையும் பற்றி அவள் மிகவும் கவலை யடைந்தாள்.

"மதியற்ற பெண்ணே! நான் லட்சக் கணக்காய் சம்பாதிக்கிறேன். என்னைப்போல் அரசாங்கத்தில் செல்வாக்குள்ள சாமியாரை நீ பார்த்ததுண்டா? இங்கிலாந்தில் நடைபெறும் வட்டமேஜை மகா நாட்டிற்குங்கூட என்னை அரசாங்கத்தார் அழைத்தார்கள். அரும்பாயிருக்கும் மலர் எப்பொழுது பூக்குமென்று தேனைக் குடிப்பதற்காக வண்டுகள் அதியாவலுடன் எதிர்பார்த்திருப்பதுபோல் உன் ஆசையை எப்பொழுது அடையலாமென்று நான் எதிர்பார்த்திருந்தபடியால் இங்கிலாந்து செல்ல மறுத்துவிட்டேன். ஆதலால் நன்றாய் ஆலோசித்துப்பார். உனக்கு ஏராளமான சம்பத்துண்டாக வழியிருக்கின்

றது. பெயரளவில் உன் புருஷனயிருக்க வேண்டியவனுக்கு அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் சம்பாதித்து கொடுத்து விடுகிறேன்" சாமியார் இவ்வாறு பிரமாதமாகப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டே சாரதா தன்மனத்தில் எதையோ நிரூபணம் செய்துகொண்டு கடைசியாக சுவாமிகளுக்கு இணங்கிய பாவனையாக ஒரு இளநகை செய்தாள். இந்த அமிழ்தினுமினிய இள நகையைக் கண்ட மாத்திரத்தில் நித்தியானந்த சுவாமிகளின் ஆசை அளவு கடந்து அணைகடந்து புரண்டெழுந்து பெருகிற்று.

"சுவாமிகளே! தங்களை நான் எப்படி நம்புவது. ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்ற பழமொழிப்படி என்னைவிட சிறிது அழகுள்ள மற்றோர் பெண்ணைக் கண்டால் தங்கள் சபலபுத்தி அதி சீக்கிரத்தில் மாறிவிடப்போகின்றது. தங்களுடன் சிறிது காலம் பெரு வாழ்விலிருந்துவிட்ட பின் எப்படி என் மண்ணாங்கட்டி மாப்பிளையுடன் காலம் போக்குவேன்" என்று சாரதா பேச்சுக்கேற்ற நடைநொடி பாவனைகளுடன் கூறினாள். பூங்கொடிபோல் துவளும் சாரதாவின் சொர்ண விக்கிரகம் போன்ற மேனியைப் பார்க்க நித்தியாநந்த சாமியாருக்கு உண்மையிலேயே பரமானந்தமாயிருந்தது.

"ஓ! பெண்கள் நாயகமே! உன்னை ஸ்மரித்துக் கொண்டே நான் இதுகாறும் நிஷ்டையிலிருந்தேன் என்பதை நீயறிவையோ!" என்றார் சுவாமியார்.

"வார்த்தைகளைச் செய்கைகளால் நிரூபிக்க வேண்டும். என் தந்தை தங்களுக்கு பத்தாயிரம் ரூபாய்களுக்கு பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்திருக்கிறாரே! அதை முதலில் கிழித்துப்போடுங்கள் பார்ப்போம்" என்று சாரதா கூறி சுவாமிகளிருப்பிடத்தை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தாள்.

"கொத்தமங்கலம் ந. ம. சு. பள. பள. ரா. அரு. அருணசலஞ் செட்டியார் அவர்கள் நமது மடாலயத் திருப்பணிக்காக நன்கொடையாகக் கொடுத்த பணமன்றோ அது. உன்னை விட அது பெரிதல்ல. நான் மடம் கட்டுகிற காலத்தில் அதைப்போல் எத்தனையோ பத்தாயிரம் வந்து குவியும்" என்று கூறி சாமியார் தமது கைப்பெட்டியிலிருந்து அந்த பிராமிஸரி நோட்டை எடுத்துக்கிழித்துப்போட்டுவிட்டு சாரதா இப்பொழுதாவது என்மீது உனக்கு "நம்பிக்கை ஏற்பட்டதா" என்றார்.

"எங்கே அந்தப் பெட்டியை திரவுங்கள்: இன்னும் எவ்வளவு இருக்கிறது பார்க்கலாம்" என்று சாரதா கூறியவுடன் சுவாமிகள் ஒடோடிச்சென்று தமது பெட்டியை எடுத்து வந்து சாரதாவின் முன்னே வைத்துத் திறந்தார். பெட்டிக்குள் ஐந்து ஆயிரம் ரூபாய் நோட்டுகளிருந்தன. அதை சாரதா எடுத்துப் போய்த் தன் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, சுவாமிகளின் அருகாமையில் வந்து நின்றாள்.

அதற்குள் சாமியார் தமது சட்ட சபை உடுப்புகளால் அலங்கரித்துக்கொண்டு தலைப்பாகை சூடி சாரதாவின் சயனக் கிரகத்திலிருந்த வில்வெட் சோபாவில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக்கொண்டு அமளியாக வீற்றிருந்தார். சாரதா அருகாமையிலிருந்த வட்ட மேஜையின்மீது ஒரு கையைத் தாங்கவிட்டு ஒய்யாரமாக நின்றாள்.

"சுவாமிகளே! என்கதிதான் என் சகோதரிக்கும்நேரிட்டதா?" என்று வினவினாள்.

"ஆம்!"

"அவள் தங்களுக்குச் சீக்கிரத்தில் இணங்கி விட்டாளா?"

"இந்தியா தேசத்தில் பிறந்த பெண்களில் யார்தான் சீக்கிரத்தில் பிற புருடனுக்கு இணங்கிவிடுவார்கள்!"

"தாங்கள் மாயாவினேதப் பரதேசியாயிருக்கின்றீர்களே! நேற்று முன்தினம் இவ்வுலக வாழ்க்கை அநித்தியமானதென்று தாங்கள் பிரமாதமாய்ப் பிரசங்கமாரி பொழிந்தபோது சர்வத்ராளும் கேட்டுத் திக்பிரமையடைந்து நின்றார்களே!"

"பெண்ணே! அதுதான் உலக மாய்கை"

"ஏன் தாங்கள் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு பகிரங்கமாக வாழக் கூடாது?"

"அப்படியிருந்தால் அறிவற்ற இந்தப் பேதை மக்கள் என்னை சாமி என்று வணங்கி தூப தீப ஆராதனை செய்து நான் கேட்டவற்றை எல்லாம் கொடுக்கமாட்டார்களே! நேர

மாகிறது. இந்த வீண் பேச்செல்லாம் எதற்காக! என் அருகில் வா!''

* * *

சாரதா மறுபடியும் புன்னகை புரிந்து தன் அம்புபோன்ற கடைக்கண் வீச்சினால் சுவாமிகள் உள்ளம் மகிழ்ந்து மெய்மறந்திருக்கும்படி செய்து திடீரென்று அவர்மேல் புலிபோல் பாய்ந்து அவர் முகத்தில் ஒரு பலமான குத்து விட்டாள். எதிர்பாராத விதமாக இச் சம்பவம் நிகழ்ந்தமையால் சுவாமிகள் அடியின் அதிர்ச்சியால் மெய் சோர்ந்து சோபாவில் சாய அவரது கைகளையும் கால்களையும் சேர்த்து சாரதா கெட்டியாகக் கட்டி அவர்வாயில் துணியை வைத்து அடைத்து விட்டாள். மூர்ச்சை தெளிந்தவுடன் சுவாமிகள் தமது பரிதாபகரமான நிலைமையை யுணர்ந்து சாரதாவை மிகவும் இரக்கமாகப் பார்த்தார். சாரதா உடனே ஒரு காகிதமும் பென்சலும் எடுத்துக் கொண்டுவந்து தன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினாள்:—

தந்தையே!

அவர் என்னைத் தீண்டிவிட்டதால் என் சரீரம் குற்றமுடையதாய்விட்டது. என் பெட்டியில் தங்களுக்கு வேண்டிய பணமிருக்கிறது. இதுகாறும் வளர்த்தெடுத்த நன்றிக்காகத் தங்கள் கடன்களையெல்லாம் தீர்த்துவிட்டேன். தங்கள் பிராமிஸரி நோட்டு கிழித்தெறியப்பட்டது. தந்தையர்கள் தம் பெண்களை விலைபடுத்துவதற்கும், மாயா வினோதப் பரதேசிகள் பாமர மக்களை ஏமாற்றுதற்கும் இடங்கொடுக்காத ஒரு உலகத்திற்கு நான் பிரயாணப்படுகிறேன்.''

கடிதம் எழுதி முடிந்ததும் சாரதா ஒரு புட்டி மண்ணெண்ணெயை எடுத்து தன் சரீரத்தில் ஊற்றிக்கொண்டு "சுவாமிகளே! தங்கள் அருகாமையிலேயே எப்பொழுதும் இருக்கும்படி விரும்பினீர்களல்லவா? அதன்படி இதோ வந்து விட்டேன்'' என்று கூறி ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்து தன் ஆடையைக் கொளுத்திக்கொண்டு நித்தியானந்த சுவாமிகளின்மீது விழுந்து அப்படியே அவரை இறுகக் கட்டிக்கொண்டாள்.

மறுநாட் காலையில் திருபுவனத்திலிருந்து சந்திரசேகரர் திரும்பியவுடன் சாரதாவின் அறை தாளிடப்பட்டிருப்பதைக் கண்டு பன்முறை தட்டிப்பார்த்தும் திறக்கப்படாததால் வெளிப்புறத்திலிருந்த ஜன்னலைத் திறந்து இக்கோரமான காட்சியைப் பார்த்தார். சுவாமிகள் அங்கமெல்லாம் நொந்து புண்பட்டு தாங்கமுடியாத வேதனையுடன் படுக்கையில் அலங்கோலமாய்ப் புரண்டு கொண்டு குற்றுயிருடன் தவித்துக்கொண்டிருந்தார். அவர் அருகாமையில் தன் அருமை மகள் சாரதா—வின் உயிரற்ற உடல் கிடந்தது.

இக் கட்டுரையை திரித்துப்புரட்டி 30—10—31 - ல் வெளிவந்துள்ள "தாருல் இஸ்லாம்'' பத்திரிகையில் அடியில் வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

ஆயிஷாவின் அற்புத நடத்தை.

ஒரு சிறு கதை

"மகளே ஆயிஷா! நீ வீட்டிலேயே பத்திரமாயிரு! அக்காளுக்குக் கடின ஜுரமென்று செய்தி வந்திருக்கிறது. நானும் உன் தாயாரும் அவளைப் பார்க்க அவள் ஊருக்குப் போகிறோம்.''

"அப்பாஜான் நான் வர வேண்டாமா?''

"நான் உன்னை எங்ஙனம் அழைத்தேகுவேன்? கோஷாப் பெண்ணல்லவோ நீ! அப்படியே அழைத்துக்கொண்டு போனாலும் மஸ்தானெலியைக் கவனித்துக் கொள்வது யார்? அவரைத் தனியாக விட்டுச் செல்லலாமா? அவர் தண்ணீர் கேட்பார். யார் கொண்டு வந்து கொடுப்பது? மிகப்பெரிய ஞானியாகிய அவருக்கே அவ்வேலையை விட்டுவிட்டு நாம் சென்றுவிட்டால் நம்மை ஊரார் என்ன எண்ணுவர்?''

"ஆம் அப்பா! அது சரிதான்; ஓரிளம் நங்கையாகிய என்னையும் அவரையும் இங்கே இரவுகளிலும் தனித்திருக்க விட்டுச் செல்வதைப்பற்றி ஊரார் ஒன்றுங் கூற மாட்டார்களா?''

"முட்டாள் கழுதை! அத்தகைய பரப்பிரம்மத்தை இவ்வாறு கூற உனக்கு நாவெழுந்ததா? அவர் முற்றுந் துறந்த பரமசாது; ஞானங் கைவல்யமாகிய பெரும் பகீர்; அறிவுக் களஞ்சியமாகிய மஸ்தான்; ஆண்டவனின் பேரருள்பெற்ற ஒளலியா. இன்னொரு முறை இவ்வாறு கூறினையானால் உன் நாக்கை யறுத்து விடுவேன் தெரியுமா?''

ஆயிஷா ஒன்றும் கூறாமல் மௌனமாயிருந்து விட்டாள். அவள் பெற்றோர் அன்று மாலை அவ்வூரை விட்டுத் தம் மூத்த மகளிருக்கும் ஊருக்குப் போய்விட்டனர். தம்மகளைத் தனியாய் மஸ்தானொலி அவர்களின் கண்காணிப்பில் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி நாகூர்ப் பிச்சை மரைக்காயர்-ஆயிஷாவின் தந்தை — விட்டுச் சென்று விட்டார்.

அவர்கள் போனபின் அந்த மஸ்தான் தனியேயிருக்கும் ஆயிஷாவை அத்தியந்த விசுவாசத்துடன் கடைக்கண்ணால் அடிக்கடி நோக்கினார். அவ்வளவு பெரிய வீட்டில் அவரின் ஏகக் கண்காணிப்பில் அவள் விட்டுச் செல்லப்பட்டாள். இது செய்தி தெரிந்தால் இரங்கூனிலிருக்கும் அவள் கணவனும் இதர அக்கம் பக்கத்தாரும் என்ன எண்ணுவர்! ஏற்கனவே, ஆயிஷாவின் திருமணத்திற்கு மஸ்தான் அவள் தந்தைக்குச் செய்த உதவியைப்பற்றி ஊரார் ஒரு விதமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

ஆயிஷா தனியே தன்னை விட்டுப்போனதை எண்ணியெண்ணி வருந்திக்கொண்டிருக்கையில், மஸ்தான் அழைக்கும் குரல் கேட்டு அவர் அறைக்கு ஓடி அவர் கேட்டபடி தண்ணீர் எடுத்துப்போய்க் கொடுத்தாள். செம்பைக் கையில் வாங்கிய மஸ்தான் ஆயிஷாவின் கைவிரல்களை ஸ்பரிசிக்க மறந்துவிடவில்லை. அப்போதே ஆயிஷாவின் உடலெங்கும் மயிர்க் கூச்செறிந்து உடல் நடுங்கியது.

மஸ்தான் கால்வாய்க்குப் போய்த் திரும்பினார். அதற்குள்ளாக ஆயிஷாவின் மனத்தில் ஆயிரங்கோடி எண்ணங்கள் உதித்தன. எவர் வீட்டிலாவது ஓடிப்போய் பெற்றோர் வரும்வரை தங்கியிருக்கலாமாவெனச் சிந்தித்தாள். மஸ்தானைத் தனியே விட்டுச்செல்வதால் தன் பெற்றோரும் கணவனும் தன்னைத் தண்டிப்பாரே எனப் பயந்தாள். எனவே பொறுமையுடன் பேசாமலிருந்து விட்டாள்.

மஸ்தான் திரும்பிவந்ததும் ஆயிஷா தன்னறைக்குப் போக முயர்ச்சித்தனள். அஃது ஒரு கிராமமாயிருந்தபடியாலும் இரவு சமீபித்து விட்டதாலும் அன்று அமாவாசை இரவாயிருந்தபடியாலும் எங்கும் ஒரே இருள்மயமாயிருந்தது. அன்றியும் ஆயிஷாவுக்கோ பிசாசு பயம் அதிகம். இதை நன்குணர்ந்திருந்த மஸ்தான் அவள் தனியே படுத்துக்கொண்டால் பயப்படகூடுமென்றும், அடுத்தாற்போல் பேய்கள் நடமாடுவதாக வதந்தியிருக்கிறதென்றும் இளம்பெண்கள் தனியே படுக்கக்கூடாதென்றும் கூறினார். ஆனால், அவள் அப்போது சிறிது தைரியமாகத் தனியே படுத்துறங்குவதையே விரும்பி, “ஒரு ஞானியாம் மஸ்தானிருக்கும் வீட்டில் தனியே படுக்க என்னபயம்?” என்ற வினாவுடன் தான் தன் அறைக்குப் போக விடை கோரினாள்.

“ஞானியாவது? அஞ்ஞானியாவது! என்னிடத்திலும் இதரர்களிடத்திலும் ஒரேமாதிரி தசையும் இரத்தமும் தாமே இருக்கின்றன.

ஆயிஷா இவ்வார்த்தைகளைக் கேட்டுப் பயந்து விட்டனளெனினும், அப்பயத்தை மறைத்துக்கொண்டு, “தாங்கள் என்னைச் சோதிக்கிறீர்கள் போலும்! என்றாள்.

“பெண்ணே ஆயிஷா! நான் சோதிக்கவில்லை உண்மையே கூறுகிறேன். உன்னை என்னுடன் சேர்த்து வைக்கவே உன் தாய் தந்தையர் உன் அக்காளுக்கு ஜுரமென்று பொய் கூறி உன்னை என்னிடத்தில் விட்டு விட்டுச் சென்றனர்!”

இனியும் கோபமும் அச்சமும் அடக்க மாட்டாத ஆயிஷா ஆவேசத்துடன், “இவ்வளவு இழிவான வார்த்தைகளை எப்படிப் பேசுகிறீர்? இதரர்களை ஆன்மிகமாகவும் இறைவனுக்கஞ்சியும் குர்ஆனைப் பின்பற்றியும் நடந்துகொள்ளச் சொல்லி உபதேசிக்கிறீர். யாராவது பெண்களுக்குக் கோஷா வேண்டாம்; பெண்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டும், என்று கூறினால், அவ்வாறு கூறுபவர்களுக்குக் ‘காபிர்ப்’ பட்டங் கட்டுகிறீர். ஜினா செய்வது ஹராமென்கிறீர்! இவ்வாறெல்லாம் வெளியில் கூறிவிட்டு, இன்னம் சாந்திமுகூர்த்தமும் ஆகாத ஓரிளங்கன்னியைக் கற்பழிக்கப் பார்க்கின்றீர்! துறவியென்றும் கூசாது கூறிக்கொள்ளு...........”

“உன் பிரசங்கம் போதும் நிறுத்து! ஏன் உன் தந்தையை இந்நாள்வரை சிஷ்யனாக வைத்துக்கொண்டிருக்கிறேன் தெரியுமா? ஏன் உன்னை ஒன்றுக்கும் உதவாத அடிமைப் புத்தியுள்ள என் மற்றொரு சிஷ்யனுக்கு

மணம் புரிந்துகொடுக்கச் செய்து பண உதவியும் செய்தேன் தெரியுமா? நீ உன் அக்காளைப்போன்று அறிவுள்ளவளாய் நடந்துகொள்வாயென்று எண்ணியேதான்!"

"ஒஹோ அப்படியானால் என் அக்காள் ஜேபுன்னிஸாவையும் நீர் கெடுத்துவிட்டீரோ?"

"கெடுப்பதென்ன விருக்கிறது?" எவ்வளவோ நகைகளைக் கொடுத்து அவளை நான் சந்தோஷமடையச் செய்யவில்லையா? நீயும் புத்திசாலியாயிருந்தால், அவளைவிட நீ அழகியாயிருப்பதால் உனக்கு அதை விட அதிக நகைகள் கொடுப்பேன்?"

"உன் நகைகளைக் குப்பையில் போடு! என்னை உன்னால் தொடவும் முடியாது போ!" என்று கூறிக்கொண்டே தன்னறைக்கு ஓடித் தாளிட்டுக்கொள்ள முயன்றாள். ஆனால் இவ்வித வேலைகளில் நற்சாக்ஷிப்பத்திரம் அடைந்துள்ள மஸ்தான் ஏமாறுபவரா? அவளறையிலேயே அவளைக் கட்டிப் பிடித்தார். இருவரும் 10 நிமிடம் கைகலந்து சண்டை செய்தனர்; உருண்டனர்; தலை மயிர்கள் பிய்க்கப்பட்டன. கடைசியில் ஆயிஷா ஓய்ந்து தளர்ந்து சுவரருகில் சாய்ந்து விட்டாள்!

"ஆயிஷா என் கோரிக்கைக்கு இணங்குவதால் என்ன முழுகிப் போய்விடும்! நீயும் உன் பெற்றோரும் சுகமே வாழலாம். நான் ஒரு முறை வெளியே போய் வந்தால் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் கொண்டு வருகிறேன். அதன்றி நிரந்தர வருவாயும் இருக்கிறது. என்னைச் சேர்ந்தாயானால் அவ்வளவும் உனக்கே. நகைகள் வேண்டாம். அவை ஜனங்களுக்குச் சந்தேகமுண்டுபண்ணி விடும். எனவே, உன் கணவனை வரவழைத்து அவனுக்கொரு கடை வைத்துக் கொடுத்து அதன் மூலம் அவன் அளவு கடந்து சம்பாதிப்பதுபோலப் பாவனை காட்டி நீ அரசி போன்று ஏராளமாக நகைகளணிந்து கொண்டு வாழலாம். நீயே செல்வத்தின் பீடமாக இருக்கலாம். ஆனால், என் கோரிக்கையை மறுத்தாயானால் என்ன நேரும் தெரியுமா? நீங்களனைவரும் கஞ்சியுமில்லாது தெருவில் தயங்குவீர்கள்!"

ஆயிஷா இப்பிரசங்கத்தைக் கேட்டுத் தன் மனத்துள் ஒரு முடிவுகட்டிக் கொண்டாள்.

"ஆமாம்; தங்களைநான் எப்படி நம்புவது? ஆனாலும் பாதகமில்லை! நாளை நான் முழுதும் தங்களுக்கு அர்ப்பணமானவளாய் விடுகிறேன். தங்கள் கட்டிவைத்த அந்த முட்டாளுக்கு மனைவியா யிருப்பதைவிட அறிவிலும் செல்வத்திலும் உயர்ந்ததங்களின் மனைவியாயிருக்கவே நான் விரும்புகிறேன். என் அறியாமைக்கு என்னை மன்னித்தருள."

"ஆயிஷா என்னை நம்பு! ஜேபுன்னிஸாவைத்தவிர்த்து நான் வேறெப்பெண்ணையும் இதுவரை நண்ணியதும் கிடையாது; ஸ்பரிசித்தது மில்லை."

"சரிதான். நான் இனி எப்படியும் தங்களுடயவளே! அப்படியிருக்கத் தாங்கள் எங்கள் நலத்தைக் கோரவேண்டியவரே; ஆனால், தாங்கள் என் தந்தையின் ரூ. 2,700 பத்திரத்தைப் பத்திரமாகப் பெட்டியில் வைத்துக் கொண்டிருக்கிறீரே! அது எதற்கு?"

"சும்மா வெறுங் கணக்கிற்கேயாம்! உன் தந்தையிடமிருந்து அத்தனை ரூபாய், ஏன்? அத்தனை அணுவும் வசூலிக்க முடியாதே!"

"இல்லை இல்லை; எங்கள் தலைமீது அந்தக் கத்தி தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது; அதைத் தாங்கள் கொளுத்தி விடுவதே நல்லது!" என்று ஆயிஷா கூறியவுடனே இருவரும் மஸ்தானறைக்குச் சென்று மஸ்தான் பத்திரத்தை எடுத்துக் கொடுக்க, ஆயிஷா அதை வாசித்துப் பார்த்துவிட்டுக் கொளுத்திப் பஸ்பமாக்கி விட்டாள்.

"ஆயிஷா! இப்போது திருப்திதானா?"

"ஆம்; ஆனால் ஒரு விஷயம். நாளை சாந்தி முகூர்த்த இரவில் எனக்கு என்ன பரிசளிப்பீர்?"

"என்ன வேண்டும்?"

"நாளை இரவு நான் போட்டுக்கொள்ள வைரக் கம்மல் வேண்டும்!"

மஸ்தான் உடனே தம் பெட்டியைத் திறந்து ஆராய்ந்து பார்த்துத்தேடி 350 ரூபாய் எடுத்து 300 ரூபாயை வைரக் கம்மலுக்கென அப்பெண்ணிடம் கொடுத்துவிட்டார். ஆயிஷா அவரையும் கூட அழைத்துக்கொண்டு தன்னறைக்கு வந்து தந்தையின் பெட்டியில் அப்பணத்தை வைத்துப் பூட்டிவிட்டுப் படுக்கையருகில் வந்து, "இதைப் போன்றுதான் அக்காளையும் மயக்கி விட்டீர்களா?" என்று

சாந்தமாகவும் காதலுடன் கேட்பது போன்றும் கேட்டாள்.

"ஆம்!"

"அவள் அமைதியாய்த் தங்கள் விருப்பத்துக்கு இணங்கி விட்டாளா?"

"எந்த முஸ்லிம் பெண்தான் முதலில் சச்சரவிடாமல் இணங்கி விடுவாள்?"

"தாங்கள் எவ்வளவு கெட்டமனிதர்! நேற்றையத் தினம் தாங்கள் முஸ்லிம்களின் பிற்போக்கையும் அவர்கள் முன்னேறவேண்டிய அவசியத்தையும் பற்றிப் பேசுகையில், தாங்கள் உண்மையிலேயே ஒரு பெரிய மஹானென்று எண்ணி நான் கண்ணீர்விட்டேன். தாங்கள் ஏன் தைரியமாய் வாழ்க்கையின் கஷ்டங்களை வெளியிலெடுத்துக்கூறிப் பகிரங்கமாய்க் கலியாணம் செய்துகொண்டு நன்கு வாழக்கூடாது?"

"என் கண்ணே! அதுதான் உலகமோசடி. நான் கலியாணம் செய்துகொண்டால், வைதிகர் எனக்கு மதிப்புக் கொடுப்பரா?"

"இப்போது தங்களுக்கு மதிப்புக் கொடுக்கின்றனரா?"

"ஆம்! உண்மையில் மதிப்புக் கொடுக்கிறார்கள்."

"தாங்கள் அவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், ஜனங்கள் தங்களைச் சந்தேகிக்கின்றனரே!

"கிடக்கட்டும்; பேசிக்கொள்ளட்டும்; நெடுநேரமாகிவிட்டது; எனக்குத் தூக்கம் வருகிறது. இந்தப் பேச்சை இம்மட்டோடு நிறுத்திப் படுத்துக்கொள்வோம் வா!"

* * *

சில விநாடிகள்வரை மஸ்தான்செய்த திருவிளையாடல்களுக் கிணங்கியவளேபோல ஆயிஷா பாசாங்குசெய்து, அவர்முத்தமிட வரும்போது முன்னெச்சரிக்கையாகக் கையில் வைத்திருந்த ஒருகத்தியால் மூக்கில் பலமாக ஒரறுப்பு அறுத்து, வயிற்றில் எட்டி உதைத்துக் கீழேதள்ளி, முதுகின்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு, மஸ்தானின் கைகளையும் கால்களையும் பின்புறங்கட்டி, வாயில் துணியையும் அடைத்துவிட்டாள். உடனே மஸ்தானின் அறைக்கு ஓடித் தன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதுவருமாறு:—

"என் அருமைத் தந்தையே! தங்களின் வயிற்றை நிறைக்க என்னையும் என்சோதரி ஜேபுன்னிஸாவையும் பாதகனும் இம்மஸ்தானெனிக்கு விற்றுவிட்டமைக்குவந்தனம்! அவனுடைய ஸ்பரிஸம் என்னைக் கெடுத்து விட்டது. இதற்கு நான் பரிகாரம் செய்துகொள்ளுகின்றேன். என் நல்லடக்கத்திற் கெனத் தங்கள் பெட்டியில் போதுமானபணம் இருக்கிறது. என்னை இதுகாறும் வளர்த்தமைக்குப் பிரதி யுபகாரமாகத் தங்களைக் கடனினின்று மீட்டுவிட்டேன். தாங்கள் மஸ்தானெனிக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் எரிக்கப்பட்டது. வந்தனம். மானக்கேடான வாழ்க்கைக்குத் தம் மக்களை விற்றுவிடும் பெற்றோர் இல்லாததும், அயோக்கியத்தனம், வஞ்சகம், சூது, கபடு முதலியவைகளே குடிகொண்டுள்ள சோம்பேறிகள் மதகுருக்களாகவும், மதத்தலைவர்களாகவும், மஸ்தான்களாகவும், பீர்களாகவும் நடிக்க வழியில்லாத ஒருலகத்திற்கு நான் போகிறேன்!"

இங்ஙனம்: தங்கள் மகள், ஆயிஷா.

* * *

இக்கடிதத்தை எழுதி உறையிலிட்டுத் தந்தையின் பெட்டியின்மீது வைத்துவிட்டு, ஒரு சீசாநிறையவிருந்தமண்ணெண்ணெயை எடுத்துத் தன் தலையிலிருந்து ஊற்றிக் கொண்டாள். அச் சமயத்தில் தன்னுணர்வு வரப்பெற்ற மஸ்தான் ஏதும் செய்ய வகையின்றி ஆயிஷாவைப் பரிதாபகரமாக நோக்கி, "ஆயிஷா! ஆயிஷா! வீணாகத் தற்கொலை செய்து கொள்ளாதே! அல்லா(ஹ்)அதை வெறுக்கிறான். நான் உன்னை ஒன்றும் செய்யவில்லை. தற்கொலை செய்துகொள்ளாதே!" என்றான். ஆனால் ஆயிஷா, "போதும்! உன் பிரசங்கத்தை நிறுத்து! ஏமாந்த பாமர மக்களை நீ ஏமாற்றிக்கொண்டிரு! அந்த அல்லா (ஹ்) வின் பெயரையும் உச்சரிக்க நீ யோக்கியதை பெற்றவனல்லன் நீ என்னைக் கட்டித்தழுவ ஆசைப்பட்டாய் ஆதலின், உன் மோகத்தைக் கடைசியாக ஒருமுறையேனும் தணிக்கிறேன்" என்றுகூறி, நெருப்புக்குச்சியைக் கிழித்துத் தன்னைக்கொளுத்திக்கொண்டு மஸ்தான்மீது வீழ்ந்து அவனை இறுகக்கட்டித்தழுவினாள்.

* * *

மறுநாள் காலை ஆயிஷாவின் பெற்றோர் வந்து கதவைத்தட்டியும் கதவு திறக்கப்படா

ததால் கூரையைப்பிரித்து உள்ளிறங்கிக் கத வைத்திறந்து இருவரும்வந்துபார்க்கயில் தங் களின் அழகுமகளாயிருந்த அருமைஆயிஷா கரிந்து கிடந்தாள், இப்பவோ, பின்னையோ, இன்னும் சற்று நேரத்திலோ என்னும் நிலை யில் மஸ்தானிருந்தார்.

ஜுபைதா.

அன்பர்காள் !

மேலே வரையற்பெற்றுள்ள "மாயாவினோ தப் பரதேசி" "ஆயிஷாவின் அற்புத நடத்தை" என்னும் இருகட்டுரைகளையும் கவனிக்குங்கால் "இந்தியா"வின் வாரப் பதிப்பில் கூறப்பட்டுள்ள "மாயா வினோ தப் பரதேசி" என்பதற்கு "ஆயிஷாவின் அற்புத நடத்தை" என பெயர்கொடுத்து அதிலுள்ள பரதேசி என்பதை "மஸ்தா னொலி" என்றும் "சாரதா" என்னும் பெயரை ஆயிஷா என்றும் சந்தரசேகரர்என் னும் பெயரை "நாகூர் பிச்சை மரைக்காயர்" என்றும் மாற்றி அதற்கேற்றப்போல் கட் டுரையின் சில விஷயங்களை திரித்தும் புற ட்டியும் "தாருல் இஸ்லாம்" பத்திரிகை யில் கூறப்பட்டிருப்பது உங்களுக்குப் புல னாகாமற்போகாது. இவ்வாறு புறட்டிக் கூறு வதானது நம் சமூகத்தை இழிவுபடுத்திக் காண்பிக்கவும் மார்க்க ஏவல், விலக்கல் புரி பவர்களை தூஷித்துக்கூறுவதற்குமேயாகும் என்பது நண்பர்கட்கு மறைந்ததன்று.

காப்பியடித்துவிட்டு அஃது தங்களால் வெகு பிரயாசையோடு சுயமே இயற்றப் பெற்றதென வெகு டம்பமாக கூறுவது தா. இ. ஆசிரியர்களின் சுபாவகுணமே யாகும். (இவ்வாறு வெளியிட்டதனாலன்றோ மெஸர்ஸ் லாங்மன்ஸ் க்ரீன் கம்பெனியா ரிடம் மாட்டிக்கொண்டு விழிக்கும்படி நேர்ந் தது.) அதைப்போல் காதியானி முஹம்மதலீ யால் எழுதப்பெற்ற "பயானுல் குர்ஆனை" மொழிபெயர்த்து அதிலுள்ள தப்புத்தவறு களுடன் வெளியிட்டுவிட்டு இது மட்டில் நம் தென் தேசத்தில் யாரும் செய்திராத உத்தம கைங்கரியத்தில் ஈடுபட்டு இஸ்லாத் திற்காக உழைத்து வருவதாக தற்புகழ்ச்சி செய்துகொள்வது மாகும். வழமைபோல் காப்பியடித்து வெளியிடுவதில் சமூக இழிவும் மார்க்க தூஷணையும் எதற்காக?—கோஷா முறை அனுஷ்டிக்கவேண்டுமென்று கூறு பவர்களையும் ஜினுசெய்வது கூடாக் கரும மென்று கூறுபவர்களையும் ஏன் இழிவு படுத்தி எழுதவேண்டும். வாசகர்கள் இஃது உண்மை சம்பவமென்று நினைத்து அன் னோரை ஏளனஞ் செய்வதற்காகவா? எவ் வாறு திருத்திக் கூறியபோதிலும் உண்மை வெளியாய்விடுகிறது. இனியாகிலும் இவ்வா றுள்ள செய்கையிலிறங்கா திருப்பார்களாக.

மௌலானாவின் நிரூபம்.

மீரட்வாசியாகிய ஜனுப் மௌலானு அல்ஹாஜ் ஹாபிஜ் காரீ அல்லாமா, ஷாஹ் முஹம்மது அப்துல் அலீம் சித்தீகீ அவர்கள் கிள்ளான் பிரபலவர்த்தகர் ஜனுப் K. A. பகீர் முஹம்மது சாஹிப் அவர்கட்கு எழுதிய கடிதம்.

அன்பார்ந்த பகீர்முஹம்மது அவர்கட்கு
அஸ்ஸலாமு அலைக்கும்.

தாங்கள் சென்ற 26உ எழுதிய கடிதத் திற்காக அனேக வந்தனம். அதற்கு உடன் பதில் எழுத முடியாமல் போனமைக்கு யான் மிகவும் மனவருத்தப்படுகிறேன். அளவுகடந்த வேலையினிமித்தமும், உடம் பின் சுகக்குறைவினினுலும், தங்களுக் குப்பதில் எழுதச் சுணங்கிவிட்டது. யான் ஜாவாவில் ஆரம்பித்தவேலைகள் ஒரு சிறு கால அளவிற்குள் ஆண்டவனது அன்பின் காரணமாகவே திருப்திகரமாய் முடிந்திருக் கிறது. ஜாவாவில் யான் நான்கு காரியங் களில் தலையிட வேண்டியிருந்தது.

1. கிரிஸ்தவ மிஷனரியின் முன்னேற் றத்தை தடை செய்வதற்கு வேண்டிய ஏற் பாடு செய்தல்.

2. காதியானி—அஹ்மதியாக்களின் வழி கெட்ட கொள்கைகளை அகற்றுவதற்காக முயற்சித்தல்.

3. தத்துவஞானம் என்னும் பேரால் பரவிக்கொண்டிருக்கின்ற ஹிந்து சமூகக் கிளர்ச்சியினை தடை செய்வதற்குரிய காரியங்கள் செய்வது.

4. செய்யிதுகளுக்கும் ஷெய்குகளுக்குமுள்ள வித்தியாசங்களையும், மற்றும் இரு வகுப்பார்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள வேற்றுமைகளையும் தீர்த்துவைத்தல்.

நான் எடுத்துக்கொண்ட சகல வேலையிலும் வெற்றி பெற்றதற்காக ஆண்டவனைத் துதிக்கின்றேன். இச் சுற்றுப் பிரயாணத்தில் கீழ் திசைமுதல் மேற்குத் திசைவரை ஒவ்வொரு பிரதான ஸ்டேஷன்களையும் பார்வை செய்து ஆங்குள்ள முஸ்லிம்களை, மிஷனரி வேலைகளிலீடுபட்டு நல்ல வழியில் தீவிரமாக உழைக்குமாறு வற்புறுத்தினேன். ஜாவாவிலும் மலேயாவிலும் காணப்படுகின்ற முஸ்லிம்கள் மார்க்க சம்மந்தமான கல்வியறிவு இல்லாத பாமர முஸ்லிம்களேபோல் இருப்பதால், கிரிஸ்தவ மிஷனரிகள் தங்கள் வேலையில் வெற்றி பெற்றவர்களாகி, இஸ்லாத்தைப் பற்றித் தாறுமாறாகப் பேசவும், முஸ்லிம்களை இஸ்லாமிய ஆசாரங்களிலிருந்து திருப்பவும் அடிக்கடி பிரயத்தனம் செய்கின்றனர். ஜாவாவிலுள்ள பிரபல்யமான ஒரு கத்தோலிக் மிஷனரியானது இஸ்லாத்தையும் அதன் தீர்கத்தரிசியினைப்பற்றியும் கண்டித்து ஒரு வியர்ஸம் எழுதி பத்திரிகையில் பிரசுரஞ் செய்தது. ஆங்குள்ள ஆலிம்களும் தலைவர்களும் அதனை எதிர்க்கமட்டுஞ் செய்தார்களன்றி வேறொன்றுஞ் செய்வதற்கு முன்வரவில்லை. சர்க்கார் அப்பிரசுரங்களைப் பறிமுதல் செய்துவிட்டது. "அல் இஸ்லாம்" கமிட்டியின் மூலமாக யான் அம்மிஷனரியைச் சேர்ந்த பாதிரியாரை தம்முடைய வாதப் பிரதிவாதங்களை ருஜூப்பிக்குமாறு அறை கூவி அழைத்தேன். ஆனால் அவ்விஷயம் "அல் ஜிஹாத்" என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருப்பினும் கிறிஸ்தவர்களில் ஒருவருக்காவது எனது சபதத்தை ஏற்றுக்கொள்ளத் தைரியம் வரவில்லை. மறுபடியும் ஜெக்ஜா பொதுக்கூட்டமொன்றில் யான் அப்பாதிரியால் கேட்கப்பட்டிருந்த வினைக்களுக்கு மறுமொழி கூறினதுடன், இவ்விதமான கேள்விகளுக்கு எத்தனையோ ஆயிரந் தடவை முஸ்லிம்களால் பதிலிறுக்கப்பட்டதென்றும், ஒரு ஸாமான்ய முஸ்லிம் மாணவராலுங்கூட இப்படிப்பட்ட வினைக்களுக்கு இலகுவில் பதிலளிக் முடியுமென்றும், பாதிரிகள் மட்டுமன்றி ரோமாபுரியிலுள்ள போப்பு வேண்டுமானாலும் இஸ்லாத்திற்கு விரோதமாக எத்தகைய கண்டனங்கள் செய்வதாயினும் அதற்குயான் பதில் சொல்லத் தயாராய் இருக்கின்றேனென்றும், தற்கால கிரிஸ்தவர்களால் கற்பிக்கப்படுகிற போதனைகள் ஏசுநாதரின் உண்மையான போதனைகள்தான் என்று ருஜிப்பிக்க போப் அவர்களாலுங்கூட முடியாதென்றும் கூறினேன்.

எனது உபந்நியாசமும் சபதமும் பொதுமக்களினுள்ளத்தில் நன்றாகப் பதிந்தன. அவர்கள் உடனே திவ்விய இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காகத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய முனைந்து நின்றனர்.

மிர்ஜாகுலாம் அஹ்மது (காதியான்) அவர்களின் கோஷ்டியார் செய்கின்ற அக்கிரமமான நடத்தைகளைப்பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறினேன். கடைசியாக அவ்வூரிலுள்ள முஸ்லிம்களெல்லோரும் "பூலோகத்தா" என்ற ஊரில் தங்கி இருந்த லாகூர் அஹ்மதிய கட்சிப் பிரதிநிதி யொருவரை (யான் முன் 1927 - ல் ஜெக்ஜா சென்றதின் காரணமாக இவர் அங்கிருந்து பூலோகத்தா என்ற ஊருக்கு துரத்தப்பட்டார்.) ஏராளமான முஸ்லிம்களுக்கு முன்னிலையில் என்னுடன் தர்க்கஞ் செய்யுமாறு அழைத்தார்கள். அதற்கு அவர் வராமல் மறுத்து அனுப்பிய நிருபத்தை கவனிக்கும்போது தர்க்கஞ்செய்வதில் தோல்வியை ஒப்புக்கொண்டார் என்று தெரிகின்றது.

மலங் டிக்ஜாவிலும் பூலோ கத்தாவிலும் சிலர் காதியானிகளால் வழிகெடுக்கப்பட்டிருந்தார்கள். தற்போது அவர்கள் எல்லோரும் தாங்கள்செய்த தவறுகளின்மீது பட்சாதாபம் அடைந்தவர்களாகி, சன்மார்க்கத் தளவில் மீண்டார்கள். சிந்து ஹிந்து வியாபாரி யொருவர் எனது உபந்யாசங்களின் மீது நன்றாக கவனஞ் செலுத்தியதால் அவர் உள்ளத்தில் உணர்ச்சி யுண்டாயிற்று. உடனே அவர் மனப்பூர்வமாக தூய்மையான

இஸ்லாம் மதத்தைத் தழுவினர். அவரது முந்தின பெயர் 'சிவாக்ரும்' இதுபொழுது "அப்துல்லாஹ்" என்ற பெயர் இடப்பட்டது.

பதாவியா சிருபோயா முதலிய இடங்களில் கூடப்பெற்ற அநேக ஏகதத்துவ ஆராய்ச்சிக் கூட்டங்களில் யான் உபந்யாஸம் செய்தேன். இந்துக்களுடையவும் இதர மதஸ்தர்களுடையவும் தத்துவார்த்த கொள்கைகளைவிட இஸ்லாமிய 'தஸவ்வுப்' என்ற அத்துவைதம் எவ்வளவு உயர்ந்தமுறையில் அமைக்கப்பட்டிருக்கிற தென்பதையும் தெளிவாக எடுத்துப் போதித்தேன். இங்ஙனம் யான் செய்ததில் கைகண்டபலன் ஏற்பட்டதாகத் தெரிகின்றது. தற்போது யான் விதை நட்டிருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் பின்னர் இவ்விதை சரியான பலன் அளிக்குமென்று நம்புகின்றேன்.

சில அற்பகாரியங்களுக்காக அறபிகளுக்கும் மற்றவர்களுக்கு மிடையே எழுந்துள்ள அபிப்பிராயப் பேதங்களைத் தீர்த்துவைக்கும் விஷயமாக யான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றிகரமாய் முடிந்தன. அபிப்பிராய பேதமுள்ள பல கட்சிகளும் தங்களுக்குள் ஒரு கூட்டங்கூடி அபிப்பிராயபேதங்களையும் அவைகளை யொட்டிய தர்க்கங்களையும் கலந்து பேசியபின் முடிவை எழுதிக்கொள்வதென்றும், பிறகு அதனை எகிப்திலுள்ள பிரபல ஆலிம்களின் பார்வைக்கு அனுப்புவதென்றும், அவர்கள் செய்யும் முடிவை யாவரும் ஒப்புக்கொண்டு நடக்க வேண்டு மென்றும் தீர்மானமாகிய பிரகாரம், எல்லாக் கட்சியினரும் மனப்பூர்வமாக அவ்விதமேசெய்ய ஒப்புக்கொண்டனர் என்ற நற்செய்தியைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜாவாவில் யான் இவ்விதமான ஏற்பாடுகளைச் செய்து என் வேலையை முடித்திருக்கின்றேன். இனி யான் காண்பித்தபடி நடத்திச் செல்லவேண்டுவது ஆங்குள்ள முஸ்லிம்களின் வேலையாகும்.

எனது நண்பர்கள் பலரும் யான் செய்யும் காரியாதிகளைப்பற்றி தெரிந்துக்கொள்ள விரும்புவார்களென்று யான் அறிவேன். ஆனல் அவர்கள் எல்லோருக்கும் மேற்குறித்தவாறு சுருக்கமாகவேனும் எழுதித் தெரிவிப்பதென்றுல் அது என்னுல் முடியாத காரியமாகயிருக்கிறது. ஆகவே சிங்கப்பூர், பினங், மலாயா ஆகிய நாடுகளிலுள்ள நம் நண்பர்களும் இஸ்லாத்தில் நல்லெண்ணமுள்ளோர்களும் வாசித்துணருமாறு யான் எழுதிய லட்டரின் நகல்களை பல்வேறு பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்து வெளியாக்குவதற்காக தங்களுக்கு சகல உரிமையினையும் அளிக்கின்றேன்.

தயவுசெய்து என்னைப்பற்றி வினவியவர்களுக்கெல்லாம் என் தாழ்மையான சலாத்தைத் தெரிவித்து முஸ்லிம் மிஷனரிவேலைகளை ஊக்கமாக நடத்தும்படி யான் கேட்டுக்கொண்டதாக அறிவியுங்கள். மிஸ்டர் மாற்மடியூக் பிக்தால் அவர்களால் எழுதப்பட்ட "மீனிங்ஸ் ஆப் தி குலோறியஸ் குர்ஆன்" ஒன்று மெஸ்ஸர்ஸ் துல்பகீர் கம்பனியிலிருந்து வாங்கி அனுப்பி வையுங்கள். தாங்கள் கோலாலம்பூரில் எனக்களித்த புத்தகத்தை பதாவியாவிலுள்ள 'அல் இஸ்லாம்' சங்கத்தின் பிரஸிடெண்டு மிஸ்டர் சொக்ரோஅமிநோட்டொ என்பவருக்கு இனுமாககொடுத்துவிட்டேன். ஆங்குள்ளவர்களுக்கு அப்புத்தகம் அத்தியாவசியம் வேண்டியிருக்கிறது தாங்கள் கூடியசீக்கிரம் அனுப்பி வைக்கவேண்டியது. இந்நாடுகளுக்கும் வெளியூருக்கும் வி. பி. மார்க்கம் கிடையாத்ததாலும் என்னிடம்தற்சமயம் இந்திய நாணயம் இல்லாமையாலும் யான் இப்புத்தகம் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து பெற்றுக்கொள்ள வழி இல்லை வஸ்ஸலாம்.

(மேலே வரையப்பட்டுள்ள நிருபத்தை அனுப்பிய மௌலானு அவர்கள் யாரென்பது தங்களுக்கு நன்குதெரியும் அவர்கள் இங்கிலீஷ், அரபீ, பார்ஸீ, உர்தூ முதலிய பாஷைகளை செவ்வையாகக் கற்றுணர்ந்து அப்பாஷைகளில் சாங்கோபாங்கமாய்ப் பிரசங்கம் புரியும் ஆற்றலுள்ள மகானும், வழிகேடர்களான காதியானீ—அஹ்மதிய்யாக்களை அறைகூவி அழைத்து அவர்களுடன் தர்க்கித்து அவர்களை வழிகெட்ட கொள்கையினின்று நீக்கி நேர்வழிக்கு கொணரும் உத்தமருமாகும். இம்மகான் அவர்கள் சில நாளைக்குமுன் பினங், சிங்கப்பூர், மலாயா முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்து அநேக சொற்பொழிவு நிகழ்த்தியது நேயர்கள் அறிந்த விஷயமே. அவர்களின்

அரிய முயற்சியால் "அல் மலாயா முஸ்லிம் மிஷினரி சொசைட்டி" என்னும் பெயருள்ள சங்கமொன்று நிருவப்பெற்று அதன் தலைமை ஆபீஸ் சிங்கப்பூரிலும் கிளை கோலாலம்பூரிலும் ஏற்பாடாயிருக்கிறது. கூடிய சீக்கிரம் பினங்கிலும் ஒரு கிளை சபை அமைக்க முடிவாயிருக்கின்றது. கனம் மௌலானா அவர்கள் கூடியசீக்கிரம் திரும்பி வந்து வேலை ஆரம்பிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இச்சங்கத்தின் பிரதான நோக்கம் வழிகேடர்களான காதியானி—அஹ்மதியர்களின் தீயகொள்கைகளை அகற்றுவதும் இஸ்லாமிய பிரசாரம் புரிவதுமாகும் இச்சங்கம் தக்க மார்க்கசேவை புரியுமென எதிர்பார்ப்பதோடு இச்சேவையை நாம் மிக மிக வரவேற்கின்றோம் ப—ர்)

இதுதான் மார்க்க சட்டப்படி விடை அளிப்பதோ?

(M. V. அப்துல் ஜப்பார் வரைவது.)

சென்னைமா நகரினின்று வெளிவரும் "தாருல் இஸ்லாம்" மலரின் 6-11-31ல இதழில் மார்க்கவினா ஒன்று வினவப்பட்டு அதற்கு அதன் முதல் ஆசிரியர்? இல்லை இப்பொழுது இரண்டாம் ஆசிரியராகவுள்ள ஹாபிஸ் பாகவீ என்பவரால் வினோதவிடை அளிக்கப்பட்டிருக்கிறது. அவ் வினாவிடை இரண்டையும் அப்படியே நேயர்களின் பார்வைக்கு கீழே தருகிறேன்.

வினா :—அல்லாபிச்சை என்பவருக்குக் குப்பைப்பிச்சை, நாகூர்பிச்சை, மரியம்பீபீ என்று மூன்று பிள்ளைகள் இருந்தனர் அவர்களுள் குப்பைப்பிச்சை எம்பவருக்கு விவாகம் செய்து 2 குழந்தைகள் இருக்கின்றன மேற்படி குப்பைப்பிச்சை சிலகாலத்துக்குப் பின் மரணமடைந்து விட்டார். பின்னர் அவருடைய தந்தையாகிய அல்லாபிச்சை காலமாகிவிட்டார். ஆனால் அவருடைய சொத்தில் நாகூர்பிச்சையுடைய பிள்ளைகளுக்கு பாத்தியமில்லை என்பதாகச் சொல்லுகிறார்கள். மேற்படி குழந்தைகளுக்கு நம் மார்க்கசட்டப்படி பாத்தியமில்லாமல் போவதற்குக் காரணமென்ன?

விடை :—வினாவில்கண்டபடி நாகூர்பிச்சையின் பிள்ளைகளுக்கு அல்லாப்பிச்சையின் சொத்திலிருந்து பாகம்கிடைக்கும். தகப்பனுக்கு முன்னிறந்தவர் குப்பைப்பிச்கை என்னும் மகனாதலால், உயிருடனிருக்கும் நாகூர்பிச்சையின் பிள்ளைகளுக் குப் பாகமில்லையென்று சொல்வது பனைமரத்தில் தேள்கொட்டத் தென்னைமரத்தில் விஷமேறியது என்று சொல்வதற்கொப்பாகவே யிருக்கிறது. எனவே, உயிருடனிருக்கும் நாகூர்பிச்சையின் பிள்ளைகளுக்குப் பாட்டனாரின் சொத்திலிருந்து பாகமில்லாமற்போவதற்கு எவ்வித வழியுமில்லை.

அன்பர்காள்!

ஒரு முஸ்லிமால் நம் மார்க்க சட்டப்படி விடை அளிக்குமாறு வினவப்பட்டதற்கு ஹாபிஸ்பாக்கவீ ஹிந்து மதச்சட்ட அனுஷ்டானத்தின்படி பதிலளித்திருப்பது பெரும் விந்தைக் குறியதாகும். என்னே இவரின் புத்தியின் போக்கும் மார்க்கப் புறட்டும்? இவ்விடையானது நம் சத்திய இஸ்லாமிய சட்டத்திற்கும் முஸ்லிம்களின் அனுஷ்டானங்களுக்கும் முற்ற முற்ற மாற்றமானதாகயிருக்கிறது. இவ்விடையை கண்ணுறும் எவரும் அவை நம் முஸ்லிம்களால் நம்மவர்க்களிக்கப்பட்ட விடை என ஒருக்காலும் மதியார்களென்பது திண்ணம். இம்மட்டோடா. சாமான்யருங்கூட இவ்வினாவுக்கு விடையளிக்கத் தயங்காரென்பது பஹீரங்கமாயிருக்க, மௌலவீ, அதிலும் பாஜில் என்பார்க்கு விடையழிக்கத்தெரியாது போனது பெரும் விந்தைக் குறியதல்லவா?

வினாவில் அல்லாப்பிச்சை என்பவருடைய இரு குமாரர்களில் குப்பைப் பிச்சை மட்டும் காலஞ்சென்று விட்டதாகவும் மற்றொருவரான நாகூர் பிச்சை உயிருடனிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. பிதாவுக்குமுன் காலஞ்சென்று போன குப்பைப் பிச்சையின் குழந்தைகளுக்கு பாட்டனாரின் சொத்திலிருந்து

யாதொருபாகமும் கிடைக்கமாட்டாதென்பது திண்ணம். அல்லா பிச்சையின் சொத்தில் அவருடைய குமாரரான நாகூர் பிச்சை உயிருடனிருக்கும்போது அவருடைய பிள்ளைகளுக்கு பாட்டனின் சொத்திருந்து எவ்வாறு பாகம் கிடைக்கும்? ஒருக்காலும் கிடைக்காதென்பது நம்மார்க்க சட்டமாகும். அவ்வாறு பாகம் கிடைக்குமென கூறுவது ஹிந்துக்களின் மத அனுஷ்டானமேயன்றிமுஸ்லிம்களின் மார்க்க சட்டமாகமாட்டாது. ஆதலின் நம் முஸ்லிம்களால் வினவப்படும் வினக்களுக்கு ஹிந்து மத அனுஷ்டானத்தைக் கொண்டு பதில் கூறுவது எதற்காக? அறியாத்தனத்தினலா? ஜனங்கள் சச்சரவிட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்றதைக் கருதியா? அன்றி உலமாக்களெல்லோரும் கூறுவதற்கு மாற்றமாக யாதாகிலு மொன்றைக் கூறவேண்டுமென்னும் உத்தேசமா? அறிகிலேம். இவ்வாறு தப்பான விடை யளித்திருக்கும் நிலைமையிற் பனைமரத்தில் தேள் கொட்ட........என்று இறுமாப்புடன் பதில் கூறியிருப்பது எவ்வளவு புத்திசாலித்தனம் என்பதை நேயர்களே சிந்திக்கக் கடவர்.

தப்புந் தவருமாக மார்க்க வினக்களுக்கு பதிலழிப்பதும், நம் தூய்மைவாய்ந்த சன்மார்க்கத்தில் ஆகாக்கருமமென விலக்கப்பட்டிருப்பதை ஆகுமென்று கூறத் துணிவதும் ஹாபிஸ் பாக்கவீ என்பாருக்கு புதிதல்ல—நூதன செயலாகமாட்டாது. அஃது அவருடைய நடப்பில் இருந்தே வருகிறது.

தா. இ. ஆசிரியர் பா. தா. நம்மக்களிடையே பரத்திவரும் தீய பிரசாரத்திற்கு ஆதரனையாக ஒத்துக்கு மத்தளம்போட ஒருவரைத் தேடித்திரிந்தார் அதிலும் மார்க்க விஷயங்களெல்லாம் ஒரு மௌலவீ சொன்னலல்லவோ ஜனங்கள் நம்பிக்கொள்வார்களென்றறிந்த பா. தா. அவ்வாருள்ள ஒருவரைப் பெற பெரும் முயற்சி செய்தார். அதற்காக பா. தா. வீசிய வலையில் சிக்குண்டார் ஹாபிஸ் பாக்கவீ. இதுதான் நல்ல திர்ஷ்டமெனக்கருதிய பா. தா; பாஜிலின் பெயராலேயே மார்க்க முரணனவைகளை வெளியிட ஆரம்பித்தார். அவ்வாறு மார்க்கமுரணக வெளியிடப்படுபவைகளெல்லாம் உலமாக்களால் தக்க ஆதாரங்களுடன் கண்டிக்கப்படவே, தன்னல் இது சமயம் எதிர்த்து பதில் சொல்லமுடியாதென்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்ட பா. தா. ஹாபிஸ் பாக்கவீக்கு ஆசிரியர் பதவி அளித்து அவரை முன் விட்டு தான் பின் நின்று பார்த்தார். உலமாக்களால் எடுத்துக் காண்பிக்கப்படும் எத்தவறுக்கும் பாக்கவீயால் யாதொரு பதிலும் கொடுக்க முடியாதிருப்பதைத் தெரிந்துகொண்ட பா. தா. மனம் சகியாதவராய் ஹாபிஸை பின்தள்ளி தான் முதன்மையான ஆசிரியர் பதவியிலமர்ந்தார்.

இவ்வாருள்ள இரண்டாவது ஆசிரியரால் பதிலழிக்கப்பட்ட விடையின் தன்மை எவ்வாரிருக்கிறதென்பதை உற்றுணர்ந்து பார்ப்பீர்களாக. இனியாகிலும் இவ்வாறு தாறுமாறுக விடை அளிக்காமல் தெற்றெனத் தெந்து உண்மையை உறைப்பதற்கு முன் வருவாராக.

"ஹிபாஜத்துல் இஸ்லாம்"

(இரண்டாம் வால்யூம்.)

நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" மாசிகையின் இரண்டாம் வால்யூம் பைண்டு செய்யப்பட்டு வருகிறது நண்பர்கள் தாமிதமின்றி தங்கள் ஆடர்களை பதிவுசெய்துகொள்ள விரும்புகின்றேம் இதில் மார்க்க சம்மந்தமான பல விஷயங்கள் அடங்கியிருப்பதால் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

காலிகோ பைண்டு விலை, ரூ. 3—8—0 தபால் செலவு வேறு

முன் பணம் அனுப்புவோர் ரூ. 4—4—0 அனுப்பவேண்டும்.

பொன் மொழிகள்.

ஹஸ்ரத் உமர் (ரலி.) கூறுகின்றார்கள். அதாவது இவ்வுலகில்ஒருவனை அவனிடமுள்ள பொருட்செல்வத்தினால் மதிக்கப்படுகிறது. ஆனால் மறுமையில் அவன் நல்லொழுக்கத்தினாலேயே மதிக்கப்படுவான். எனவே ஒருவன் இம்மைக்குமட்டும் உதவக்கூடிய செல்வத்தைத் தேடுவதின்மீது விருப்பங் கொள்வதைப்பார்க்கினும் மறுமைக்குதவக் கூடிய நல்லொழுக்கத்தின்மீதே மிக்கவாறும் விருப்பங் கொள்ளுதல் அத்தியா அவசியமாகும்.

மனிதர்களிடம் உண்மையான அன்பு வைத்து நடப்பவன் தான் அடையவேண்டிய புத்திமதிகளில் பாதி யடையப்பெற்றவனாவான்; தனக்கு வேண்டிய கல்வியறிவில் பாதி கைகூடினவனாவான்; அவைகளை நன்கு ஆலோசனைசெய்து அதன்படி நடப்பவன் வாழ்கையில் அடையவேண்டிய வெற்றிகளில் பாதிவெற்றி அடைந்தவனாவான்.

மனிதனுக்கு நான்கு கடல்களுண்டு அவையாவன:—

1. இச்சையாகிறது பாவங்களின் கடலாகும்.

2. மனமானது சிற்றின்பத்தின் கடலாகும்

3. மரணமானது வாழ்நாளின் கடலாகும்.

4. கப்ரானது கைசேதப்படுவதின் கடலாகும்.

எனக்கு நேரிடும் கஷ்டங்களிலிருந்து நான்குவித படிப்பினைகளை கற்றுக்கொள்வேன்.

1. கஷ்டங்களுக்குப் பகரம் பாவங்களைச் செய்யாமல் அகற்றிவிடுவேன்.

2. என்னால் தாங்கமுடியாத அத்துணைப் பெரிய துன்பமொன்றும் நேரவில்லை என்று என்னை சமாதானம் செய்துக் கொள்வேன்.

3. கஷ்டங்களினிமித்தம் ஆண்டவனது தயவை இழந்து விடமாட்டேன்.

4. எந்தக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு புண்ணியம் பெற்றவனாவேன்.

ஆதலின் கஷ்டங்களை பொறுமையுடன் வரவேற்று அடக்கமாயிருந்தால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும்.

புத்திசாலியாயிருப்பவன் அதிகம் பேசுவதை அகற்றுவான்.

மனதை வென்றடக்கியவன் எதனையும் நீண்டநேரம் பார்க்கமாட்டான்.

மனவொளிவுள்ளவன் எதிலும் மனதை செலுத்தமாட்டான்.

மறுமையின்மீது பிரியம் வைப்பவன் இம்மையின்மீதுள்ள பற்றுதலை விட்டுவிடுவான். குற்றங்களைச் செய்யாமல் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்பவன் பிறர் குற்றங்களை அலசிப்பார்க்கும் வேலையிலீடுபடமாட்டான். உள்ளும்புறமும் ஒரே தன்மையுடனிருப்பவன் ஆண்டவனின் ஒப்பரிய இலட்சணங்களுள் ஒவ்வொரு அம்சத்தினையுங் குறித்து அறியவேண்டுமென்று கருதமாட்டான்.

ஹஸ்ரத் லுக்மான் அவர்கள் தமது மகனைப்பார்த்து "பத்துக்காரியங்களைச் செய்கின்றவர் எவரோ அவரே சந்தேகமில்லாமல் புத்திசாலியாவார்." என்று கூறினார்கள். அவைகளாவன :—

1. மறதியாக இருப்பவரை உற்சாகப்படுத்தல்.

2 ஏழைகளுடன் சகவாசஞ் செய்தல்.

3. அரசர்களின் தர்பாரில் போகாமல் விலகிக்கொள்ளுதல்.

4. அனாதைகளை ஆதரித்தல்.

5. அடிமைகளை விடுதலை செய்தல்

6. முஸாபிர் (வழிப்போக்கர்) களுக்கு வசதியளித்தல்.

7. ஏழையை செல்வந்தனாக்குதல்.

8. பெரியோர்களை கண்ணியப்படுத்தல்.

9. தலைவர்களின் தலைமைத்தனத்தை ஒப்புக்கொண்டு நடக்குதல்.

10. பொதுஜன சேவையில் சிரத்தையுடனிருத்தல்.

இவைகள் செல்வத்தினைவிட மிக மேலான வைகளாகும். இதனால் பயமில்லாமல் எதேச்சையாய் வாழலாம். இவைகள் யுத்த காலங்களில் உதவக்கூடிய சாதனங்களா கும். அச்சம் ஏற்பட்ட விடத்து இவை கள் சிபாரிஷ் செய்யக்கூடியவைகளாகும்; விவேகிகளுக்கு வழிகாண்பிக்கும்; மானத் தை மறைக்க ஆடை இல்லாது போமாயின் இவைகள் மானத்தை மறைக்கக் கூடியவைக ளாய் ஆய்விடும்.

அறிவாளிகளிற் சிலர் கூறுவதாவது:— புத்திசாலி யொருவன் தௌபா செய்யுஞ் சமயத்தில் பத்து காரியங்களை தெரிந்துக் கொள்ளல் வேண்டும்-

1. நாவினால் மன்னிப்பு கேட்டல்.

2 மனதிற்குள் வெட்கமடைதல்,

3. திரும்பவும் பாவஞ் செய்யாமலிருத் தல்.

4. இனிமேல் செய்யமாட்டேன் என உறுதிப்படுத்தல்.

5. மறுமையை விரும்புதல்.

6. உலகம் விரோதியாகும் என எண்ணு தல்.

7. மிதமாகப் பேசுவது.

8. மிதமாக உண்பது.

9. மிதமாக குடிப்பது.

10. மிதமாக நித்திரை செய்வது.

ஹஸ்ரத் அபூபகர் ஸித்தீக் (ரலி.) அவர் கள் கூறுகின்றதாவது:—வணக்கம் புரிபவர் களில் 3. பிரிவினர் இருக்கின்றனர். ஒவ் வொரு பிரிவினருக்கும் மூன்று அடையா ளங்களுண்டு; அவ்வடையாளங்களினால் அவர் கள் எந்த வகுப்பில் சேர்ந்தவர்களென அறி ந்துக் கொள்ளலாம்.

முதலாவது பிரிவினர் — பயபக்தியோடு ஆண்டவனை வணங்குபவர்கள். இவர்களுக் குரிய அடையாளங்களாவன :—

1. தம்மை மிகக் கேவலமாக நினைப்பர்.

2. தாம் செய்த நன்மைகள் கொஞ்சம் என எண்ணுவர்.

3. தாம் செய்த தீமைகள் அமிதம் என நிச்சயிப்பர்.

இரண்டாவது பிரிவினர்—ஆண்டவன்மீது ஆதரவு வைத்து தொழுபவர்கள். இப்படிப் பட்டவர்களின் அடையாளங்களாவன :—

1. எந்த நிலைமையிலும் மனிதர்களின் தலை வராய் விளங்குவர்.

2. உலகத்தில் மனிதர்களிடை கொடை யாளியாய் இருப்பர்.

3. ஆண்டவனுடைய சிருஷ்டிகளின் மீது நல்லெண்ணம் வைத்திருப்பர்.

மூன்றாவது பிரிவினர்—ஆண்டவன் மீது பிரியம் வைத்துத் தொழுபவர்கள். இவர் களின் அடையாளங்கள் அடியில் வருமாறு.

1. தாம் விரும்புகின்ற பொருளை பிறருக்கு அளிக்க விரும்புவார்கள்.

2. தம்மைப் படைத்த ஆண்டவனுக்கு பொருத்தமாக விருக்கும் வழியைத் தவிர வேறெதையும் விரும்பார். பொருத்தமல்லா தவைகளை விலக்குதற்கு உயிரை வேண்டுமாயி னும் தியாகஞ் செய்ய முன் வருவர்.

3. ஏவல், விலக்கல் சம்பந்தமாக ஆண்ட வனுடைய கட்டளையினையே அனுசரித்து நடப்பர்.

வஹ்பு இப்னு முனப்பஹ் யென்பவர்கள் தவ்ருத்தில் எழுதி இருப்பதாக கூறும் விஷய மாவது:—

பேராசையுள்ளவன் அரசனுயிருந்தாலுஞ் சரி அல்லது சக்கிரவர்த்தியாக இருந்தாலுஞ் சரி அவன் ஒரு பிச்சைக்காரனேயாம். உள் ளதைக் கொண்டு திருப்தி அடைகிறவன் பட்டினி கிடந்தாலும் செல்வந்தனைப்போல வே இருப்பான்.

முந்துங்கள்! **ஓர் அதிர்ஷ்டம்** முந்துங்கள்!!

1931-ம் ஆண்டு ஜனவரி மாதத்திய "ஹிபாஜத்துல் இஸ்லாம்" (மலர் **2** இதழ் **1**) எமது சந்தா நண்பர்கள் வசமிருப்பின் அப்பிரதி ஒன்றை எமக்கனுப்பித் தருவோர்க்கு 8-அணு கொடுக்கப்படும் 5-பிரதிகளை அனுப்பித்தருவோர்க்கு எமது, மாசிகை ஒரு வருஷத்திற்கு இனு மாக அனுப்பிக்கொடுக்க முயற்சித்துள்ளோம். வெளி நாட்டினர் 8-பிரதிகள் அனுப்பவேண் டும். நண்பர்கள் தாமிதமின்றிகூடிய சீக்கிரம் அனுப்பித்தருவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

மானேஜர்.

ரசூலுல்லாஹ்வைப் பின்பற்றல்.

சகோதிரர்காள்! மானிடகோடிகள் அனைத்தும் நன்குய்யும் பொருட்டு எல்லாம் வல்ல இறைவன் இவ்வுலகில் ரசூல்மார்களை அனுப்பி வைத்தான். ஆகவே எல்லோரும் அவர்களைப் பின்பற்றி அவர்கள் சொல்வனவற்றை அனுசரித்து நடக்கவேண்டியது கடமையாகும். அவர்களுடைய சொல்செயல்களை நம் வாழ்க்கை நிலையின் முன் மாதிரியாக வைத்துக்கொண்டு நல்லொழுக்கத்தில் ஈடுபட்டு வருவோமாகில் ஆண்டவனது உண்மை அடியாராக ஆகி ஜன்னத்துல் பிர்தௌஸ் என்னும் சுவர்க்கத்திற்குபோகவும் பாத்தியஸ்தராக ஆய்விடுவோம்.

எவர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்ட ரசூலை பின்பற்றி, அவர்களுக்கு வழிப்பட்டு நடந்து அவர்களின் கட்டளைகளை சிரமேற் தாங்கி அவர்கள் காண்பித்த நெறிகளில் செல்லவும், அவர்களை உண்மையான வழிகாட்டியாக எண்ணவும் செய்தார்களோ அன்னவர்கள் "ஆண்டவன் அவர்கள்மீது பொருத்தமாகயிருக்கின் இவர்களும் ஆண்டவனிடம் பொருத்தமுள்ளவர்களாகயிருக்கின்றார்கள்" என்னும் (மெடல்) நற்சாக்ஷிபத்திரம் அளிக்கப் பட்டவர்களாக ஆய்விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் ஆண்டவனுக்கு மிகப் பிரியமுள்ளவர்களாகவும் அவனால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களாகவும் ஆகிவிடுகின்றனர் இவ்விஷயமாக ஆண்டவன்திருக்குர் ஆனில் தெரிவிப்பதாவது:—

'நீங்கள் ஆண்டவன் மீது அன்புடையவர்களாயிருக்க நாடுவீர்களாகில் என்னைப் பின்பற்றுங்கள். அப்பொழுது ஆண்டவன் உங்களை விரும்புவான். அவன் உங்கள் பாவங்களை மன்னித்துவிடுவான். ஏனெனில் அவன் தயாளனாகவும் அருள் புரிபவனாகவும் இருக்கிறான்" என ஓ! முஹம்மதே மனிதர்களிடம் கூறுவீராக.

எந்த வகுப்பினராவது அறிவீனத்தாலும் அகங்காரத்தாலும் ரசூல் மார்களைப் பின் பற்றாமலும் அவர்களுக்கு பணிவிடை செய்யாமலும் அவர்களின் உபதேசங்களை நம்பாமலும் பொடுபோக்காய் இருப்பார்களாகில் அவர்கள் நீங்காத சாபத்திற்குள்ளாகி சதாகாலமும் நரக வேதனையிலிருப்பர். இது சம்பந்தமாக ஆண்டவன் குர்ஆன் மஜீதில் கூறி இருப்பதாவது.

"எவர்கள் நாம் அறிவித்த திருஷ்டாந்தங்களை மறந்திருந்து அதை அலக்ஷியம் செய்கின்றார்களோ அவர்க ளெல்லோரின் இருப்பிடம் ஜஹன்னமாயிருக்கும்." இன்னும் ஆண்டவன் திருக் குர்ஆனில் "ஆண்டவனையும் அவனுடைய ரசூலையும் (ஸல்.) பின்பற்றுங்கள்." என்று கூறி இருக்கின்றான். ஆதலின் ஆண்டவனையும் அவனுடைய ரசூலையும் (ஸல்.) பின்பற்றாதவர்கள் ஆண்டவனின் கட்டளையை மறந்தவர்களல்லவா? நிச்சயமாக அவர்கள் ஆண்டவனின் கட்டளையை மறந்தவர்கள்தான். அங்ஙனம் மறந்தவர்களின் இருப்பிடம் நரகமேயாம்.

திருக் குர்ஆனின் மற்றோரிடத்து ஆண்டவன் கூறி இருப்பதாவது:—ஓ! முஹம்மதே! (மனிதர்களிடம்) "ஆண்டவனுக்கும் அவனது ரசூலுக்கும் வழிப்படுங்கள்" என்று கூறுவீராக. அவர்கள் உம்முடைய வார்த்தைகளின் மீது நம்பிக்கை கொள்ளா விட்டால் "மாறு செய்பவர்களிடத்தில் இறைவன் பிரியம் வைக்கமாட்டான்" என்று அச்சுறுத்துவீராக.

அன்பர்காள்! ஆண்டவனுக்குப் பிரியம் இல்லாதவர்கள்சுவர்கத்திற்குள் நுழையமுடியுமா? அல்லது உலகத்திலாவது மேன்பதவி அடைய முடியுமா? ஒரு பொழுதும் முடியாதென்பது திண்ணம் அவர்கள் ஜன்னத்துல் பிர்தௌஸ் யென்னும் அழகிய சுவர்க்கத்தை இழந்து நரகத்தில் போய் சேர்வார்கள்.

அன்பர்காள்! உண்மையில், உயர்ந்த நிலையில் செல்ல வேண்டு மென்று விருப்பங் கொள்கின்ற எந்த வகுப்பினரும், தங்களது சொல், செயல் முதலியவைகளில் நாயகம் (ஸல்.)அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்காது போனால் அவர்கள் ஒருக்காலும் அவ்வித நிலைமையில் வந்து சேரமுடி

யாது என்பதை ஞாபகத்தில் வைக்கொள்ளல் வேண்டும்.

ஆண்டவன் திருக் குர்ஆனில் கூறி இருப்பதாவது "நீங்கள் மூமின்களாக (ஈமானில் உறுதியுள்ளவர்களாக இருப்பீர் களாகில்) மேன்மை பெற்றவர்களாவீர்கள்."

ஆண்டவனையும் ரசூல் (ஸல்) அவர்களையும் துயர்ந்து நடப்பவர்களே மூமின்களாகும். அவ்வாறு துயராதிரும்பவர்கள் முமீன்களாவார்களா? ஒரு பொழுதும் ஆகமாட்டார்கள் என்பது திண்ணம். ரசூலுல்லாவை பின்பற்றும் விஷயத்தில் அக்கரை எடுத்துக் கொள்ளாத வகுப்பினர், மேலே காட்டிய ஆயத்தின் பிரகாரம் மூன்னேற்ற மடைய முடியுமா? மற்ற வகுப்பினரை அடக்கியாளத் தக்க மேன்மை யடையக் கூடுமா? ஒருக்காலும் முடியாது. முன்னேற்றம் அவர்களை விட்டு வெகுதூரஞ் சென்றுவிடும். ஷெய்கு ஸஅதீ அவர்கள் இவ்விஷயத்தை எத்துணை உறுதியாக கூறி இருக்கின்றார்கள். அதாவது "ஒருவன் ரஸூலுக்கு மாற்றமாக நடந்தால் அவன் ஒருக்காலும் தான்பெற வேண்டிய ஸ்தானத்திற்கு வந்து சேரமாட்டான்."

ஆண்டவன் குர்ஆனில் கூறியிருப்பதின் பிரகாரம் ரஸூலைப் பின்பற்றுவதினால் அனந்த நன்மைகளுண்டு. ஆண்டவனுடையவும் ரஸூலுடையவும் கட்டளைப் பிரகாரம் நடப்பவர் ஆண்டவனால் மிகுதமான நன்மையும் உபகாரமும் அடையப் பெற்ற கூட்டத்தினருடன் சேர்ந்திருப்பர். நபிமார்கள், மார்க்கத்திற்காக உயிரைத் தியாகஞ்செய்தவர்கள், உண்மையான நல்லடியார்கள் இப்படிப்பட்ட பெரியோர்களுடன் கலந்திருக்கத்தக்க புண்ணியம் பெற்றவராவர்.

அபூ ஹுரைரா (ரலி.) அவர்கள் கூறுகிறதாவது:—"என்னுடைய உம்மத்துமார்களில் சுவர்க்கம் வேண்டாம் என்று மறுப்பவர்களைத்தவிர பாக்கி எல்லோரும் சுவர்க்கம் புகுவார்கள் என்று ரசூலுல்லாஹ் (ஸல்.) கூறினார்கள். அதுகாலை அவர்களிடத்தில் "சுவர்க்கம் வேண்டாம் என மறுப்பவர்கள் யார்" என வினவப்பட்டது. அதற்கு அவர்கள் "என்னைப் பின்பற்றினவன் சுவர்க்கம் புகுவான். எனது வார்த்தையினைத் தட்டி நடப்பவன் நிச்சயமாக சுவர்க்கம் வேண்டியதில்லை என்று மறுத்தவனாவான்" என்று பதில் கூறினார்கள்.

அன்பர்காள்! உயிரைத் தத்தஞ்செய்தாகிலும் ரசூலுல்லாஹ்வின் சொல் செயல்களை பின்பற்றி நடவுங்கள். அவ்வாறு செய்வதால் நபிமார்கள் சித்தீகீன்கள் மார்க்கத்தினிமித்தம் உயிரை விட்டவர்கள் ஆகிய மகான்களுக்கு சுவர்க்கதில் அமைத்து வைத்திருக்கும் பதவி உங்களுக்கும் கிடைக்கும். பரிசுத்தமான ரசூலைப் பின்பற்றுதவனைப்போல அத்துணை பேறுகெட்டவன் வேறு யாருளன்? ரசூல்மார்களைத் தொடர்ந்து நடந்தால் லௌகீகத்திலும் வைதீகத்திலும் ஒருங்கே முன்னேற்றமடையலாம்.

இதுகாலை முஸ்லிம்களாகிய நாம் சகல விஷயங்களிலும் உலகில் காணப்படும் மற்ற வகுப்பாரை பார்க்கினும் நாளுக்குநாள் மிகத் தாழ்ந்த நிலைமைக்கு ஏன் சென்றுக்கொண்டிருக்கின்றோம்? முன்னேற்றம் நம்மை விட்டு ஏன் வெகுதூரம் போய்விட்டது? காரணம் என்னவென்னின், நாம் ரஸூலை, ரசூல் என்று அறியவில்லை. அறிந்தாலும் நாவினால் மட்டும் சொல்லிக்கொள்கிறோமல்லாது அவர்களின் சொல் செயல் பிரகாரம் நடக்கவில்லை. ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் நமக்கு நேர்வழி காண்பித்தார்கள். ஆனால் நாம் நேர்மாற்றமாக நடக்கின்றோம். நாம் ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள்மீது உண்மையில் பக்தி வைத்து ஷரீஅத்தினைப் பின்பற்றி நடந்து வருவோமாகில் தாழ்மை, பழிப்பு, முதலிய சகல குறைகளை விட்டும் நம் இஸ்லாம் தூய்மையாக ஆய் பிரகாசிக்கும். செல்வம் அதிகாரம் ஆகியவை எல்லாம் நம் வீட்டு அடிமைப் பெண்களாக ஆய்விடும். பிறகு நாம் "சைனாவும் அறபும் நம்முடையது, ஹிந்துஸ்தான் நம்முடையது.

நாம் முஸ்லிம்கள்; உலகம் முழுதும் நம் நாடு" என்று ஸர் முஹம்மது இக்பால் கூறிய கவிகளை என்றும் நாவினால் சொல்லிப் பெருமை கொண்டாடுதற்கு பொருத்தமுடையவராவோம். நாம் அனைவரும் ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களைப்பின்பற்றி நடப்பதற்கு இறைவன் உதவிபுரிவானாக.

சுகாதாரம்—புகைக்குடி.

(அனுபவன் வரைவது.)

இப்பரந்த பூவுலகின் ஜனத்தொகையில் சற்றேறக்குறைய நான்கிலோர்பாக மனிதர்களை தன் வலையில் வீழ்த்திவிட்ட பொல்லாத புகைக்குடியினால் நம் ஜன சமூகத்திடை ஏற்பட்டிருக்கும் பண விரயங்களும் சரீர நஷ்டங்களும் கொஞ்சமன்று எனலாம். இதனை யப்பியசிப்போர்களுக்கு விளையும் பல வகைப்பட்ட வியாதிகளையும் டாக்டர்கள் பலப்பல வகையெனவுங் கண்டுபிடித்து நிரூபித்து விட்டிருக்கிறார்கள். இத்தியாதி தீய பயன் தரும் புகைக் குடியை இன்றைக்குச் சுமார் நான்கு நூறாண்டுகளுக்கு முன்னரே தான் கண்டுபிடிக்கப்பட்டதென்னும் உண்மையும் உண்மையேயாம்.

எனவே இவற்றினாலடையும் பயன் ஒரு சிறிது உண்டெனக் கூறுவோரு முளராதலால் அவர்கள் இவ்வகையாளர்களில் 100 க்கு (5) ஐவரேயாகும். இவர்கள் கூற்றையும் வைத்திய சாஸ்திரிகள் ஒத்துக்கொள்ளுகிறார்களில்லை. மற்றையவர்களும் இக்கெடும் புகைக் குடியை பழகிக்கொண்டு படாத பாடு பட்டாலும் விட முடியாமல் திண்டாடுவதாகவே கூறிக்கொண்டு கஷ்ட மனுபவிக்கின்றனர். இத்தொல்லை தரும் புகைக் குடியைப் பெரியோர்கள்தான் உபயோகிக்கின்றன ரென்பதற்கில்லை. மத்திப வயதுடையவர்களும், இளைய வயதுடையவர்களுங் கூடப் பழகிக்கொண்டு விட்டார்கள். இதை மறுக்கவியலா தென்பதை நினைக்க விஸனம் வருகிறது. இதுமட்டுமா? இதுகாலை பெண்டிர்களுங்கூட இத் துற்பழக்கமாகிய பொல்லாப் புகைக்குடியிலிரங்கி விட்டார்களென்பதை எழுதவும் கை கூசுகின்றது. அதிகாலையில் எழுந்தவுடனேயே வக்குவக்கென் றிருமிக்கொண்டும், இடைவிடாது சுருட்டையிழுத்துப் புகையை வெளிவிடும் நண்பர்களைக் கேட்டாலும், அவர்களுமிதனால் பயன் ஒன்றுமில்லை யாயினும், பழகிக் கொண்டுவிட்ட பொல்லாப்பெனவும் விட முடியாத வளவு மனதைக் கவர்ந்துவிட்டதால் ஓர் நாள் முழுதும் இல்லாவிடில் பைத்தியமே வந்துவிடும் போலிருக்கிறதெனவும் கூறுகின்றனர். என்னே! இவ்வனியாயப் புகைக் குடியின் கோளாறு. இளம் வயதுடைய வாலிபர்களும் சிறுவர்களும் இவ்விஷப்புகையை யுட்கொண்டு நெஞ்சுலர்ந்து நாவறண்டு, கண்களிருண்டு போய், காலக்கிரமத்தில் நபும்ஸகமும் வந்து பரிதாபக் காக்ஷியாளராய் நடைப்பிணங்களாய் ஒன்றும் சிந்திக்கவு மியலாதவராய் இத்துர்ப்பழக்கத்தை விடமுடியாமற் படும்பாடு சொல்லுந்தரமன்று. இப்பூவுலகிலேயே பெரிய நெருப்பு எறிந்து நகரத்தையே த்வம்ஸம்செய்த கான்ஸ்டாண்டிநோபலின் (ஸ்தம்பூல்) தீக்குக்காரணமும் ஓர் சிகரெட்டைக் குடித்தவன் தவருதலாய் பண்டங்களினிடையே நெருப்புடன் அதனையெறிந்த குற்றமென்றே கண்டுபிடிக்கப்பட்டது. சுருட்டு முதலிய புகையில் இலாகிரி வஸ்துக்களிலுள்ள நிக்கோடீன் என்னும் பாஷாணசத்தும் நிகோலின் என்னும் சத்தும் கலந்திருப்பதாயும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. ஏனையோர்கள் இப்புகைப் பழக்கத்தை பொல்லாததென்று கண்டுகொள்ளு முன்னதாகவே மனிதர்களை அவைகள் (புகைக்குடி) தம்வயப்படுத்தவல்ல பல அழகிய ரூபங்களிலே பலவகைப் பெயருடனும் பெட்டிகளுக்குள்ளும் டின்களுக்குள்ளும் திணிக்கப்பட்டு மேனாடு, கீழ் நாடுகளிலிருந்தும் பண்டிதர்களும் பாமரர்களும் அநுபவிக்கும்படி ஏற்றமாதரிகளில் மிகவும் சொகுஸாய் தயாரிக்கப்பட்டவைகளாய் இந்நிலவுலகின் ஒவ்வோர் மூலைமுடுக்குகளிலும் பரத்தப்பட்டிருக்கின்றன. அவ்வியாபாரத்தை அதிகப்படுத்தவும் பிரசாரம்பண்ணவும் வல்ல அநேக விளம்பரங்களும் தயாரிக்கப்பட்டு ஜனங்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் ஒப்பற்ற உழைப்பாளியும் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தவருமான கிறிஸ்தவர் கொலம்பஸ் (Columbus) நான்கு நூற்

றாண்டுகளுக்கு முன்னரே அமெரிக்காவைக் கண்டுபிடிக்கச் சென்றபோது அங்குள்ள அழகிய பரவைகள் நிறைந்துள்ள கியூபா (Cuba) வெனும் தீவிலிறங்கினதாயும் அங்கே புகையும் கொள்ளிக்கட்டைகளை வாயிற் கௌவிக்கொண்டு இங்குமங்கும் அலையும் ஓர் வகைப் புதிய மனிதர்களைக் கண்டதாகவும் அவர் திரும்பவந்தபோது தம்மையன்புடன் கடற் பிரயாணத்துக்கு அனுப்பவுதவிய மேன்மைக் குணம் வாய்ந்த இஸ்பெல்லா மகாராணியாரிடம் அறிவித்தாராம். பிறகு ஓர் நூற்றாண்டுக்குப் பின்னரே இங்கிலாந்தில் எலிஸபெத் மகாராணியார் காலத்தே ஸர் வால்டர் ரிலே என்பவர் மேற்கு இந்தியத் தீவுகளுக்குச் சென்று திரும்பியபோது இப் (பிணிதரும்) புகையிலையைக் கொண்டு வந்தாராம். இது சம்பந்தமான கதையொன்று பின் வருமாறு எழுதிவைக்கப்பட்டிருக்கின்றது. ஸர் வால்டர் ரிலே தனது அறையில் உட்கார்ந்து முதல் முதலாய் புகைகுடித்துக் கொண்டிருந்த போழ்து வெளியிலிருந்து அறைக்குள் நுழைந்த அவ்ரது வேலைக்காரன் அவரைப் பார்த்து வாய் மூக்குவழியே எஜமானனுக்குப் புகைகள் வருவதைக்கண்டு திடுக்கிட்டு எஜமானன் தீபற்றி எறிகிறார் என நினைந்து கையிலிருந்த பீர் நிறைந்த கிண்ணத்தை அவர் முகத்தில் வீசி அந்நெருப்பை யணைக்க முயன்றானாம். இந்தியாவின் சக்கிராதிபதிகளிலொருவருக்கு இப் பொல்லாப் புகையிலையை ஓர் ஆங்கில கனவான் சன்மானமளித்தாராம். ஆனால் அப்போது இப்புகையிலையினுடன் பல வாசனைத் திரவியங் கலந்து பொடி செய்து தண்ணீர் நிறைந்த பாத்திரத்தின் வழியே குழாய்களால் புகைகளை யிழுக்கப்பட்டு நிக்கோட்டின் முதலிய விஷங்களை சுத்திகரிக்கச் செய்து "ஹூக்கா" என்ற நாமத்துடன் உபயோகிக்கப்பட்டதாயினும் அதுவும் மனித சமுகத்துக்கு ஏற்காத வொன்றேயென பிற்காலத்து ஹகீம்களும் டாக்டர்களும் ஆயுர்வேதிக்களும் கண்டித்து விட்டிருக்கின்றனர்.

எனவே நேயர்காள், காஸரோகத்தை யுண்பண்ண வல்லதும், நரம்புத் தளர்ச்சியை யுண்டுபண்ணி காலக்கிரமத்திலே நபும்ஸகத்தைத் தரவல்லதும், பைத்தியத்தையும், பாயும் படுக்கையுமாய் கிடத்தலையும் சிருஷ்டிக்கவல்ல இப்பாழும் புகைக்குடியை நமது மக்களும் படித்துக் கொள்ளாமலிருப்பதற்காகவாவது நாம் விட்டுவிட வேண்டாமா? என்னே இவ்விருபதாம் நூற்றாண்டில் நாம் புகையிலைக்கும், புகைக்குடிக்கும் செய்துவிட்ட பெரிய தியாகம். ஏன்? சில சிறுவர்கள் கலாசாலைக்குச் செல்லும்போதெல்லாம் கூட இவ்விஷப்புகையை இழுத்து வெளியிடும் காக்ஷி மிகவும் அருவருக்கத்தக்கதாய் காணப்படுகின்றது. வயிற்றுக்கில்லாத எளியமக்களும் இப்புகை யுணவை வாங்க எங்கிருந்தேனும் செலவிடுகின்றனர். இந்தியாவின் தர்கால தரித்திர தசைக்கு புகைக்குடியும் ஒன்றென்று சொல்லவேண்டும். ஏனெனில் வருடத்தில் கோடிக்கணக்கான பணங்கள் இவ்வகைகளில் செலவிடப்படுகின்றன. அப்பெரிய பணச் செலவுடன் அதனைப் பயின்றவர்கள் வைத்தியர்களுக்குச் செலவிடும் தொகையும் அபாரமாகும். எனவே இத்தீய பழக்கத்தை ஒவ்வொருவராய் விட்டுவிட வேண்டுமென்பதும், இதனைக் கட்டாயமாக்க ஒவ்வோர் பட்டினங்களிலும் கிராமங்களிலும் பொதுச்சங்கங்கள் வேலை செய்யவேண்டுமென்பதும் ஒவ்வொருவரும் எளிதில் உணர வல்லதேயாம். எனவே அன்புமிகுந்த சகோதரர்காள், இவ்விஷயத்தில் தாங்கள் செய்யவேண்டிய முதற்கடமையாவது புகைப்பிடிப்வர்களாயிருந்தால் அதனை விட்டுவிட வேண்டியதுதான். இதுபற்றியே மௌலானா அப்துல்ஹை லக்னவீ அவர்களும் தங்களது (ஷூர்புத் துகான்) "புகைக்குடி" எனுங் கிரந்தத்தில் இப்புகையிலை ஹிஜ்ரி 11-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே முஸ்லிம்கள் கைவசப்பட்டு அல்லல்பண்ணியதென்றும் இதனை யப்பியஸிப்பது மக்ரூஹ் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். (வரும்.)

அனுதாபம்

ஜனாப் ஹாஜீ கா. காதர் மஸ்த்தான் ராவுத்தர் அவர்கள் இரவாஞ்சேரியில் காலஞ்சென்றுவிட்டாரென்பது கேட்டு மிக வருந்துகின்றோம். இப்பெரியார் பிரபலவர்த்தகர்களான ஹாஜீ எம். எம். காதர்பகீர் றாவுத்தர் கம்பெனியின் கூட்டாளியாகும். அல்லாஹ் தஆலா மௌத்தாவுக்கு மக்பிரத்துச் செய்து, யாவர்க்கும் சப்ரஜமீலை தந்தருள்புரிவானாக. அவர் நண்பர்கட்கும் உறவினர்கட்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம். (ப-ர்.)

நஞ்சிரார்கட்கு நன்மதி

பேராசை.

அருமைச்சிறார்காள்!

பேராசை என்பது மாபெரும் கெட்ட வியாதியாகும். அதன் காரணத்தால் மானிடன் தன்சுய அறிவை இழக்கும்படி நேர்ந்து விடுகிறது. அதனால் நிகழ்வுற்ற மகத்தான ஓர் சம்பவத்தினை கீழே குறிப்பிடுவது கொண்டு "பேராசை பெருத்த நஷ்டம்" என்பது நன்கு புலனாகும். அதாவது:—ஒரு நாள் மூன்று சினேகிதர்கள் ஒன்றுகூடி "மௌத்" மரணத்தைக் கண்டு பிடிக்கவேண்டுமென தீர்மானித்து அதற்காக அம்மூவரும் வெளியிற் கிளம்பி பாதசாரியாகச் சென்று வழியிற் சந்திப்போர் ஒவ்வொருவரையும் மரணத்தைப் பற்றி விசாரிப்பதும், அவர்கள் ஆச்சரியமுற்று சிறித்துக்கொண்டு இன்னும் சற்றுச் செல்லுங்கள் என்று சொல்வதுமாகயிருந்தது. இவ்வாறு அம்மூவரும் விசாரித்துக் கொண்டே வெகுதூரஞ் சென்று விட்டார்கள். ஆங்கு ஓரிடத்தில் ஓர் விர்த்தாபியர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அம்மூவரும் அவரினருகாமையிற் சென்று "மரணம்" என்பது எங்கிருக்கிறது அதைப்பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். அதற்கு அவ்விர்த்தாபியர் "இங்கிருந்து 12 மையிலுக்கப்பால் ஒருமலை இருக்கின்றது அவ்விடத்தில் தான் "மரணம்" இருக்கிறதெனக் கூறினார். இது கேட்டு அம்மூவரும் விசாரித்துக்கொண்டே அவர் சொல்லிய 12 மையிலுங்கடந்து அம்மலையைக் கண்டு பிடித்து அதன் நானா பாகங்களிலும் மரணத்தைத்தேடி அலைந்தும் எங்கும் கிடைக்காமற் போகவே, களைப்புற்று ஓர் இடத்தில் உட்கார்ந்து விட்டனர். இச் சந்தர்ப்பத்தில் அவர்களிலொருவர்க்கு ஒரு பிரகாசம் புலனாயிற்று. உடனே அதன் சமீபஞ்சென்று பார்க்கும்போது அஃது ஒரு தங்கக்கட்டியாகயிருந்தது. அதைப்பார்த்து மூவ்வரும் மகிழ்வெய்தி பூமியைத் தோண்டுவதற்கு ஆரம்பித்தனர். சற்றுநேரத்தில் மிகுதமான தங்கத்தைத்தோண்டி எடுத்து விட்டனர். அதனால் எற்பட்ட பிரயாசையால் அவர்கள் களைத்து உட்கார்ந்து விட்டனர். அதுபொழுது அவர்கட்கு கடும்பசி ஏற்பட்டு விட்டதால் அவர்களிலொருவரை சாப்பாடு கொண்டு வருவதற்காக சமீபத்திலிருக்கும் ஊருக்கு அனுப்பி விட்டு இருவரும் மலையிலேயே தங்கியிருந்தனர். சாப்பாடு கொண்டுவர சென்றவன் வழியிற் செல்லும்பொழுதே "கிடைத்த தங்கம் யாவற்றையும் தனக்குச் சொந்தமாகச் செய்து கொள்வதற்குள்ள மார்க்கத்தை சிந்தித்துக் கடாசியாக அவ்விருவரையும் மரணிக்கச் செய்துவிட வேண்டுமென முடிவு செய்து கொண்டான். அதனால் அவ்விருவர்க்காக கொண்டுவரும் சாப்பாட்டில் விஷங் கலந்து எடுத்துவந்தான். இஃது இங்ஙனமிருக்க, மலையில் உட்கார்ந்திருந்த இருவர்க்கும் பேராசை ஏற்பட்டு "கொஞ்ச தங்கமிருக்கிறது; நாம்மூன்றுபேரிருக்கின்றோம்; எவ்வாறாயினும் நம்மில் ஓர் ஆள் கம்மியாய் விட்டால் மீதமுள்ள இருவரும் இங்குள்ள தங்கத்திற்குப் பாத்தியஸ்தராக ஆய்விடலாமென்று முடிவுசெய்து சாப்பாடு கொண்டு வருபவன் இங்கு வந்து சேர்ந்தவுடன் அவனைக்கொன்று விடுவதெனத் தீர்மானித்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் அவன் சாப்பாட்டுடன் அங்கு வரவே, அவனைத் தடியால் அடித்து ஓர் பள்ளத்தாக்கில் எறிந்துவிட்டு அவ்விருவரும் சந்தோஷமாகச் சாப்பிடுவதற்கு உட்கார்ந்தார்கள். அந்தச் சாப்பாட்டில் நஞ்சு கலந்திருப்பது அவர்களுக்குத் தெரியாததலின் நல்ல விதமாக சாப்பிட்டான சற்று நேரத்திற்கெல்லாம் விஷமேறி அவ்விருவரும் உயிர் துறந்தனர்.

சிறார்காள்! பேராசையின் பிரயோசனமின்னதென்பதை நன்கு தெரிந்துகொண்டீர்கள். பேராசைதான் அம்மூவரின் மரணத்திற்குக் காரணமாகும். மரணம் பேராசையால் ஏற்படுகிறதென்பதைக் காண்பிப்பதுதான் விருத்தாப்பியரின் நோக்கமாகும். மானிடன் பேராசையின்காரணத்தால் மரணமடைகிறான். எவன் பேராசையுடையவனாகயிருக்கின்றானோ அவன் எக்காலமும் கெட்ட

பெயர் பெற்றுக்கொள்கிறான். ஆதலின் நீங்கள் பேராசை என்னும் பேயைத் துறத்துவதற்கு முயற்சியுங்கள். அஃதுகெட்ட ஓர் துர்ப்பழக்கமாகும். ஆதலின் அதைவிட்டுத் தவிழ்ந்துகொள்வது அத்தியா அவசியமாகும்.

இனிமையான பேச்சு.

இனிமையான பேச்சுக்களும் இப்பூ உலகில் ஆண்டவனால் அளிக்கப்பெற்ற மாபெருங் காருண்யங்களிலொன்றாகும். எவனிடம் இனிமையான வார்த்தைகள் அமைந்திருக்கின்றனவோ அவன் பகைவர்களையும் சிநேகிதர்களாகச்செய்துகொள்ள ஹேது ஏற்பட்டு விடுகிறது. சற்குணத்தோடு சிரித்துப்பேசுவதனால் மானிடனுக்கு எவ்வித சங்கடமும் ஏற்படுவதில்லை. அதனால் கிடைக்கும் பிரயோஜனங்களனந்தம். எவனுடன் சற்குணத்தோடு இனிமையாக பேசுகின்றாமோ அவன் நமக்கு சினேகிதனாகி ஆய்விடுகின்றான். ஆனால் எவன் சதாகோபமாகவும் கடூரமாகவும் பேசிக்கொண்டிருக்கின்றானோ அவனிடம் யாவரும் வெறுப்புற்றிருப்பதைக் காணலாம். அவனுடன் எவரும் முழுமனதோடு அன்பு பாராட்டாரென்பது திண்ணம். வாயால் கெட்ட அம்மனிதனைவிட்டு ஒவ்வொருவரும் விலகியிருப்பதையே நாடுவர். அவனுக்கு ஏதாகிலும் கஷ்ட-சங்கடங்கள் நேரிடின் எவருக்கும் அவன் மீது பச்சாதாபம் உண்டாகமாட்டாது.

நஞ்சிறார்கள் ஆரம்பத்திலேயே இனிமையான பேச்சுக்களையும் சற்குணத்திற்குள்ள ஒழுக்கங்களையும் தெரிந்துகொள்ள வேண்டியது அத்தியா அவசியமாகும். ஒருக்கால் அறியாத்தனத்தால் கோபம் ஏற்பட்டுவிடுமாயின் அக்கோபத்தினால் நமக்கு யாதொரு பிரயோசனமும் உண்டாகாது. அதற்கு மாற்றமாக நம்மைக் கெட்டவர்களென யாவரும் கூற முற்படுவர் என்பதை மனதில் சிந்தித்து கோபத்தை விட்டு பின்னடைவது அவசியமாகும். சிலர் தங்கள் வேலைக்காரர்களை சதா ஏசிப்பேசிக்கொண்டு வருவதுடன் அவர்களுடன் நல்ல முறையிலும் நடந்து கொள்வது கிடையாது. இஃது பெருந்தவறாகும். ஏழையாகிய வேலைக்காரன் தான் மேற்கொண்டு நடத்திவரும் ஊழியத்தைக் கருதி மௌனமாகயிருந்து விடினும் அவன் ஒருக்காலும் எஜமான் மீது உள்ளன்பு கொண்டிருக்க முடியாது. அவன் தன் சினேகிதர்களுடன் கலந்திருக்குங்கால் எஜமான் மீது குறை சொல்லித்தான் தீருவான். ஆதலின் எந்தப் பிள்ளைகள் தங்களுக்கேற்படும் கோபங்களை அடக்கிக்கொண்டு மனிதர்களுடன் சற்குணமாக நடந்துகொள்கின்றார்களோ அன்னோர் யாவரின் புகழுக்குறியவராகின்றனர்.

எச்சிறுவனாகிலும் தன் வேலைக்காரர்களோடு அன்பு பூண்டொழுகுவானாகில் அவ்வேலைக்காரர்களும்அவனிடம் அன்பு பாராட்டுவார்கள். அவன் பள்ளிக்குச் செல்லுங்கால் ஆங்குள்ள சகலருடன் சற்குணமாக நடந்து கொள்வானாகில் உபாத்தியாயர் முதல் மாணவர்கள் யாவரும் அவனிடம் அன்பு காட்டுவர். இவ்வாறின்றி எவன் வாயாடியாகவும் துர்வார்த்தை பேசுகிறவனாகவும் இருக்கின்றானோ அவனிடம் வீட்டிலுள்ள தாய்தந்தையர் சகோதர சகோதரிகள் யாவரும் வெறுப்புற்றிருப்பர். அவன் பள்ளிக்குச் செல்லுங்கால் அவனின் துர்நடத்தையால் அநேக சங்கடங்களை ஏற்கும்படி நேரிடும். சேர்ந்து வாசிப்போருடன் சதா பிணங்கிக் கொண்டிருக்கும்படி ஏற்படுவதால் அவனின் துர்ச்செயல் உபாத்தியாயர் வரை எத்தி அதனால் இவன் தெண்டனை அனுபவிக்கும்படி நேரிடுகிறது. எப்போதாகிலும் ஒருக்கால் உபாத்தியாயரிடம் துர்வாத்தையாடி மரியாதைக் குறைவாக நடந்துகொண்டதின் காரணமாக பள்ளியைவிட்டு நீக்கப்பட்டு விடுவானாகில் அதனால் பிறகு எப்பள்ளியிலும் சேர்த்துக் கொள்ளப்படாமல் அவன் ஆயுள்வரை கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்படி நேர்ந்துவிடுகிறது. தவிர சிறுபிராயத்திலேயே இனிமையான வார்த்தைகள் பேசுவதற்கு பழகிக் கொள்ளாவிடின் வாலிபத்தில் பெரும் சங்கடப்படும்படி நேரிடும் "சிறு பிராயத்தில் அப்பியாசப்படுத்திக்கொண்டது ஒருக்காலும் இவனைவிட்டு அகன்று விடுவதில்லை" ஆதலின் சிறார்கள் ஆரம்பத்திலேயே துர்வார்த்தை பேசுவதற்கு பழகிவிடுவார்களாயின் அவர்களின் வாணாள் முழுதிலும் அத்துர்ப்பழக்கம் அவர்களை விட்டு ஒருக்காலும் நீங்கிவிடமாட்டாதென்பது திண்ணம். அத்துர்ப்பழக்கத்தின் காரணமாக பல்வகை கஷ்டங்களை அனுபவிக்கும்படி நேரிடும். எச்சிறுவர்கள் ஆரம்ப முதல் இனிமையான வார்த்தைகள் பேசுவதற்குள்ள பழக்கத்திலீடுபடுகின்றனரோ

அவர்கட்கு பிற்காலத்தில் அளவற்ற—மட்டிலடங்கா ஆனந்தமுண்டு. எவரும் அவனுக்கு பகைவராகவோ—விரோதியாகவோ ஒருக்காலுமிரார் என்பது திண்ணம். அவனுக்கு விரோதியாக யிருப்பவருங்கூட அவனின் சற்குணத்தால் சினேகிதராக ஆய்விடுகின்றனர். எவனுடைய சிநேகிதர்கள் மிகுதியாகவும் பகைவர்கள் கம்மியாகவும் காணப்படுகின்றனரோ அம்மனிதன் தான் சுகண்டியோடு காலங்கழிப்பான். துர்வார்த்தை பேசுகிறவர் சற்குணமற்ருேர் முதலியோர்க்கு சினேகிதர்கள் கம்மியாக ஆய்விடுகின்றனர் ஆனல் பகைவர்கள் மிதுமிஞ்சி ஏற்பட்டுவிடுகின்றனர்.

ஹஸ்ரத் சுலைமான் (அலை.) அவர்கள் மாபெரும் சக்ரவர்த்தியாகவும் நபியாகவும் இருந்தார்களென்பது வெளிப்படை. அவர்கள் "மானிடன் இனிமையான வார்த்தை பேசுவது, சற்குணமாக நடந்துகொள்வது இவைகளினுல் அவனின் பகைவர்கள் சினேகிதர்களாகவும் துர்வார்த்தை பேசுவது, குணங்கெட்டு நடப்பது இவைகளினுல் அவனின் சிநேகிதர்கள் பகைவர்களாகவும் ஆய்விடுகின்றனர்" எனக்கூறி யிருக்கின்ருர்கள். ஆதலின் ஒவ்வொரு சிறுவர்களும் ஆரம்ப முதல் இனிமையான பேச்சும் சற்குணமும் பூண்டொழுவதுடன் துர்வார்த்தை பேசுவதை விட்டுத்தவிழ்ந்து நடந்துகொள்வது அத்தியா அவசியமாகும்.

20-வது நூற்றுண்டின் ஒளியில் கிறிஸ்தவ இருள்.

கி. பி. 4-வது நூற்றுண்டு முதல் 14-வது நூற்றுண்டுவரை எத்தனையோ முறைகள் பைபிள்வேதத்தில் பற்பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அம்மாறுபாடுகள் அனைத்தும் அந்தரங்கமாக செய்யப்படாமல் பிரமாண்டமான கூட்டங்கள் கூட்டி பகிரங்கமாகவே மாற்றப்பட்டன. அவ்விதம் பைபிள் சட்டதிட்டங்களை மாற்றுவதற்காக ஏற்பட்ட கூட்டங்களுள், நீஸ், லுடேஷியா, காற்தஜ் முதலிய பெயர் பெற்ற கூட்டங்கள் பிரதானமாகும். இக் கூட்டங்களில் பைபிளிலுள்ள எழுத்துக்களும் வாக்கியங்களும் தான் மாற்றப்பட்டன வென்று எண்ணிவிடவேண்டாம். தனிப்பட்ட பாகங்களும், அத்தியாயங்களும் அதிலிருந்து எடுக்கப்பட்டு அநேக புதியபுதிய விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அக்காலமானது இக்காலத்தினைப்போல் மிக உயரிய நாகரீக காலமாய் இராமல் மிகவும் பிற்போக்கான காலமாயிருந்தது. அச்சுஇயந்திரசாலைகள் அறவே கிடையாது. புத்தகங்களெல்லாம் கையெழுத்துப் பிரதிகளாகவே வழங்கப்பட்டு வந்ததால் அக் காலத்தில் காணப்பட்ட புத்தகங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே இருந்தன. ஆகவே பழைய நூற்களை அறவே இல்லாமல் ஒழித்துவிடுவதும், புதிய நூற்களிலுள்ள விஷயங்களைக் கூட்டவும் குறைக்கவும் செய்வதும் வெகு இலகுவாயிருந்தது. ஆனல் 20-வது நூற்றுண்டாகிய இந் நாகரீக காலத்தின் பிரகாசத்திலோ உலகத்தின் பலபாகங்களிலும் அச்சு இயந்திரசாலைகள் கணக்கில்லாமல் ஏற்படுத்தப்பட்டு கோடானு கோடி நூற்கள் உலக முழுவதிலும் பரத்தப்பட்டிருப்பதால், இக் காலத்தில் பிரதியாக வெளியாக்கப்படும் நூற்களில் ஒரு எழுத்தையுங்கூட மாற்றியமைப் பதென்பது பெரும் அவமானத்திற் சிடமானதாய் யிருக்கிறதென்பதை நம் கிரிஸ்தவ நண்பர்கள் அறிந்திருக்கின்றனர். முஸ்லிம்கள், பைபிள் வேதம் மாற்றப்பட்டிருக்கிறதென்று கிறிஸ்தவர்களிடத்தில் கூறினல் அவர்கள் அதை ஒப்புக்கொள்ளாமல் 2000-வருஷங்களுக்கு முன்னிருந்த அதே பைபிள் தான் இக்காலத்திலும் யாதொரு மாறுதலுமின்றி காணப்படுகின்றதென்றும், அதில் ஒரு சுவிசேஷமாவது மாற்றப்படவில்லை என்றும் கூசாமல் கூறுகின்றனர். இங்ஙனம் அவர்கள் மறுப்பதை ஆராயுமிடத்து, அவர்கள் தங்கள் பைபிள் வேதத்தைப் பற்றி நன்ருகத்தெரிந்துக் கொள்ளவில்லை என்று சொல்லவேண்டும். அல்லது அதைப்படிகின்ற உலகத்தவரின்

அறிவு செவ்வையாக இல்லை என்று உறைக்க வேண்டும்.

என்னிடத்தில் ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸ்டியில் 1921-வது ஆண்டு அச்சியற்றப்பட்ட இங்லீஷ் பைபிளும் நியூயார்க்கில் 1920-வது ஆண்டு அமெரிக்கன் பையிள் சொசைட்டியாரால் அச்சிடப்பட்ட புதிய ஏற்பாடும் ஆக இரு பைபிள்களிருக்கின்றன. அவ்விரு பைபிள்களும் சீர்திருத்தப் பெற்று வெளியிடப் பட்டவைகளாகும். ஈண்டு இவ்விரு பைபிளிலும் உள்ள வித்தியாசங்களை எடுத்துக் காட்டுகின்றேன். அவைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாயிருப்பதை வாசகர்களாகிய நீங்களே நன்கு தெரிந்துகொள்வீர்கள்.

புதிய ஏற்பாடு சுமார். 27 பாகங்கள் அடங்கியுள்ள ஒரு நூல். அதில் முதலாவது பாகம் 'மத்தேயின் இன்ஜீல் எனப்படுகிறது. அமெரிக்கன் பதிப்பாகிய மத்தேயின் இன்ஜீலில் 19-வது அத்தியாயம் 16, 17-வது பாடத்தில் கீழ்குறித்தவாறு எழுதப்பட்டிருக்கிறது.

(1) ஒரு மனிதன் யசோஉ விடத்தில் வந்து—"ஓ! நற்குருவே! நான் என்னென்றும் ஜீவித்து அழியாதிருப்பதற்கு எப்படிப் பட்ட நற்கருமம் செய்துவரவேண்டும்" என வினவினன் அதற்கு மறுமெழியாக "நீ எதற்காக என்னை நல்லவன்என்று கூறுகின்ருய். ஒருவனைத்தவிர அதாவது இறைவனைத்தவிர வேறு யாரும் நல்லவரன்று." என்று கூறினர். (மத்தேயின் இன்ஜீல், அமெரிக்கன் பதிப்பு, அத்தியாயம் 19. பாடங்கள் 16, 17.) மேற்கண்ட வாக்கியங்களை இங்லீஷ் பதிப்பில் எவ்விதமாக மாற்றப்பட்டிருக்கின்றதென்பதைக் கவனிப்போம்.

ஒரு மனிதன் யசோஉ இடத்தில் வந்து "குருவே! நான் எப்பொழுதும் ஜீவனோடிருப்பதற்கு எப்படிப்பட்ட நற்கருமங்கள் செய்து வரவேண்டும்" என வினவ, அதற்கவர் "நலவான காரியமென்று நீ ஏன் என்னை கேட்கின்ருய். நல்லவன் ஒருவன் தான்" என பதில் கூறினர். (மத்தேயின் இன்ஜீல் இங்லீஷ் பதிப்பு அத்தியாயம் 19. பாடங்கள் 16, 17.)

வாசகர்களே இவ்விரு இன்ஜீல்களிலுமுள்ள வாக்கிய அமைப்புக்களை நன்ருகக் கவனியுங்கள். மாற்றப்பட்டவைகள் எவ்வளவு அலங்கோலமாயும், தக்க ஆதாரங்களோடு அமைக்கப்படாமல் பொருத்தக் கேடாயும் இருப்பதைப் பாருங்கள். "நலவைச் செய்வதற்காக நீ என்னை ஏன் கேட்கின்ருய். நல்லவன் ஒருவன்தான்" என்று யசோஉ கூறிய மறுமொழியானது அம்மனிதன் விடுத்த வினவுக்குச் சரியான பதிலாகுமா? எசோஉ விடத்தில் வேறு எதைத்தான் கேட்பது? கெட்டதைச் செய்வதற்காக கேட்பதா என நம் கிரிஸ்தவ நண்பர்களைக் கேட்கின்றேன். இவ்விரு வாக்கியங்களிலும் மூன்றிடத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முதலாவது 'நற்குரு' என்றிருந்த இடத்தில் 'நல்ல' என்றபதம் எடுக்கப்பட்டு 'குரு' என்று மட்டும் காணப்படுகின்றது. இரண்டாவதாக "நீ ஏன் என்னை நல்லவன் என்று சொல்கின்ருய்?" என்றிருந்த வாக்கியத்திற்குப் பகரமாக "நல்லதைச்செய்வதற்காக வேண்டி நீ ஏன் என்னை கேட்கின்ருய்?" என்ற நேர்மாற்றமான வாக்கியத்தை அமைத்திருக்கிறது. மூன்ருவதாகக் கடைசியில் காணப்படும் "நல்லவன் ஒருவன் அதாவது ஆண்டவன் தான்" என்ற வாக்கியத்தில் "அதாவது ஆண்டவன்" என்ற சொல்லை எடுக்கப்பட்டிருக்கிறது.

முற்காலத்தில் நேஸ், லுடேஷியா, கார்தஜ் முதலிய பிரபல கமிட்டிகளால் பகிரங்கமாக மாற்றப்பட்டதுபோன்று நாம் மேலே எடுத்துக் காண்பித்த மாற்றங்கள் பகிரங்கமாக நடைபெருவிட்டாலும் கிறிஸ்தவ நிபுணர்களின் ஆலோசனையின்மீதே அந்தரங்கமாக நடைபெற்றிருக்கின்றன. ஏதாவது ஒரு காரியத்தை உத்தேசித்தே பாதிரிகளின் ஆலோசனையின்மீதே இவ்வித மாற்றங்கள் நடைபெற்றிருக்கவேண்டும். ஹஸ்ரத் எசோஉ அம் மனிதனுக் களித்த மறுமொழியில் அவர்கள் தம்மைத் தாமே நல்லவரென்று சொல்லிக்கொள்ள மறுக்கின்ருர்கள் என்னும் உண்மை தெற்றென அறியக்கிடக்கின்றது. ஆனல் நம்கிறிஸ்தவர்கள் தங்களுடைய "பிராயச்சித்தம்" என்ற கொள்கைக்கு மதிப்பு இல்லாது போய்விடும் என்ற நோக்கத்தோடு அவர்களுடைய விடைகளின் மூலம் அவர்கள் நல்லவர்கள் என்னும் விஷயத்தில் பிறருக்கு சந்தேகம் தோன்ருதிருக்கச் செய்யும்பொருட்டு அவர்கள் அளித்த விடையைத் திரித்து அமைத்திருக்கின்ருர்கள்.

ஏனெனில் பிராய்ச்சித்தம் அளிக்கின்ற மனிதர் யாதொரு பாவமும் செய்தறியாத நல்ல மனிதராய் இருக்கவேண்டிய தவசியம் என்பது கிறிஸ்தவர்களின் கூற்று. இக்காரணத்தினாலேயே மற்ற அன்பியா அலைஹிஸ்ஸலாம் அனைவோரையும் பாவிகள் என நம்பிக்கொண்டிருக்கின்றனர். நம் கிறிஸ்தவ நண்பர்கள் அங்ஙனம் மாற்றங்கள் செய்யத் துணிந்திருப்பினும் ஆண்டவன் அவர்கட்குத் தெரியாமலே அதை வெளியாக்கியிருப்பதைப் பாருங்கள். அமெரிக்கன் இன்ஜீலில் காணப்படுகிற அதே கருத்துள்ள வாக்கியம் இங்லீஷ் பைபிளிலுள்ள மற்கஸின் இன்ஜீல் 10-வது அத்தியாயம் 17, 18-வது பாடத்தில் காணப்படுகிறது. மாற்றியமைக்கச் செய்தவர்களின் கெட்ட சிந்தனையின் காரணமாகவே ஒரே கருத்தினைக்கொண்ட வாக்கியம் இங்லீஷ் பைபிளில் இரண்டு இடங்களிலிருப்பது தெரியாது. ஒரு இடத்திலுள்ளதை மட்டும் மாற்றி இருக்கின்றனர்.

(2) அமெரிக்கன் இன்ஜீலில் எசோஉவின் கட்டளை பின்வருமாறு காணப்படுகிறது:—

"எனினும் அந்த நாளையும் அந்த நேரத்தையும் மனிதன் அறியமாட்டான். விண்ணவரும் அறியமாட்டார் என் பிதாவைத் தவிர" (அமெரிக்கன் மத்தேயின் இன்ஜீல் அத்தியாயம் 24, பாடம் 36.)

இவ்விஷயம் இங்லீஷ் மத்தேயின் இன்ஜீலில் பின்வருமாறு காணப்படுகிறது:—

"எனினும் அந்த நாளையும் அந்த நேரத்தையும் மனிதன் அறியமாட்டான். விண்ணவரும் அறியமாட்டார். குமாரனும் அறியமாட்டான் என் பிதாவைத் தவிர." (இங்லீஷ் மத்தேயின் இன்ஜீல் அத்தியாயம் 24. பாடம் 32.)

ஈண்டு எசோஉ மனிதரினத்திலும் விண்ணவரினத்திலும் சேராமல் பிரத்தியேகமான இனத்தில் சேர்ந்தவரென்று ருஜுப்படுத்துவதற்காக 'குமாரனும் அறியமாட்டான்' என்னும் வார்த்தைகளை கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ் வார்த்தைகள் அசல் வார்த்தைகளாய் இருந்தால் அமெரிக்கன் இன்ஜீலில் காணப்படாமைக்குக் காரணமென்ன? ஆகையால் இவைகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட வார்த்தைகள்தான் என்பதிற் சந்தேகமில்லை.

(3) அமெரிக்கன் இன்ஜீலில் எசோஉவின் உபதேசம் பின்வருமாறு காணப்படுகிறது:-

"இப்படிப்பட்ட பிசாசுகளை தொழுகை நோன்பு முதலியவைகளாலன்றி விரட்ட முடியாது" (அமெரிக்கன் மத்தேயின் இன்ஜீல் அத்தியாயம் 17. பாடம் 21.)

அமெரிக்கன் இன்ஜீலில் ஷை பாடம் காணப்படுகிறது. ஆனால் இங்கிலீஷ் இன்ஜீலில் இப்பாடத்தின் நம்பரே காணப்படவில்லை. 20-வது பாடத்திற்கு பிறகு 22-வது பாடம் குறிக்கப்பட்டிருக்கிறது. 21-வது பாடத்தின் பெயர் அடையாளம் இருந்தவிடம் தெரியாவண்ணம் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதைப்பற்றி பாதிரி அப்துல்ஹக் சாஹிப் தம்முடைய "கலாமெஹக்" என்னும் நூலில் சற்றும் ஒவ்வாத முறையில் மிகத்தைரியமாக சமாதானம் கூறி இருப்பது வியக்கத்தக்கதாக யிருக்கிறது.

தாவூதிய்யாக் கோஷ்டியினர் விடை பகர.

சிங்கை ஜனப் முஹம்மது ஷரீப் சாஹிப் வரைவது.

அன்பார்ந்த சோதரீர்!

தாருல் இஸ்லாம் ஆசிரியர்களான மௌலானா பா. தா. வும், மௌலவீ ஹா. பா. வும், மிர்ஜாவைப் பின்பற்றி அஹ்மதியாக் கொள்கைகளை அந்தரங்கமாக வைத்துக் கொண்டு இதுகாறும் தந்திரோபாயமாக தாருல் இஸ்லாத்தில் சுன்னத் வல்ஜமா அத்தின் கொள்கைகளையே எழுதுவதாகக் கூறி மிர்ஜாசாஹிபுனுடையவும் அவரின் சிஷ்யர்களான காஜா,முஹம்மதுஅலிமுதலியோர்களுடையவும் கொள்கைகளை பரப்புவதர்க்குள்ள தந்திரமுறைகளை கையாண்டு வருவதை மறுப்பவர்களை பல நிந்தனைப் பிரசுரங்களால் தாக்கி எழுதியும் அஹ்மதியாக் கொள்கை

களையெல்லாம் சுன்னத் வல்ஜமா அத்தின் கொள்கைகளென்று கூறியும் மகாஜனங்களை யேமாற்றுவதுடன், அந்த சுன்னத் வல்ஜமா அத்தின் மூலக் கொள்கைகளென்னவென்பதை பொதுமக்கள் பால் எடுத்து காட்டும்படி பரிகாசமாய் தமது பத்திரிகையில் பத்தி பத்தியாய் இல்லை? விளம்பரமாய் இடை விடாது எழுதி வருகின்றனரென்பது உங்களுக்கு புலனாகாமற் போகாது.

நேயர்காள்! மதபோதனையென்னும் பெயரால் மனித தூஷணை புரியும் "தாருல் இஸ்லாம்" ஆசிரியர்களை பகிரங்கமாக, எத்தனையோ முறை சுன்னத் வல்ஜமா அத்தின் கொள்கைகளை கற்பிக்கவும் அவர்கள் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் ஜவாஹிருல்புர்கானிலும் பிரசங்கங்களிலும் இழைத்துள்ள தவறுகளை எண்பிப்பதற்கும் அழைப்புகடிதங்கள் மூலமும், துண்டுநோட்டீஸ் வாயிலாயும் கூப்பிட்டதர்க்கு தகுதியற்ற முறையில் பதில்கூறிவிட்டு மூலையில் பதுங்கி கொண்டது நேயர்களறிந்த விஷயமே. எந்த சபைக்காவது பொதுக்கூட்டங்களுக்காவது விஜயம் செய்துள்ளனரா! அப்படிக்கூப்பிடுபவர்களை பலகிந்தனை மொழிகளால் அலங்கரித்துவிட்டு எம்மை கேள்வி கேழ்க்கவும் ஞாயத்தீர்ப்பளிக்கவும் இவர்கட்கு யார் அதிகாரம் கொடுத்தது; அதற்காக எந்த கோர்ட்டில் ஆடர் வாங்கினார்கள் என்பதாகவும் தமது பத்திரிக்கையில் எழுதிவிட்டு, சிலகால மௌனவிரதத்திற்குப் பின் மறுபடியும் சுன்னத் வல்ஜமா அத்தின் கொள்கையை விளக்கி காட்டமாட்டீர்களாவென்று வெகு கெம்பீரமாக மீசையை முறுக்குகின்றார்கள். என்னே இவர்களின் புத்தியின் போக்கு! குருகிய நோக்கம்!! வெட்கம் வெட்கம்!!!

பா. தாவூத்சா சாஹிப் அவர்களே! பாக்கவீ அவர்களே!! தாவூதிய்யாகுஞ்சிகளே!!! உங்களின் தவறுகளை எடுத்து காண்பித்து இதற்கு என்ன பரிகாரஞ் சொல்லுகின்றீர்கள் அல்லது அஃது தவறுதல்தான் என்று ஒப்புவீர்களாகில் அதை உடனே அகற்றிவிடுவதற்கு வழிதேடுங்கள் எனக்கூறப்புகின், முத்துப் பேட்டை கூண்டையும், நாகூர் கூண்டையும், திருவாலூர் தேரையும், கும்பகோண தாசிகளையும் ஒழித்துவிட்டு பின்னால் நாங்கள் செய்யும் தவறுகளை திருத்த வாருங்களென்று உங்கள் பத்திரிக்கையில் பத்திபத்தியாய் எழுதிநிரப்பி ஏசல்மாலையை கழுத்தில் அணிந்து மதத்தின் பெயரால் மனித தூஷணை புறிகின்றீர்கள். தாங்கள் சீர்திருத்தக்காரரென்று வாயளவில் சொல்லிக் கொள்கிறீர்களே தங்களிடம் அதர்க்கேற்ற செய்கை இல்லாதுப்போனது மிகவும் விசனிக்கத்தக்கதல்லவா? பா. தா. அவர்களே! உள்ளதைச் சொன்னால் உங்களுக்கு வந்துவிடுகிறது கோபம். தங்களின் சிங்கை விஜயத்தின்போது உங்களுக்கு சுன்னத் வல்ஜமா அத்தின் பாடம் கற்பிக்க எத்தனையோ தடவை துண்டுநோட்டீஸ் மூலமும் ஆள் மூல்யமும் தங்களை அறை கூவியழைத்தும் தாங்கள் மௌனம் சாதித்து வெளியில் வரவெட்கித்து மூலையில் பதுங்கி முக்காடிட்டு திரிந்தீர்கள். டவுன் ஹால் சம்பவத்தை ஞாபகத்தில் வைத்து மனதை நேர்மையான வழியில் நடாத்திச் செல்லுங்கள். உங்களின் சாயம் வெளுத்து விட்டபின்னும் கெட்டிச்சாயந்தான் என்று கூறித்திரிந்தால் அதை அறிவுடையோர்களெவரேனும் அங்கீகரிப்பரா? ஆகவே இன்னமும் உலகத்தை ஏமாற்றிவிடலாமென்று நம்பிக்கொண்டிருக்கும் தாவூதியாக்களாகிய

1. மௌலானா பட்டம் தரித்துள்ள பா. தா அவர்களே

2. மௌலவி பட்டம்பெற்ற ஹா. பா அவர்களே!

3. வசைமொழி புரிய வக்காலத்து வாங்கியிருக்கும் தாவூதிய குஞ்சுகளே!

இதன்கீழ்வரையப்படும் வினாக்களுக்கு சரியான விடைபகர்வீர்களாக

(வினா)

1. ஈமான்கொள்ளும் விதமென்ன? இஸ்லாமார்க்கத்தின் கருத்தென்ன இஸ்லாமாகுவதெதற்கு?

2. சுன்னத் வல்ஜமாஅத்தினர் என்று யாரைக்கூறுவது, நபீ பெருமானார் (ஸல்) அவர்கள் அருளிய அமிர்த வாக்கியங்களை மீறி நடப்பவன் யார்?

3. உங்களுடைய மத்ஹபு யாது இமாம் யார்?

4. குர்ஆன் ஷரீப் முழுதும் நம் புத்திக்கு மட்டுப்பட்டதா அல்லது சில நம் புத்திக்கு புலனாகாமலிருக்கலாமா?

5. பகுத்தறிவு என்பதென்ன ?

6. ஒவ்வொருவருக்கும் பூர்த்தியானபகுத்தறிவு உண்டா ?

7. யாவரின் பகுத்தறிவும் ஒன்றுபோலிருக்குமா ?

8. எல்லா காலத்தவரின் பகுத்தறிவும் ஒன்றுபோலவே இருக்குமா ?

9. இக்காலத்தவரில்ஒரு சிலரின் பகுத்தறிவின்படியேதான் வேதவியாக்கியானங்களை விகர்பித்துக்கொள்ளல் அவசியமா ?

10. அவ்வாறுயின் அடுத்ததலைமுறையார் அவர்கள் பகுத்தறிவுக்கேற்றவாறும், இவ்வாறே ஒவ்வொரு தலைமுறையாரும் தங்கள் தங்கள் பகுத்தறிவுக்கேற்றவாறும் தப்பருத்தம்செய்து கொள்வது தகுதியா ?

11. சத்தியதிருமறை போதகர் நபிய்யகரீம் (ஸல்) அவர்கள் பூதஜடலத்துடன் மிஃறுஜுக்கு சென்றனர்களா ? இல்லையா.

12. செய்யிதுனு ஈஸா (அலை) அவர்கள் பூததேகத்துடன் வானுலகில் ஜீவித்திருக்கிறார்களா ? இல்லையா.

13. செய்யிதுனு ஈஸா (அலை) அவர்கள் காஷ்மீருக்குவந்து தம்முடைய 120-வது வயதில் மரணமடைந்து அங்கேயே அடக்கமாகி, சமாதிகட்டிடமும் அவ்விடமே இருப்பதாக தங்களின் குருமார்களால் எழுதி வைக்கப்பட்டிருப்பதை தாங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா ? இல்லையா ?

14. அது சம்மந்தமாக எழுதப்பட்ட உர்தூ ரிஸாலாவை மொழிபெயர்த்து இயேசுவின் இரகசியமென்னும் பெயரிட்டு வெளிப்படுத்திய அருமை சிஷ்யர் யார் என்பதை வெளிப்படுத்த முடியுமா ?

15. பிற்காலத்தில் தஜ்ஜால் என்றொருவன் வெளிப்படுவது உண்டா ? இல்லையா?

16. தஜ்ஜாலின் அட்டூழியம் அதிகரித்து இஸ்லாத்திற்கு இடையூறு யேற்படும் சமயம் ஈஸா (அலை) அவர்கள் வானத்திலிருந்து இப்பூவுலகிலிறங்குவதுண்டா ? இல்லையா.

17. நரகம் முழுவதுக்கும் முடிவு உண்டா?

18. நரகம், சுவர்க்கம் என்பது யாது அதின் அமைப்பு எவ்வாறு அவைகளில் மனிதர் தங்குவதுண்டா ?

19. அன்பியாக்கள், அவ்லியாக்கள், ஒலிமார்கள், குத்துபுமார்கள் ஸாலிஹீன்கள் ஷுஹதாக்கள் முதலியோர் சமாதியாயிருக்கும் யிடத்திற்குப்போய் ஜியாரத்துசெய்வதும் சலாம் சொல்வதும் ஆகுமா ? தானதருமம் முதலிய நற்காரியங்களைச் செய்யின் அதன் நன்மையை ஆண்டவன் அவர்களுக்களிப்பானு ?

20. மறித்தவர்களை கப்ரில் அடக்கியபின் எழுப்பிக் கேழ்க்கப்படுகிறதா? இல்லையா.

21. வேதபாஷையின் அவசியமில்லாது எல்லாம் தாய் பாஷையிலேயே சமைத்துக்கொள்ளல் வேண்டுமா ?

22. பெண்கள் கோஷா இல்லாது வெளிச் செல்லலாமா ?

23. புத்துணர்ச்சி புனருத்தாரணம் என்பதென்ன ?

24. இக்காலத்திற் கவசியமெனத் தோன்றுவது மத விரோதமெனினும் அதை அனுசரித்தல் அவசியமா ?

25. சிறு சிறு அபிப்பிராய பேதமெனினும் இஸ்லாத்திற்கேற்காத வைகளை ஆதரிக்க வேண்டுமா ?

26. இறுதி நபிக்குப் பின், இன்னொரு நபியை உறுதிபடுத்த ஒருவரை நபியென்றும் மஸீஹ் என்றும் மஹ்தியென்றும் முஜத்தித் என்றும் சீர்திருத்தக்காரரென்றும் வாக்களிக்கப்பட்டவரென்றும் தூதர் என்றும் கூறுகிறவன் யார் ?

27. ராமர் கிருஷ்ணர் இவர்களும் தீர்க்கதரிசிகளா ?

27. ஸ்ரீ கிருஷ்ணன் தீர்க்கதரிசி என்றும் நபீ என்றும் காஜா கமாலுத்தீன் தன் கிருஷ்ண அவ்தூர் என்னும் நூலில் கூறியிருப்பதின் விஷயமாக் தங்கள் அபிப்பிராயமென்ன ?

29. ஒவ்வொரு முஸ்லிமும் நமது நபிகள் திலகம் முஹம்மது(ஸல்.) மூஸா (அலை.) ஈஸா (அலை.) இவர்கள்மீது வைக்கும் பிரீதியைப் போல் கான்பூஷியஸ், கிருஷ்ணு, ஜர்தஷ்த், புத்தர் இவர்களுக்கும் மரியாதை வைப்பதுடன் நமது நபிமார்களின் திருநாமங்களைக் கேட்கும்பொழுது சொல்லும் சலவாத்தை போல் மேல்கண்ட கிருஷ்ணு முதலியவர்க்ளின் பெயரை கேட்கும்போது அப்பேர்ப்

பட்ட மரியாதையான சலவாத்தைச் சொல்லவேண்டுமா?

30. அயல் மதவாதிகளின் வினக்களுக்கு பதிலளிக்கும்போது நமது சுத்த சத்திய குர்ஆன் வாக்கியத்தைப் புறட்டி முரணான தப்பருத்தம் செய்தும், ஷரீஅத்தில் ஒப்புக்கொள்ளப்படாதவைகளைக் கொண்டும் விடை பகரலாமா?

31. தங்களால் மொழிபெயர்த்து வெளியிடப்படும் ஜவாஹிருல்புர்கான், ஹாபிஸ் பாக்கவி அவர் படித்த அறபி கிரந்தங்களினின்று மொழி பெயர்க்கின்றீர்களா? அன்றி லாஹூர் மௌலவி முஹம்மது அலீ, எம். ஏ., எல். எல்., பி. அவர்களின் ஆங்கில குர்ஆனை காப்பியடிக்கின்றீர்களா?

32. உங்களின் பத்திரிகையை ஆதரிப்பவர்களுக்கும், உலகமதபோத உத்தமர் என்ற நூலுக்கு நற்சாட்சி பத்திரம் கொடுத்தவர்களுக்கும், உங்கள் பத்திரிகையின் வாயிலாய் மனிததூஷனை புரிகின்றவர்களுக்கும் மௌ-லா-.நா........பட்டமா?

33. உங்களால் நடத்தப்படும் பத்திரிகைக்கு பா. தா. முதல் ஆசிரியராகவும் சிலகாலம் ஹா. பா. முதல் ஆசிரியராகவும் விளங்குவதற்கு காரணமென்ன?

ஏ! தாவூதிய்யாக்களே!! கிறிஸ்தவ நண்பர்கள் யோவான், மத்தேயு, மாற்கு, லூக்கா, இந்நான்கு பெயரால் வரையப்பட்டுள்ள கட்டுக்கதைகளை வேதமென்றெண்ணி பிரசாரம் புரிந்து வருவதேபோன்று தாவூதியாக்களாகிய நீங்கள் மிர்ஸா ஸாஹிபால் வரையப்பட்ட நாவல்களை வேதமென்றெண்ணாது மேல்காட்டிய 33 வினவுக்கும் உண்மையும் உறுதியுமுள்ள சரியான விடை கழறுவீர்களாயின் அதைக்கொண்டு உங்களின் மதக் கோட்பாடுகளை பரிசீலனை செய்து சாதாரண மக்களின் சந்தேகம் நிவாரணையாகக் கூடியதாயிருப்பதால் "இப்னு தைமிய்யா" தன் தாவீ போலொற்ற வழி சருக்கியவர்களின் பேச்சைக்கொண்டு ஆதாரங் காட்டாது உண்மையான வழியைக்கொண்டு தாமதியாது விடை பகர்வீர்களாக.

மிஃராஜ் ஷரீப்.

நமது உலகரெட்சகர் நபிகள் திலகம் முஹம்மத் முஸ்தபா றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிகழ்வுற்ற பற்பல அற்புதங்களில் அவர்கள் (மிஃராஜ்) விண்ணுலக யாத்திரை சென்று வந்த சம்பவமும் ஓர் மாபெரும் அற்புதமாகும். நம் முஸ்லிம் பெரியார்களில் பெரும்பாலோர் (ஒரு சிலரைத்தவிர) நபிபெமானார் அவர்கள் தங்களுடைய திவ்ய ஸ்தூலத்துடனேயே மிஃராஜ் வைபவத்தை நிறைவேற்றினார்கள் என்று கூறுகின்றனர். திருக்குர்ஆன் ஷரீபில் மிஃறாஜ் சம்மந்தமாகக் கூறப்பட்டிருக்கும் வாக்கியங்களில் முதலாவதாக ஆண்டவன் கூறி இருப்பதாவது: "தனது மகிமைகளில் சிலவற்றை காண்பிப்பான் வேண்டி ஓரிரவு தனது அடியாரை (மஸ்ஜிதெ ஹறாம்) கஃபதுல்லாவிலிருந்து பற்பல பாக்கியங்களால் சூழப்பட்டுள்ள (மஸ்ஜிதெ அக்ஸா) பைத்துல் முகத்தஸுக்கு அழைத்துச்சென்ற இறைவன் மிக பரிசுத்தமுள்ளவனாக இருக்கிறான். சந்தேகமில்லாமல் அவன் பார்க்கக்கூடியவனாகவும் கேழ்க்கக்கூடியவனாகவும் இருக்கிறான்"

நாயகம் (ஸல்.) அவர்கட்கு மிஃராஜ் ஏற்படும்போது அவர்கள் 51-வயது, 8-மாதம், 20-நாள் பிராயமுடையவர்களாய் இருந்தார்கள். றஜப் மாதம் 27உ திங்கள் கிழமை இரவில் (இத்தெய்தியில் பலவாரான அபிப்பிராயபேதமிருந்து வருகிறது.) நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் உம்முஹானி அவர்களுடைய இல்லத்தில் நித்திரை செய்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் இறைவனின் கட்டளைப்பிரகாரம் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என்னும் வானவர் அழகிய உருவத்தினையும் வெள்ளை நிறத்தையுமுடைய 'புறுக்' என்ற ஒருவகை வாகனத்தை நாயகம் (ஸல்.) அவர்கள் இருந்த வீட்டின் வாசற்படியில் கொண்டுவந்து நிறுத்தி வி

வும் மரியாதையாக நாயகம் (ஸல்.) அவர்களை எழுப்பினார்கள். உடனே அவர்கள் எழுந்து அங்குமிங்கும் பார்த்தபோது யாரையுங் காணாததால் கண்களை மூடிக்கொண்டு மறுபடியும் துயில் புரிந்தார்கள். இரண்டாவது முறையும் அங்ஙனமே நிகழ்ந்தது. மூன்றாம் முறை ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களைத் தட்டி எழுப்பி "ஹாதைம்" என்னும் தலத்திற்கு அழைத்துவந்து அவர்களினது நெஞ்சினைப் பிளந்து ஹிருதயத்தினை எடுத்து ஒரு பொற்கிண்ணத்திலுள்ள 'ஜம்ஜம்' என்னும் தண்ணீரால் கழுவி ஈமான், புத்தி, தஜல்லியாத் (ஒளி) ஆகியவைகளால் அதை நிரப்பி மறுபடியும் வைத்துவிட்டார்கள். பிறகு நாயகம் (ஸல்.) அவர்களிடத்தில், விண்ணுலகில் யாத்திரை செய்து அங்குள்ள அதிசயங்களைக் கண்டு வருவதற்கு 'புருக்' தயாராய் இருப்பதால் எழுந்தருளுமாறு வேண்டிக் கொண்டார்கள். இதனைச் செவியுற்ற நாயகம் (ஸல்.) அவர்கள் மகிழ்வுடன் புருக்கின் மேல் அணிபெற வீற்றிருந்து கஃபதுல்லா பள்ளிவாசலினின்று பிரயாணமாகி மதீனமா நகரிலுள்ள ஈத்தஞ்சோலைகளின் வழியாக "தூர்சீனா என்ற மலையினைத்தாண்டி 'பைத்துல்லஹம்' என்பதையும் தெரிசித்துக் கொண்டு திருமிகு பைத்துல் முகத்தஸ் வந்து சேர்ந்தார்கள். அங்கு மற்ற அன்பியா அலைஹிமுஸ்ஸலாம் அனைவோரும் இமாம் ஜமாஅத்துடன் தொழுதுகொள்வதற்காக ரஸூலுல்லாஹ்வின் வருகையை எதிர்பார்த்திருந்தார்கள்.

பிறகு பாங்கு கூறப்பட்டது எல்லோரும் "ஒளு" செய்துக்கொண்டார்கள். தொழுவதற்காக ரஸூலுல்லாவை இமாமாகத் தெரிந்தெடுக்கப்பட்டது. அன்பியாக்களும் மலக்குகளும் பின்றொடர்ந்து தொழுதார்கள். தொழுது முடிந்தபின்னர், புருக்கின்மீது சவாரியாகி விண்ணுலக யாத்திரையை ஆரம்பித்தார்கள். செல்லும் வழியில் பற்பல ஸ்தலங்களிலும் அன்பியாக்களைச் சந்தித்து முகமன் கூறினவர்களாக விடைபெற்றுக் கொண்டு "சித்றத்துல் முன்தஹா" வந்து சேர்ந்தார்கள். இங்கும் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பார்த்து "இனிமேல் கால் வைப்பதற்கு தங்களையன்றி வேறு யாரும் சக்திபெற மாட்டார்' எனக்கூறி விடைபெற்று, நாயகம் (ஸல்.) அவர்களின் திருச்சமுகம் விட்டுப் பிரிந்தார்கள். அதன்பின் வெவ்வேறு வானவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களை அங்கிருந்து அழைத்துச் சென்றார்கள். கொஞ்சதூரம் சென்றதும் புருக்கின் வேலையும் முடிவுபெற்று விட்டதால் இப்போது அவர்களைக் கூட்டிச் செல்வதற்கு யாதொரு வாகனமுமில்லை. அவர்கள் கண்ணிற்கு முன்பாக மலக்குகளும் காணப்படவில்லை. அது சமத்தில் அவர்கட்கு மிக்க திகிலும் வருத்தமும் உண்டாயிற்று! உடனே ஆண்டவன் புறத்திலிருந்து "ஓ முஹம்மதே அருகில்வாரும்" என்பதாக சப்தம் உண்டானதைக் கேட்டு முன்னேறிச் சென்றார்கள். பிறகு ஆண்டவனின் காட்சியினைக் கண்டு சிறப்பெய்தார்கள். அங்கு சில இரகசிய சம்பாஷணைகளும் நடைபெற்றன.

இறைவனுடன் நாயகம் (ஸல்.) அவர்கள் வசனித்துக்கொண்டிருக்கும் போழ்து ஆண்டவன் அவர்களின் உம்மத்துகளின்மீது 50 வேளைத் தொழுகையைக் கடமையாக்கினதாய் தெரிவித்தான். பின்னர் "றப்றபின்" மீது வீற்று விண்ணுலகிலுள்ள அருஷ், குருஸ், லவ்ஹ், கலம், சுவர்க்கம், நரகம் ஆகிய யாவற்றினையும் சுற்றுப்பிரயாணத்தில் பார்வை செய்து முடிந்ததும் உலகிற்குத் திரும்பினார்கள். வரும் வழியில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் சந்திப்பு உண்டாயிற்று. ரஸூலுல்லாஹ் (ஸல்.) இடம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "ஆண்டவன் தங்களுடைய உம்மத்துகளுக்கு எத்தனை வேளைத் தொழுகை விதித்தான்" என வினவியதற்கு "ஒரு நாளைக்கு 50 நேரம் என்று பதில் கூறினார்கள். உடனே மூஸா (அலை.) அவர்கள் கூறியதாவது பலத்தால் கம்மியாகிய தங்களுடைய உம்மத்தோர்கள் தினமும் 50 வேளைத் தொழுகையை நிறைவேற்றுவதற்கு சக்திபெறமாட்டார்கள் என்பதை யான் என் அனுபவத்தில் கண்டறிந்துளேன் ஆகவே தாங்கள் மறுபடியும் இறைவன் சமுகஞ் சென்று அதனை இன்னும் குறைக்கும்படியாக சிபாரிஷ் செய்யுங்கள்". பிறகு ஆண்டவனது சன்னிதானஞ் சென்று அவர்கள் மன்றாடினதற் கிணங்க 10 குறைக்கப்பட்டது. இவ்வாறு போய்வந்ததில் பத்து பத்தாகக் குறைக்கப்பட்டு கடாசியாக ஐந்து

நேரத் தொழுகையின் கடமை ஏற்பட்டது. நாயகம் (ஸல்.) அவர்கள் அதை சந்தோஷமுற்றவர்களாய் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு இவ்வுலகத்திற்கு விஜயஞ்செய்தார்கள். மக்கமா நகரிலுள்ள தங்களின் படுக்கையறையில் வந்து பார்த்தபோது படுக்கை சூடாகவும் கதவிலுள்ள தாட்பாள்சங்கிலி ஆடிக்கொண்டும் இருப்பதைக் கண்டார்கள்.

அதிகாலையில் நாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் மிஃராஜ் சென்றுவந்த விஷயத்தை மனிதர்களிடம் கூறினார்கள். அதுபோது காபிர்கள் எல்லோரும் சிரித்து பரிகாசஞ்செய்தவர்களாக அபூபகர் சித்தீக் (ரலி) அவர்களிடஞ் சென்று "உங்கள் தோழர் இன்று புதிதாக ஓர் விஷயத்தை உண்டுபண்ணிக் கூறுவதைக் கேள்விபட்டீர்களா? அவர் இரவு பைத்துல் முகத்ஸில் இருந்ததாகவும், அங்கிருந்து வானுலகில் யாத்திரைசெய்து வந்ததாகவும் விழித்திருக்கும் நிலைமையிலேயே ஒரு விநாடிக்குள்ளாக சுவர்க்கம், நரகம் முதலிய யாவற்றினையும் பார்த்துவிட்டு வந்ததாகவும் கூறுகின்றாரே அது உண்மைதானா? என்று வினவினார்கள். அதற்கவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆண்டவனால் அனுப்பப்பட்ட உண்மைத் திருத்தூதராய் இருப்பதால் அவர்கள் சொல்வனயாவும் உண்மையாகவே இருக்கும்" என்று பதில் கூறினார்கள். அன்று முதல் அவர்கட்கு 'சித்தீக்' என்ற பட்டம் வழங்கலாயிற்று. குறைஷிக் கோத்திரத்தார்களில் அநேகர் பைத்துல் முகத்தஸை நேரில் கண்டு வந்தவர்களாய் இருந்தனர். ஆகவே அவர்கள் எல்லோரும் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் சேகரமாய் பைத்துல் முகத்தஸின் அடையாளங்களைக் குறித்து பற்பல வினாக்கள் கேட்டனர். அவற்றிற்கெல்லாம் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்றும் தப்பில்லாமல் சரியான விடையிறுத்தார்கள். சில விஷயங்களுக்கு பதில் கூற அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டதால் இறைவன் பைத்துல் முகத்தஸை அவர்கள் கண்முன் தோன்றச் செய்தான். அதன் உதவியால் எல்லாக் கேள்விகளுக்கும் தெளிவானபதில் கூறினார்கள்.

இவ்வண்ணம் நாயகம் (ஸல்) அவர்கள் பைத்துல் முகத்தஸின் அடையாளங்களில் ஒன்றையுங்கூட விடாமற் சொன்னதைக் கேட்ட குறைஷிக்காபிர்கள் மிக்க ஆச்சரியமடைந்தவர்களாய் மேலும் வினாக்கள் கேட்கலாயினர். குறைஷியர்களில் ஒரு கூட்டத்தார் ஷாம்தேசத்து வழியில் இருப்பதால் அவர்களில் யாரையாவது பார்த்தீர்களா வென்றும் கேட்டனர். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "ஆம், யான் அன்னோரை வழியில் சந்தித்துளேன். அவர்களுக்குச் சொந்தமான ஒட்டகங்களிலொன்று களவு போய்விட்டது; அதனைத் தேடித் திரிந்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கி இருந்த இடத்தில் ஒரு கோப்பை நிறையத் தண்ணீர் இருந்ததை யான் எடுத்து அருந்தியுளேன். அன்னோர் வந்தால் ஒட்டகம் காணாமற்போனது மெய்தானா வென்றும், பாத்திரம் வெறுமையாய் இருந்ததா வென்றும் கேட்டுத்தெரிந்து கொள்ளுங்கள். இவையன்றி இன்னுமோர் அடையாளங் கூறுகின்றேன். அதாவது இருவர் ஒரு ஒட்டகத்தின் மீது சவாரிபோய்க்கொண்டிருந்தனர். யான் சவாரிசெய்த புறாக் சமீபம் வரவே அவ் ஒட்டகம்வெருண்டு அதனால் ஒருவர்கீழேவிழுந்தார். அதனால் அவர் கையில் காயம் ஏற்பட்டது." என்று கூறினார்கள். மறுபடியும் அவர்கள் கேட்டதாவது:—"எங்கள் கூட்டத்தினரை எந்த இடத்தில் கண்டீர்கள். அவர்கள் எப்போது மக்கமா நகர் வந்து சேருவர்..." அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "யான் அவர்களை 'தன்யீம்' என்னுமிடத்தில் கண்டேன். நாளைக் காலை சூரியோதத்தில் இந்நகர் வந்து சேர்வார்கள்" என்று பதில் கூறினார்கள்.

இவைகளைக்கேட்ட குறைஷியர்கள் அக்கூட்டத்தார் வந்து சேர்வதை எதிர் பார்த்திருந்தனர். மறுநாள் காலை சூரியோதயமாகுந்தருணத்தில் அவர்கள் வந்து சேர்ந்தனர். அவ்வாறு வந்தவர்களிடம் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிய சமாசாரங்களைக் குறித்து விசாரித்ததில் எல்லாம் மெய் என்று வெளியாயிற்று.

இச் சம்பவங்களைக் கண்ணாரப்பார்த்தும் காதாரக் கேட்டுமுள்ள குறைஷிக்காபிர்கள் இன்னதுதான் செய்வதெனத் தோன்றாதவர்களாய் பொறாமையின் மிகுதியால் கவலைக்குள்ளாகி இருந்தனர். உலகில் காணப்படும் கவலைகள் அனைத்தும் அவர்கள் தலையில் வந்து குவிந்ததுபோல் காணப்பட்டார்கள். எனினும், கண் கண்ட சாட்சியங்களால்

நாயகம் (ஸல்.) அவர்களின் மிஃராஜ் நிரூபிக்கப்பட்டுப்போயினும் அதன்மீது நம்பிக்கை கொள்ளாதிருந்த அன்னோரின் மடத்தனத்தின் மீது வியப்பு உண்டாகாமல் இருக்க முடியாது. இவ்வாறு கண்ணாரக் கண்டவைகளை ஒப்புக்கொள்ளாது, இஃது சூனியமே யன்றி வேறொன்றல்ல என அக்காபிர்கள் கூறினார்களே யொழிய அவர்களுக்கு வேறொன்றுங் கூறுவதற்கு நாவெழவில்லை. இதே வழக்கம் இக்காலத்திலும் சில கூட்டத்தாரிடத்து காணப்படாமலில்லை. சுய நலத்தின் காரணமாகவோ அன்றி வேறு எதற்காகவோ இன்னோர் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் மிஃராஜ் சென்று வந்த சரிதையை நம்பாமலிருப்பது மதியீனமேயாகும். நாயகம் (ஸல்.) அவர்களால் நிகழ்வுற்ற இதர அற்புதங்கள் விஷயமாக வெல்லாம் வீண்தர்க்கம் செய்கின்றனர். ஆனால் ஆண்டவனுக்கு எந்தக் காரியமும் செய்யவல்ல பூர்ண தத்துவம் உண்டு என்பதிலும், நாயகம் (ஸல்.) அவர்களின் பதவியும், சக்தியும் அளவு கடந்துளது என்பதிலும் இவர்களுக்கு இன்னும் ஏன் உணர்வு ஏற்படவில்லை என்பது தான் எமக்கு விளங்கவில்லை.

ஒரு மனித சரீரத்தை விண்ணுலகில் யாத்திரை செய்யுமாறு இறைவன் அழைப்பது புத்திக்கும் பகுத்தறிவிற்கும் பொருத்தமாயில்லை என்னும் காரணத்தால் இன்னோர் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் விண்ணேற்றம் ஸ்தூலத்துடன் நிகழவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் ஸ்தூலத்துடன் தான் நடைபெற்றது என்பதற்கு எத்தனையோ ஆதாரங்களும் உதாரணங்களும் எடுத்துக் காட்டலாம்.

"சுப்ஹானல்லதீ அஸ்ரா பிஅப்திஹீ லைலா" "பஅவ்ஹா இலா அப்திஹீ மாஅவ்ஹா" என்ற இரு குர்ஆன் ஆயத்துக்களிலுமுள்ள அடிமை என்னும் பொருள்கொண்ட "அப்த்" என்ற வார்த்தை ஆத்மாவும் உடலும் சேர்ந்த பொருளினையே குறித்து நிற்கும். அவ்வார்த்தை ஆத்மாவை மட்டும் குறிக்காது. குர்ஆன் மஜீதில் எவ்விடங்களிலெல்லாம் இவ்வார்த்தை வருகிறதோ அங்கெல்லாம் அதன் பொருள் உடலோடுகூடிய ஆத்மாவைத்தான் குறித்து நிற்கின்றது. இறைவன் எந்த செய்கையின்மீதும் சக்தியுள்ளவன். அவனால் முடியாதகாரியம் ஒன்றுமில்லை. இறைவன் தானே குர்ஆன் மஜீதில் "அவன் ஒரு வஸ்துவை "ஆகுக" என்று கட்டளையிட்டால் உடனே ஆகிவிடுகிறது." என்று கூறியுள்ளான். அந்திய காலத்திலிருந்த ஜகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தம்முடைய விருத்தாப்பிய தசையிலிருந்த பாரியாளிடத்து வழக்கத்திற்கு விரோதமாக எந்த ஆண்டவன் குழந்தை பிறக்கச் செய்தானோ, இன்னும் மரியம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலம் உலுல் அஜ்ம்களாகிய நபிமார்களில் ஒருவரை உற்பத்தி செய்தானோ அந்த இறைவனுக்கு தனது தோழராகிய முஹம்மது (ஸல்.) அவர்களை திவ்விய ஸ்தூலத்துடன் மிஃராஜ் வைபவத்திற்கு அழைத்துக்கொள்ள முடியும். ஆதலின் மாபெரும் சக்தியினையுடைய அல்லாஹ் (ஜல்.)வின் அபாரசக்தியில் நன்கு நோட்டமிட்டுப் பாராதவர்தாம் மிஃரூஜ் வைபவத்தில் சந்தேகங்கொள்வர் என்பது நிச்சயமாய்விட்டது.

ஆசிரியர் குறிப்பு.

ஹஜ்ஜுல் அக்பர்:—சக்திபெற்ற முஸ்லிமாகிய ஆண் பெண் யாவர்மீதும் பரிசுத்த ஹஜ்ஜை கடமையாக்கி யிருக்கிறான். ஆதலின் அவ்வாறுள்ளவர் எவ்வகையிலும் ஹஜ்ஜை நிறைவேற்றாதிருக்க முடியாதென்பது திண்ணம். அதிர்ஷ்டவசமாக இவ்வருஷத்தில் ஹஜ்ஜுல் அக்பர் (அதாவது அரபாவின் நாளாகிய துல்ஹஜ்ஜு மீ தின் 9-ம் நாள் வெள்ளிக்கிழமை) ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இஃதொரு மாபெரும் பாக்கியமேயாகும். ஆதலின் இவ்வாண்டில் ஹஜ்ஜுக்குச் செல்வோர் பெரும் பாக்கியசாலிகளென்றே கருதவேண்டும். இவ்வாறு ஏற்படுவது மிக உத்தமமானதா யிருப்பதற்கு பற்பல

காரணங்கள் கூறப்பட்டிருக்கிறது. (1) மிக மேலான இரு விசேஷங்களான அறபாவும் வெள்ளிக்கிழமையும் ஒரே தினத்தில் ஏற்படுவது. (2) அடியான் வேண்டி நிற்பவைகள் ஆண்டவனிடம் ஒப்புக்கொள்ளப்படுவதற்கு தனிக்குறிப்பிட்ட ஒரு நேரம் வெள்ளிக்கிழமையதினத்தில் ஏற்பட்டிருப்பது,அசருக்குப் பின்னுண்டான நேரத்திலிருப்பதாக மேதாவிகளால் கூறப்படுவதால் அந்த நேரத்தில் அறபா மைதானததில் கூடியிருப்போர் தங்கள் தவறுகளை நினைந்து வருந்தி தங்கள் நாட்டங்களை ஆண்டவனிடம் கேள்க்கும் நேரத்துடன் ஒற்றயைந்து விடுவதால் மானிடனின் நாட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கும் அவைகள் ஒப்புக்கொள்ளப் படுவதற்குமுள்ள முழுநம்பிக்கை யிருக்கிறது. (3) நாயகம் (ஸல்.) அவர்கள் அரபா மைதானத்தில் தரிப்பட்டிருந்த நாளுக் கொற்றிருப்பது (4) உலகின் நானு பாகங்களிலுமுள்ளோர் குத்பாவைக் கேள்பதற்கும், ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றுவதற்கும் ஒன்று சேரும் பாக்கியம் உண்டாயிருப்பது. (5) ஜும்ஆ நாளானது விசேஷ தினமாகும் அரபாநாளோ ஆங்கு கூடுகிறவர்கட்கு விசேஷதினமாகும். ஆதலால் ஒரேதினத்தில் இரு விசேஷங்களும் ஒருங்கே அமைவதற்குள்ள ஹேது ஏற்பட்டு விடுவது. (6) ஆண்டவன் தன் அடியார்க்கு மார்க்கத்தை சம்பூர்ணமாக்கித்தந்த நாளுக்கொத்த நாளாக்யிருப்பதும். இன்னும் இவைபோன்ற அநேக நற்பாக்கியங்கள் ஒருங்கே அமையப் பெற்றிருப்பதுகொண்டு இஃது மிக மகத்தான தனிச்சிரப்புடைய நாளாகத் திகழ்கிறது. ஆதலின், நஞ் சகோதரர்கள் இவ்வாறு ஏற்படுவதை மாபெரும் பாக்கியமெனக் கருதி இப்புண்ணிய சேவையிலீடுபட்டுத் தங்கள்மீதுள்ள கடமையை நிறைவேற்ற முற்படுவார்களென எதிர்பார்க்கின்றோம். இவ்வருஷம் ஹஜ்ஜுக்குச் செல்வோர்களின் சவுகரியத்திற்காக இண்டோ—சைனு மெயில் கப்பலை ஜித்தா துறைமுகத்தில் பிடிக்கும்படியும் சென்னை, பாண்டுசேரி இவ்விரண்டிடங்களிலும் பாஸன்ஜர்கள் பிரயாணமாவதற்கு வசதி செய்துகொடுக்கும்படியும் கேட்டு மெஸின்ஜரிஸ் மேரிடைம்ஸ் கப்பல் கம்பெனியாருடன் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. இது விஷயமாக தென்னிந்திய முஸ்லிம் லீக்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள தீர்மானித்திருப்பதால் அக்காரியமும் கூடியசீக்கிரம் வெற்றிபெறுமென எதிர் பார்க்கின்றோம்.

சிலோன் நேயர்கட்கு

நம் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் ஏற்பட்டு இஸ்லாமிய தோண்டாற்றி வருவது யாவருமறிந்த விஷயமே. இச் சங்கத்தின் சார்பாக நடைபெற்றுவரும் அரும் மாசிகையாம் "ஹிபாஜத்துல் இஸ்லா" மானது மாபெரும் கட்டுரைகளுடன் வெளிவந்துலவுதன்றி காதியானி அஹ்மதியாக்கள் கூறித் திறியும் அநேக மார்க்கப் புறட்டையும் வழிகேடான கொள்கைகளையும் அப்போதைக்கப்போது பொது ஜனங்கள்பால் எடுத்துக் காண்பித்து அதைவிட்டுத் தவிழ்ந்து நடக்குமாறு தூண்டி மார்க்க சேவைபுரிந்து வருவது நன்கு தெரிந்ததே. ஆதலின் இவ்வரும் மாசிகையை ஆதரித்து அபிவிர்த்திக்குக் கோண்டு வருவது உங்கள் கடமையல்லவா? நம் சங்க நோக்கங்களை நல்ல முறையில் எடுத்துக் காண்பிக்கவும் மாசிகையின் அபிவிர்த்தியைக் கருதி அதற்காக சந்தா சேகரிக்கவும் சங்க சார்பாக வேலூர் மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் சிலோன் வந்திருக்கின்றார்கள். அவர்கள் இது பொழுது கொளும்பிலிருக்கின்றார்கள் ஆங்குள்ள நண்பர்கள் யாவரும் அவர்களை ஆதரித்து சகலரும் சந்தாதாரராக சேர்ந்து நம் மார்க்க சமுக தோண்டாற்றி வரும் அரும் மாசிகைக்கு தக்க உதவி புரிவார்களாக. ஜனப் மௌலவீ சாஹிப் அவர்கள் கூடியசீக்கிரம் சிலோனின் மற்றப் பகுதிகளுக்கும் விஜயஞ் செய்வார்களாதலால் ஆங்காங்குள்ள நண்பர்கள் யாவரும் தக்க ஆதரவளித்து அரும் மாசிகையை அபிவிர்த்திக்குக் கோண்வேர தக்க முயர்ச்சி எடுத்துக் கோள்வார்களேன்று எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்,

காரியதரிசிகள், ஹி. இ. சங்கம்.

சந்தா நண்பர்களுக்கு

நம் அரும் மாசிகையின் இரண்டாம் ஆண்டு இதோடு முடிவடைந்துவிடுகிறபடியால் இதுவரை சந்தா செலுத்தாமலிருக்கும் நண்பர்கள் தங்கள் சந்தாவை தாமதியாது அனுப்பிவைப்பார்களென்று நம்புகிறோம். தவிர அடுத்துவரும் 1932 ம் வருஷத்திற்குள்ள சந்தாவையும் முன்பணமாக அனுப்பி மாசிகையை அபிவிர்த்திக்குக் கொண்டுவருமாறு கோருகிறோம். இதுபொழுது ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணாவாக உயர்த்தப்பட்டிருப்பதால் வி. பி. அனுப்புவதானால் நேயர்களுக்கு 5 அணா வீண்சிலவு ஏற்படுகிறது. ஆதலின் நமது பழைய சந்தா நேயர்களும் புதிதாக சேரும் கனவான்களும் தங்கள் சந்தாத் துகையை மணியாடர் மூலம் அனுப்பிக் கொடுக்கும்படி கோருகிறோம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமா யிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாக யிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய,

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு & Co." அவர்களிடமும்,

பேரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானி லுள்ள ஜனாப் K. A. பகீர் முஹம்மத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்ட்ரீட் சுகரசம் & Co. தர்கா மஸ்ஜித்பேஷ் இமாம் மௌலவீ முஹம்மது யாகூப்சாஹிப்" அவர்களிடமும்,

கொளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் க்ராஸ் ஸ்ட்ரீட் டிலுள்ள மெஸ்ஸர்ஸ் A. M. K. ஆலிம் ஸாஹிப் அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் தொகையை செலுத்துமாறு கோருகின்றோம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

"மானேஜர்"

ஹிபாஜத்துல் இஸ்லாம்.

SCANNED

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லா சாஹிப் & Co,
77, மார்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

மெஸர்ஸ் **K. A.** பக்கீர் முஹம்மத் & Co.,
P. O. Box. 52.

பினங்

ஜனப் **V. O.** ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனப் மவ்லவீ முஹம்மத் யாகூப் சாஹிப்
சுகரசம் & Co, 385, மங்மாரி வீதி.

கொழும்பு

ஜனப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
220, **2nd** கிராஸ் ஸ்டிரீட், பெட்டா.

SCANNED

மதராஸ்

மெஸர்ஸ் **A. M. K.** ஹாஜீ முஹம்மது ஷரீப்,
மரைக்காயர் & பிரதர்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு.

ஜனப் மவ்லவீ **M.** ஸுல்தான் அஹ்மத் ஸாஹிபு
1/222, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A R Abdur Rahim Saheb
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.